www.nammakalvi.in

# 7

# 5-in-1

# தமிழ்

## TERM - I

# இயல் 1 கவிதைப் பேழை

# எங்கள் தமிழ்

**மனப்பாடப் பாடல்**

அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது

கொல்லா விரதம் குறியாகக்
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே

அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்

**நூல் : நாமக்கல் கவிஞர் பாடல்கள்**
**ஆசிரியர்: நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்**



| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் |
| இயற்பெயர் | : | இராமலிங்கனார் |
| சிறப்புப்பெயர் | : | நாமக்கல் கவிஞர், காந்தியக்கவிஞர் |
| சிறப்பு | : | தமிழறிஞர், கவிஞர், விடுதலைப்போராட்ட வீரர், தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர் |
| படைப்புகள் | : | மலைக்கள்ளன், நாமக்கல் கவிஞர் பாடல்கள், என்கதை, சங்கொலி |

**சொல்லும் பொருளும்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஊக்கிவிடும் | - | ஊக்கப்படுத்தும் | விரதம் | - | நோன்பு |
| குறி | - | குறிக்கோள் | பொழிகிற | - | தருகின்ற |
| நெறி | - | வழி | அருள் | - | இரக்கம் |
| பொருள் | - | செல்வம், நற்செயல் | அச்சம் | - | பயம் |
| அறம் | - | நற்செயல் | போக்கி | - | நீக்கி |

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **'நெறி' என்னும் சொல்லின் பொருள் ________.**
அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம் **[விடை: அ]**

2. **'குரலாகும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.**
அ) குரல் + யாகும் ஆ) குரல் + ஆகும்
இ) குர + லாகும் ஈ) குர + ஆகும் **[விடை: ஆ]**

3. **வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________.**
அ) வான்ஒலி ஆ) வானொலி
இ) வாவொலி ஈ) வானெலி **[விடை: ஆ]**

### நயம் அறிக

1. **'எங்கள் தமிழ்' பாடலில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | **அ**ருள்நெறி | **கொ**ல்லா | **எ**ல்லா |
| | **அ**துவே | **கொ**ள்கை | **எ**ன்றும் |

2. **'எங்கள் தமிழ்' பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | அ**ரு**ள் | கொ**ல்**லா | அ**ன்**பும் |
| | பொ**ரு**ள் | எ**ல்**லா | இ**ன்**பம் |

3. **'எங்கள் தமிழ்' பாடலில் இறுதி எழுத்து ஒன்று போல் வரும் இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | தர**லாகும்** | பு**கழாது** | ஊ**க்கிவிடும்** |
| | குர**லாகும்** | இ**கழாது** | போ**க்கிவிடும்** |

### குறு வினா

1. **தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?**
- ✍ நம் தாய்மொழி தமிழ், அருள் வழிகள் நிரம்பிய அறிவைத் தரும்.
- ✍ கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு, எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும் அறமும் உதவும்.
- ✍ நம் தமிழ்மொழி அனைவரிடமும் அன்பு மற்றும் அறத்தைத் தூண்டும். அஃது அச்சத்தைப் போக்கி இன்பம் தரும்.

2. **தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.**
- ✍ தமிழ்மொழியைக் கற்றோர், பொருள் (செல்வம்) பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்.
- ✍ தம்மைப் போற்றாதவரையும் இகழ்ந்து பேசமாட்டார்.

### சிறு வினா

**'எங்கள் தமிழ்' பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

✍ நம் தாய்மொழி தமிழ், அருள் வழிகள் நிரம்பிய அறிவைத் தருகின்றது. அதுவே தமிழ் மக்களின் குரலாகவும் விளங்குகிறது.

✍ தமிழ்மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார். தம்மைப் போற்றாதவரையும் இகழ்ந்து பேசமாட்டார்.

✍ கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு, எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும் அறமும் உதவும்.

✍ நம் தமிழ்மொழி அனைவரிடமும் அன்பு மற்றும் அறத்தைத் தூண்டும். அஃது அச்சத்தைப் போக்கி இன்பம் தரும். எங்கள் தமிழ்மொழி தேன் போன்ற மொழியாகும்.

### சிந்தனை வினா

**கவிஞர் தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?**

தேன் இனிமையானது; தூய்மையானது; சுவைமிக்கது; இன்பம் கொடுப்பது. அதைப் போல இனிமையானது, தூய்மையானது, சுவைமிக்கது, இன்பம் கொடுப்பது தமிழ். எனவே கவிஞர் தமிழைத் தேனுடன் ஒப்பிடுகிறார்.

## கூடுதல் வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. பொருத்துக.**

1. விரதம் - அ) வழி
2. நெறி - ஆ) நோன்பு
3. குறி - இ) தருகின்ற
4. பொழிகிற - ஈ) குறிக்கோள்

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ  ஆ) 1.இ 2.அ 3.ஈ 4.ஆ
இ) 1.ஆ 2.ஈ 3.ஆ 4.இ  ஈ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ  **[விடை : அ]**

**2. நாமக்கல் கவிஞர் என்றழைக்கப்படுபவர்**

அ) பாரதியார்  ஆ) பாரதிதாசன்
இ) வெ. இராமலிங்கனார்  ஈ) கவிமணி  **[விடை : இ]**

**3. காந்தியக் கவிஞர் என்றழைக்கப்படுபவர்**

அ) பாரதியார்  ஆ) பாரதிதாசன்
இ) வெ. இராமலிங்கனார்  ஈ) கவிமணி  **[விடை : இ]**

**4. நாமக்கல் கவிஞர் படைப்புகள் அல்லாத ஒன்று**

அ) மலைக்கள்ளன்  ஆ) என்கதை
இ) சங்கொலி  ஈ) காந்திபுராணம்  **[விடை : ஈ]**

5. **"அருள்நெறி அறிவைத் தரலாகும்**
**அதுவே தமிழன் குரலாகும்" என்று பாடியவர்**
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) வெ. இராமலிங்கனார் ஈ) கவிமணி [**விடை : இ**]

6. **"பொருள்பெற யாரையும் புகழாது**
**போற்றாதாரையும் இகழாது" - இவ்வடிகளில் அமைந்த முரண் சொற்கள்**
அ) பொருள் - போற்றா ஆ) யாரையம் - தாரையும்
இ) பொருள் - பெற ஈ) புகழாது - இகழாது [**விடை : ஈ**]

7. **"கொல்லா விரதம் குறியாகக்**
**கொள்கை பொய்யா நெறியாக" - இவ்வடிகளில் 'நோன்பு' என்னும் பொருள் தரும் சொல் எது?**
அ) கொல்லா ஆ) விரதம் இ) குறி ஈ) நெறி [**விடை : ஆ**]

8. **"கத்தியின்றி இரத்த மின்றி**
**யுத்தமொன்று வருகுது" - இவ்வடிகளைப் பாடியவர்**
அ) வெ. இராமலிங்கனார் ஆ) பாரதிதாசன்
இ) கவிமணி ஈ) பாரதியார் [**விடை : அ**]

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. தமிகத்தின் முதல் அரசவைக் கவிஞர்________ **விடை: கவிஞர் வெ. இராமலிங்கனார்**
2. உலகமொழிகளில் தொன்மையானது ________ **விடை: தமிழ்மொழி**
3. 'எங்கள் தமிழ்' என்னும் தலைப்பில் கவிதை இடம்பெறும் நூல் ________ **விடை: நாமக்கல் கவிஞர் பாடல்கள்**
4. மலைக் கள்ளன் , சங்கொலி , என் கதை என்னும் நூல்களை எழுதியவர் ________ **விடை: கவிஞர் வெ. இராமலிங்கனார்**
5. வெ.இராமலிங்கனாரை ________ என்றும் அழைப்பர். **விடை: நாமக்கல் கவிஞர்**
6. நம் அனைவரிடமும் அன்பு மற்றும் அறத்தைத் தூண்டும். **விடை: தமிழ்மொழி**
7. எங்கள் தமிழ்மொழி ________ போன்ற மொழியாகும். **விடை: தேன்**
8. விடுபட்ட சீர்களை நிரப்புக.
________அறிவைத் தரலாகும்.
அதுவே ________குரலாகும் **விடை: அருள்நெறி, தமிழன்**

**குறு வினா**

1. **நாமக்கல் கவிஞர், 'காந்தியக் கவிஞர்' என அழைக்கக் காரணம் யாது?**
காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுக் காந்தியத்தைப் பின்பற்றியதால் நாமக்கல் கவிஞர், 'காந்தியக் கவிஞர்' என அழைக்கப்படுகிறார்.
2. **நாமக்கல் கவிஞரின் பன்முகத் தன்மையினை எழுதுக.**
தமிழறிஞர், கவிஞர், விடுதலைப் போராட்ட வீரர்.

தமிழ்

**3. நாமக்கல் கவிஞரின் படைப்புகள் சிலவற்றைக் கூறுக.**

மலைக் கள்ளன், சங்கொலி, என் கதை, நாமக்கல் கவிஞர் பாடல்கள்.

### சிறு வினா

**1. தமிழின் சிறப்புகள் சிலவற்றை எழுதுக.**

- ✍ உலக மொழிகளில் தொன்மையானது தமிழ்மொழி.
- ✍ மென்மையும் இனிமையும் வளமையும் உடையது.
- ✍ வாழ்வுக்குத் தேவையான அன்பையும் அறத்தையும் கூறுவது.
- ✍ காலச்சூழலுக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்று, என்றும் இளமையோடு திகழ்கிறது.

**2. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் - குறிப்பு வரைக.**

- ✍ இயற்பெயர் : இராமலிங்கனார்
- ✍ சிறப்புப்பெயர்: நாமக்கல் கவிஞர், காந்தியக்கவிஞர்.
- ✍ சிறப்பு : தமிழறிஞர், கவிஞர், விடுதலைப்போராட்ட வீரர், தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர்.
- ✍ படைப்புகள் : மலைக்கள்ளன், நாமக்கல் கவிஞர் பாடல்கள், என்கதை, சங்கொலி

### கற்பவை கற்றபின்

**1. "எங்கள் தமிழ்" - பாடலை இசையுடன் பாடி மகிழ்க.**

அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது
கொல்லா விரதம் குறியாகக்
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே
அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்

**- நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்**

**2. பின்வரும் நாமக்கல் கவிஞர் பாடலைப் படித்துச் சுவைக்க.**

கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்த மொன்று வருகுது
சத்தி யத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர்!...(கத்தியின்றி...)

கண்ட தில்லை கேட்ட தில்லை
　　சண்டை யிந்த மாதிரி
பண்டு செய்த புண்ணி யந்தான்
　　பலித்த தேநாம் பார்த்திட!...(கத்தியின்றி...)

❖❁❖



## இயல் 1 கவிதைப் பேழை — ஒன்றல்ல இரண்டல்ல



| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | உடுமலை நாராயணகவி |
| இயற்பெயர் | : | நாராயணசாமி |
| காலம் | : | 25.9.1899 - 23.5.1981 |
| சிறப்புப்பெயர் | : | பகுத்தறிவுக் கவிராயர் |
| பணி | : | தமிழ்த்திரைப்படப் பாடலாசிரியர், நாடக எழுத்தாளர் |
| சிறப்புகள் | : | கலைமாமணி பட்டம், 31.12.2008 இல் இந்திய அஞ்சல் துறை இவரின் அஞ்சல் தலையை வெளியிட்டுள்ளது. உடுமலைப் பேட்டையில் சிலை மற்றும் மணிமண்டபத்தைத் தமிழக அரசு நிறுவியுள்ளது. |

### சொல்லும் பொருளும்

1. ஒப்புமை - இணை
2. அற்புதம் - வியப்பு
3. முகில் - மேகம்
4. உபகாரி - வள்ளல்
5. சொல்ல - கூற
6. தென்றல் - தெற்கிலிருந்து வீசும் காற்று
7. கவி - கவிஞன் (அ) புலவன்
8. அருள் - இரக்கம்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் ______.**

அ) கலம்பகம்　ஆ) பரிபாடல்　இ) பரணி　ஈ) அந்தாதி　[**விடை : இ**]

**2. வானில் ______ கூட்டம் திரண்டால் மழை பொழியும்.**

அ) அகில்　ஆ) முகில்　இ) துகில்　ஈ) துயில்　[**விடை : ஆ**]

**3. 'இரண்டல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.**

அ) இரண்டு + டல்ல　ஆ) இரண் + அல்ல
இ) இரண்டு + இல்ல　ஈ) இரண்டு + அல்ல　[**விடை : ஈ**]

4. **'தந்துதவும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.**
அ) தந்து + உதவும் ஆ) தா + உதவும்
இ) தந்து + தவும் ஈ) தந்த + உதவும் [விடை : அ]

5. **ஒப்புமை + இல்லாத என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______.**
அ) ஒப்புமைஇல்லாத ஆ) ஒப்பில்லாத
இ) ஒப்புமையில்லாத ஈ) ஒப்புஇல்லாத [விடை : இ]

### குறுவினா

1. **தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?**
   - தமிழ்நாட்டில் வீசும் தென்றலில் தேன் மணம் கமழும்.
   - சுவைமிகுந்த பழங்களும் தங்கம் போன்ற தானியக் கதிர்களும் விளையும்.
   - தமிழ்நாட்டின் நன்செய் நிலவளம் ஒன்றிரண்டல்ல பலவாகும்.

2. **'ஒன்றல்ல இரண்டல்ல' - பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.**
   - முல்லைக்குத் தேர் தந்த வள்ளல் வேள்பாரி.
   - புலவரின் சொல்லுக்குத் தன் தலையையே தரத் துணிந்தவன் குமண வள்ளல்.

### சிறுவினா

**தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?**
- பகைவரை வென்று பாடுவது பரணி இலக்கியம்.
- பரிபாடல், கலம்பக நூல்கள், எட்டுத்தொகை, திருக்குறள், சங்கஇலக்கியங்கள்
  - ஆகியன தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுகிறார்.

### சிந்தனை வினா

**தமிழில் அற இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றக் காரணம் என்ன?**
- சங்ககாலத்தின் இறுதிப்பகுதி ஆடம்பரமும் ஆரவாரமும் மிக்கது.
- கலை என்ற பெயரில் ஒழுக்கக்கேடுகள் தலைதூக்கின.
- தமிழகத்தின் அகப்புற ஒழுக்கங்கள் பாதுகாக்கப்படாமல் ஒதுக்கப்பட்டன.
- குழப்பமான அச்சூழலில் நீதியும் அறமும் தேவைப்பட்டது.
- எனவே, தமிழில் அறஇலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றின.

## கூடுதல் வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **பகைவரை வென்றதைப் பாடும் இலக்கியம்**
அ) பரிபாடல் ஆ) பரணி
இ) சங்கஇலக்கியங்கள் ஈ) திருக்குறள் [விடை : ஆ]

2. **பொருத்துக.**

1. பகைவரை வென்றதைப் பாடுவது - அ) பரிபாடல்
2. இசைப்பாடல் - ஆ) பரணி
3. வான்புகழ் கொண்டது - இ) சங்கஇலக்கியங்கள்
4. அகம், புறம் மெய்ப்பொருளாகக் கொண்டது - ஈ) திருக்குறள்

அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ [**விடை : அ**]

3. **பகுத்தறிவுக் கவிராயர் என்று புகழப்படுபவர்**

அ) பாரதியார் ஆ) கவிமணி
இ) சுரதா ஈ) உடுமலை நாராயணகவி [**விடை : ஈ**]

4. **தமது பாடல்கள் மூலம் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியவர்**

அ) பாரதியார் ஆ) கவிமணி
இ) சுரதா ஈ) உடுமலை நாராயணகவி [**விடை : ஈ**]

5. **தமிழ்த்திரைப்படப் பாடலாசிரியராகவும் நாடக எழுத்தாளராகவும் புகழ்பெற்ற கவிஞர்**

அ) பாரதியார் ஆ) கவிமணி
இ) சுரதா ஈ) உடுமலை நாராயணகவி [**விடை : ஈ**]

6. **முல்லைக்குத் தேர் தந்து புகழ்பெற்றவன் _______**

அ) வேள்பாரி ஆ) குமணன் இ) அதியமான் ஈ) பேகன் [**விடை : அ**]

7. **புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தரத் துணிந்தவன் _______**

அ) வேள்பாரி ஆ) குமணன் இ) அதியமான் ஈ) பேகன் [**விடை : ஆ**]

8. **இசைப்பாடல் இலக்கியம்**

அ) பரிபாடல் ஆ) பரணி
இ) சங்கஇலக்கியங்கள் ஈ) திருக்குறள் [**விடை : அ**]

9. **அகம், புறம் மெய்ப்பொருளாகக் கொண்ட இலக்கியம்**

அ) பரிபாடல் ஆ) பரணி
இ) சங்கஇலக்கியங்கள் ஈ) திருக்குறள் [**விடை : இ**]

10. **வான்புகழ் கொண்ட இலக்கியம்**

அ) பரிபாடல் ஆ) பரணி
இ) சங்கஇலக்கியங்கள் ஈ) திருக்குறள் [**விடை : ஈ**]

11. **தானியக் கதிருக்குக் கூறப்பட்ட உவமை**

அ) கனி ஆ) தென்றல் இ) பொன் ஈ) தேன் [**விடை : இ**]

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ஒன்றல்ல இரண்டல்ல பாடலின் ஆசிரியர் _______ **விடை : உடுமலை நாராயண கவி**
2. தமிழ்நாடு நிலவளமும் நீர்வளமும் மட்டுமின்றி _______ வளமும் _______ வளமும் நிரம்பியது. **விடை : பொருள், அருள்**

தமிழ்

3. தமிழக மன்னர்களும் வள்ளல்களும் _______ மிக்கவர்களாக விளங்கினர்.

விடை : கொடைத்திறன்

4. 'கவிச்சொல்லுக்கு' என்ற சொல்லில் 'கவி' என்பதன் பொருள் _______

விடை : புலவன்

5. முல்லைக்குத் தேர் கொடுத்தான் _______ விடை : வேள்பாரி

**குறு வினா**

1. **''வான்முகிலினும் புகழ்படைத்த உபகாரி'' என்ற பாடலடியில் இடம் பெறும் 'முகில்' 'உபகாரி' ஆகிய சொற்களின் பொருள் யாது?**

 1. முகில் - மேகம் 2. உபகாரி - வள்ளல்

2. **தமிழ்நாட்டிலுள்ள வளங்கள் யாவை?**

 1. நில வளம் 2. நீர் வளம் 3. பொருள் வளம் 4. அருள் வளம்

3. **தமிழ்மொழியிலுள்ள வளங்கள் யாவை?**

 1. இலக்கிய வளம் 2. இலக்கண வளம்

4. **தமிழகத்தில் கொடைத்திறன் மிக்கவர்களாகத் திகழ்ந்தவர்கள் யாவர்?**

 1. மன்னர்கள் 2. வள்ளல்கள்

5. **மழை மேகத்தை விடப் புகழ்பெற்றவன் யார்? அவன் செயல் யாது?**

✍ மழை மேகத்தை விடப் புகழ்பெற்றவன் : வள்ளல் வேள்பாரி.

✍ அவன் செயல் : முல்லைக் கொடி படர்வதற்குத் தன் விலை உயர்ந்த தேரைக் கொடுத்தல்.

6. **எங்குத் தேன் மணம் கமழும்?**

 தமிழகத்தில் வீசும் தென்றல் காற்றில் தேன் மணம் கமழும்.

7. **நன்செய் நிலம் என்றால் என்ன?**

 ஆற்றுநீர், குளத்துநீர், கிணற்றுநீர் ஆகிய நீர்வள ஆதாரங்களைக் கொண்டு ஓர் ஆண்டுக்கு மூன்று போகங்கள் வரை வேளாண்மை செய்யும் நிலத்தொகுதி நன்செய் நிலம் எனப்படுகின்றது.

8. **நன்செய் நிலப்பயிர்கள் யாவை?**

 நெல், வாழை, கரும்பு.

**சிறு வினா**

1. **உடுமலை நாராயண கவி - குறிப்பு வரைக.**

| | |
|---|---|
| இயற்பெயர் | : நாராயணசாமி |
| காலம் | : 25.9.1899 - 23.5.1981 |
| சிறப்புப்பெயர் | : பகுத்தறிவுக் கவிராயர் |
| பணி | : தமிழ்த்திரைப்படப் பாடலாசிரியர், நாடக எழுத்தாளர். |

சிறப்புகள் : கலைமாமணி பட்டம், 31.12.2008 இல் இந்திய அஞ்சல் துறை இவரின் அஞ்சல் தலையை வெளியிட்டுள்ளது. உடுமலைப் பேட்டையில் சிலை மற்றும் மணிமண்டபத்தைத் தமிழக அரசு நிறுவியுள்ளது.

### கற்பவை கற்றபின்

**1. தமிழுக்குக் கொடை கொடுத்த வள்ளல்கள் பற்றிய செய்திகளைத் திரட்டுக.**

1. தமிழ் இலக்கியங்கள் தோன்ற உதவிய வள்ளல்களைத் தமிழுக்குக் கொடை கொடுத்த வள்ளல்கள் எனலாம்.

- அதியன் (ஔவைக்கு உதவியவன்)
- யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை (ஐங்குறு நூறு தொகுப்பித்தவன்)
- பூரிக்கோ (குநற்தொகையைத் தொகுப்பித்தவன்)
- பன்னாடு தந்த மாறன் வழுதி (நற்றிணையைத் தொகுப்பித்தவன்)
- பாண்டியன் உக்கிரப்பெருவழுதி (அகநானூறு தொகுப்பித்தவன்)
- சடையப்ப வள்ளல் (கம்பராமாயணம் எழுத உதவியவர்)
- சீதக்காதி, அபுல் காசிம் (சீறாப்புராணம் எழுத உதவியவர்)
- சந்திரன் சுவர்க்கி (நளவெண்பா எழுத உதவியவர்)

**2. தமிழில் உள்ள பல்வேறு இலக்கிய வடிவங்களின் பெயர்களைப் பட்டியலிடுக.**

- கீழ்க்கணக்கு
- மேல்கணக்கு
- அறஇலக்கியம்
- பெருங்காப்பியம்
- சிறு காப்பியம்
- சிறுகதை
- மரபுக்கவிதை
- புதுக்கவிதை
- புதினம்
- நாட்டுப்புற இலக்கியம்

❖❁❖

## இயல் 1 உரைநடை உலகம்

# பேச்சுமொழியும் எழுத்துமொழியும்

### பாடநூல் மதிப்பீட்டு வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மொழியின் முதல் நிலை பேசுதல், __________ ஆகியனவாகும்.**

அ) படித்தல் ஆ) கேட்டல் இ) எழுதுதல் ஈ) வரைதல் [**விடை : ஆ**]

**2. ஒலியின் வரிவடிவம் __________ ஆகும்.**

அ) பேச்சு ஆ) எழுத்து இ) குரல் ஈ) பாட்டு [**விடை : ஆ**]

**3. தமிழின் கிளை மொழிகளில் ஒன்று ________.**
அ) உருது ஆ) இந்தி இ) தெலுங்கு ஈ) ஆங்கிலம் [**விடை : இ**]

**4. பேச்சுமொழியை ________ வழக்கு என்றும் கூறுவர்.**
அ) இலக்கிய ஆ) உலக இ) நூல் ஈ) மொழி [**விடை : ஆ**]

**சரியா தவறா என எழுதுக.**

1. மொழி காலத்திற்கு ஏற்ப மாறுகிறது. **விடை : சரி**
2. எழுத்துமொழி காலம் கடந்தும் நிலைத்து நிற்கிறது. **விடை : சரி**
3. பேசுபவரின் கருத்திற்கு ஏற்ப உடனடிச் செயல்பாட்டிற்கு உதவுவது எழுத்துமொழி. **விடை : சரி**
4. எழுத்து மொழியில் உடல்மொழிக்கு வாய்ப்பு அதிகம். **விடை: தவறு**
5. பேச்சுமொழி சிறப்பாக அமையக் குரல் ஏற்றத்தாழ்வு அவசியம். **விடை: சரி**

**ஊடகங்களை வகைப்படுத்துக.**
வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், நூல்கள், திரைப்படம், மின்னஞ்சல்.

**எழுத்துமொழி** : செய்தித்தாள், நூல்கள், மின்னஞ்சல்.
**பேச்சுமொழி** : வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம்.

**குறு வினா**

**1. மொழியின் இருவடிவங்கள் யாவை?**
1. பேச்சுமொழி 2. எழுத்துமொழி

**2. பேச்சுமொழி என்றால் என்ன?**
வாயினால் பேசப்பட்டு பிறரால் உணரப்படுவது பேச்சுமொழி ஆகும்.

**3. வட்டாரமொழி எனப்படுவது யாது?**
இடத்திற்கு இடம் பேச்சுமொழி மாறுபடும். மனிதர்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்பவும் பேச்சுமொழி மாறுபடும். இவ்வாறு மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை வட்டார மொழி என்பர்.

**சிறு வினா**

**1. பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை விளக்குக.**

| பேச்சுமொழி | எழுத்துமொழி |
|---|---|
| 1. பேச்சுமொழியில் சொற்கள் குறுகி ஒலிக்கும்.<br>எ.கா. நல்லாச் சாப்டான். | எழுத்துமொழியில் சொற்கள் முழுமையாக எழுதப்படும்.<br>எ.கா. நன்றாகச் சாப்பிட்டான். |
| 2. உணர்ச்சிக் கூறுகள் அதிகம். | உணர்ச்சிக் கூறுகள் குறைவு. |

| | |
|---|---|
| 3. உடல்மொழி, குரல் ஏற்றத்தாழ்வுக்கு இடம் உண்டு. | உடல்மொழி, குரல் ஏற்றத்தாழ்வுக்கு இடமில்லை. |
| 4. திருத்தமான மொழிநடையில் அமைகிறது. | திருத்தமான மொழிநடையில் அமைவதில்லை. |

**2. கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?**

- ஒரே மொழியைப் பேசும் மக்கள் வெவ்வேறு இடங்களில் வாழ்கின்றனர்.
- வாழும் இடத்தின் நிலஅமைப்பு, இயற்கைத்தடைகள் போன்றவற்றின் காரணமாக அவர்கள் பேசும் மொழியில் சிறிது சிறிதாக மாற்றம் ஏற்படும்.
- அவர்களுக்கு இடையே உள்ள தொடர்பு குறையும் போது இம்மாற்றங்கள் மிகுதியாகிப் புதிய மொழியாகப் பிரியும். அதுவே 'கிளைமொழி' என்பர்.
- கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய திராவிட மொழிகள் தமிழிலிருந்து பிரிந்து சென்ற கிளைமொழி ஆகும்.

### சிந்தனை வினா

**இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் வாழ்வதற்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?**

- இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடி என்பர். இலக்கியங்கள் தாம் தோன்றிய காலச் சூழலைக் காட்டுவதாலும் பண்பாடு, நாகரிகம், சமூக வாழ்க்கை ஆகியவற்றைக் காட்டுவதாலும் அவை அழியாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.
- வாழ்வோடு இணைந்த சுவை கொண்டு இலக்கியங்கள் படைக்கப்படுவதாலும் நீதிநெறிகளை முன்வைப்பதாலும் இன்றும் இலக்கியங்கள் எழுத்து வடிவில் இருப்பதாலும் இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் வாழ்கின்றன.

## கூடுதல் வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. பேசுவதும் கேட்பதும் மொழியின் ________ நிலை.**
அ) முதல் ஆ) இரண்டாம் இ) மூன்றாம் ஈ) நான்காம் [**விடை : அ**]

**2. வாயினால் பேசப்பட்டு பிறரால் உணரப்படுவது ________ ஆகும்.**
அ) எழுத்துமொழி ஆ) பேச்சுமொழி
இ) இலக்கிய மொழி ஈ) செய்கை மொழி [**விடை : ஆ**]

**3. கண்ணால் கண்டு உணருமாறு வரிவடிவமாக எழுதப்பட்டுப் படிக்கப்படுவது ________**
அ) எழுத்துமொழி ஆ) பேச்சுமொழி
இ) இலக்கிய மொழி ஈ) செய்கை மொழி [**விடை : அ**]

**4. எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் மொழியின் ________ நிலை.**
அ) முதல் ஆ) இரண்டாம் இ) மூன்றாம் ஈ) நான்காம் [**விடை : ஆ**]

**5. நேரில் காண இயலாத நிலையில் செய்தியைத் தெரிவிக்க உதவுவது.**
அ) எழுத்துமொழி ஆ) பேச்சுமொழி
இ) இலக்கிய மொழி ஈ) செய்கை மொழி [**விடை : அ**]

**6. மனிதனின் சிந்தனை காலம் கடந்தும் வாழ்வதற்குக் காரணம்.**

அ) எழுத்துமொழி ஆ) பேச்சுமொழி
இ) இலக்கிய மொழி ஈ) செய்கை மொழி [**விடை : அ**]

**7. மொழியின் உயிர் நாடியாக விளங்குவது.**

அ) எழுத்துமொழி ஆ) பேச்சுமொழி
இ) இலக்கிய மொழி ஈ) செய்கை மொழி [**விடை : ஆ**]

**8. பேச்சுமொழியில் 'குழந்தையை நல்லாக் கவனிங்க' என்று கூறும்போது 'கவனி' என்னும் சொல்தரும் பொருள்.**

அ) பேணுதல் ஆ) கவனித்துச்செல்
இ) பாதுகாப்புப் பொருள் ஈ) பாருங்கள் [**விடை : அ**]

**9. 'நான் பறவையைப் பார்த்தேன்' - இத்தொடர் 'பறவையைப் பார்த்தது யார்?' என்ற வினாவாக அமையும் போது, அழுத்தம் கொடுக்கவேண்டிய சொல் எது?**

அ) பறவை ஆ) நான்
இ) பார்த்தது ஈ) யார் [**விடை : ஆ**]

**10. மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்கள்....... என்பர்.**

அ) எழுத்துமொழி ஆ) பேச்சுமொழி
இ) இலக்கிய மொழி ஈ) வட்டார மொழி [**விடை : ஈ**]

**11. பொருந்தாதவற்றைத் தேர்ந்தேடுக்க.**

அ) தமிழ் - கிளை மொழி ஆ) கன்னடம் - கிளை மொழி
இ) மலையாளம் - கிளை மொழி ஈ) தெலுங்கு - கிளை மொழி [**விடை : அ**]

**12. பொருத்துக.**

1. தமிழ் - அ) இரட்டை வழக்கு
2. கன்னடம் - ஆ) நல்லாச் சாப்ட்டான்
3. வட்டார மொழி - இ) கீது
4. பேச்சு வழக்கு - ஈ) கிளை மொழி

அ) 1- அ, 2 - ஈ, 3-இ, 4-ஆ ஆ) 1- ஈ, 2-ஆ, 3-இ, 4- அ
இ) 1- ஈ, 2 - இ, 3-அ, 4-ஆ ஈ) 1- அ, 2-இ, 3-ஆ, 4-ஈ [**விடை : அ**]

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. உலக வழக்கு, செய்யுள் வழக்கு பற்றிக் குறிப்பிடுபவர் _______ **விடை : தொல்காப்பியர்**
2. இரட்டை வழக்கு மொழி _________ **விடை : தமிழ்**
3. எழுத்துமொழியில் பெரும்பாலும் _________ பேணப்படுகின்றது. **விடை : மொழித்தூய்மை**
4. ஒருமொழி உயிர்ப்போடு வாழ__________யும், காலம் கடந்து வாழ்வதற்கு __________யும் தேவைப்படுகின்றன. **விடை : பேச்சுமொழி, எழுத்துமொழி**
5. 'எளிய நடையில் தமிழ் நூல் எழுதிடவும் வேண்டும்' என்று பாடியவர் _________ **விடை : பாவேந்தர் பாரதிதாசன்**

தமிழ்

### குறுவினா

1. **இரட்டை வழக்கு மொழி என்றால் என்ன? சான்று தருக.**

பேச்சுமொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால் அஃது இரட்டை வழக்கு மொழி ஆகும்.

சான்று : தமிழ் மொழி

2. **குழந்தைகளுக்குத் தாய்மொழியும் பிறமொழியும் எவ்வாறு அறிமுகமாகின்றன?**

✍ கேட்டல், பேசுதல் என்னும் முதல் நிலையிலேயே குழந்தைகளுக்குத் தாய்மொழி அறிமுகமாகிறது.

✍ படித்தல், எழுதுதல் என்னும் இரண்டாம் நிலையில் குழந்தைகளுக்குப் பிறமொழிகள் அறிமுகமாகிறது.

3. **பேச்சுமொழி, எழுத்துமொழி என்பதைத் தொல்காப்பியர் எச்சொற்களால் குறிப்பிடுகிறார்?**

1. பேச்சுமொழி - உலக வழக்கு
2. எழுத்துமொழி - செய்யுள் வழக்கு

4. **தமிழில் இருந்து பிரிந்து சென்ற கிளைமொழிகள் யாவை?**

1. கன்னடம் 2. தெலுங்கு 3. மலையாளம்

5. **பேச்சுமொழி, எழுத்து மொழி என்னும் இரு கூறுகளையும் கொண்ட மொழி எது?**

தமிழ் மொழி.

6. **பழமையும் புதுமையும் நிறைந்து சிறந்த மொழி எது?**

தமிழ் மொழி.

7. **மொழி என்பது யாது?**

தனது எண்ணங்களையும உணர்ச்சிகளையும் பிறருக்கு வெளிப்படுத்துவதற்கு மனிதனால் உருவாக்கப்பட்டதே மொழி என்பர்.

8. **பேச்சுமொழியின் சிறப்புக்கூறுகள் யாவை?**

பேசுபவனின் உடல்மொழி, ஒலிப்பதில் ஏற்ற இறக்கம் ஆகியனவும் பேச்சுமொழியின் சிறப்புக் கூறுகள் ஆகும்.

9. **ஊடகங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

1. வானொலி 2. தொலைக்காட்சி 3. நாளேடுகள்

10. **திருத்தமான தமிழை எங்கெங்குப் பயன்படுத்த வேண்டும்?**

திருத்தமான தமிழையே ஊடகங்களிலும் இலக்கியங்களிலும் பயன்படுத்த வேண்டும

### சிறு வினா

1. **பேச்சு மொழி, எழுத்துமொழி, வட்டார வழக்கு ஆகியவற்றை விளக்கி சான்று தருக.**

**பேச்சு மொழி** : வாயினால் பேசப்பட்டு பிறரால் உணரப்படுவது பேச்சுமொழி ஆகும். உணர்வுகளை எளிதாக வெளிப்படுத்தும். கருத்தை வெளிப்படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டது. பேசுபவனின் உடல்மொழி,

ஒலிப்பதில் ஏற்ற இறக்கம் ஆகியனவும் பேச்சுமொழியின் சிறப்புக் கூறுகள் ஆகும்.

**சான்று** : குழந்தையை நல்லாக் கவனிங்க.

**எழுத்துமொழி** : பேச்சு மொழிக்கு நாம் தந்த வடிவமே எழுத்துமொழி. கண்ணால் கண்டு உணருமாறு வரிவடிவமாக எழுதப்பட்டுப் படிக்கப்படுவது எழுத்துமொழி. ஒரு மொழியானது நீண்ட காலம் நிலைபெற எழுத்து மொழியே காரணம்.

**சான்று** : நன்றாகச் சாப்பிட்டான்.

**வட்டார வழக்கு** : இடத்திற்கு இடம் பேச்சுமொழி மாறுபடும். மனிதர்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்பவும் பேச்சுமொழி மாறுபடும். இவ்வாறு மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை வட்டாரமொழி என்பர்.

**சான்று** : 'இருக்கிறது' என்ற சொல்லை 'இருக்கு', 'கீது' என வழங்குவது.

## நெடு வினா

**1. பேச்சுமொழியில் சொற்பொருள் வேறுபாடுகள் குறித்து எழுதுக.**

✍ பேசப்படும் சூழலைப் பொறுத்து பேச்சுமொழியில் பொருள் வேறுபடும்.

✍ எடுத்துக்காட்டாகக் 'குழந்தையை நல்லாக் கவனிங்க' என்று கூறும்போது 'கவனி' என்னும் சொல் பேணுதல் என்னும் பொருளைத் தருகின்றது. 'நில்', 'செல்', கவனி' என்பதில் 'கவனி' என்னும் சொல் கவனித்துச் செல் என்னும் பாதுகாப்புப் பொருளைத் தருகின்றது.

✍ ஒலிப்பதன் ஏற்ற இறக்கமும் பொருள் வேறுபாட்டைத் தரும்.

✍ எடுத்துக்காட்டாக 'என்னால் போக முடியாது' என்னும் தொடர் ஓங்கி ஒலிக்கும் போது மறுப்பையும் , மென்மையாக ஒலிக்கும் போது இயலாமையை உணர்த்துகின்றது.

✍ தொடரில் எச்சொல்லுக்கு அழுத்தம் கொடுக்கிறோமோ அதற்கேற்ப பேச்சுமொழியின் சொல் வேறுபடுகின்றது.

✍ எடுத்துக்காட்டாக 'நான் பறவையைப் பார்த்தேன்' என்னும் தொடரில் 'நான்' என்னும் சொல்லுக்கு அழுத்தம் கொடுத்தால், 'பறவையைப் பார்த்தது யார்?' என்னும் வினாவுக்கு விடையாக அமையும்.

✍ 'பறவையை' என்னும் சொல்லுக்கு அழுத்தம் கொடுத்தால், 'நீ எதைப் பார்த்தாய்?' என்னும் வினாவுக்கு விடையாக அமையும்.

✍ 'பார்த்தேன்' என்னும் சொல்லுக்கு அழுத்தம் கொடுத்தால், 'நீ பறவையை என்ன செய்தாய்?' என்னும் வினாவுக்கு விடையாக அமையும்.

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் வீட்டில் பயன்படுத்தும் பேச்சுவழக்குத் தொடர்களுக்கு இணையான எழுத்து வழக்குத் தொடர்களை எழுதி வருக.**

(எ.கா.) பேச்சுமொழி - அம்மா பசிக்கிது எனக்குச் சோறு வேணும்.
எழுத்துமொழி - **அம்மா! பசிக்கிறது. எனக்குச் சோறு வேண்டும்.**

1. பேச்சுமொழி - வூட்டுக்கு போகனும்.
எழுத்துமொழி - **வீட்டிற்குப் போக வேண்டும்.**

2. பேச்சுமொழி - வவுறு நிறையா சாப்புடு .
எழுத்துமொழி - **வயிறு நிறைய சாப்பிடு.**

3. பேச்சுமொழி - இன்னிக்கு காத்தால வாங்கிட்டு வந்தே
எழுத்துமொழி - **இன்றைக்குக் காலையில் வாங்கி வந்தேன்.**

4. பேச்சுமொழி - தண்ணி கொண்டா
எழுத்துமொழி - **தண்ணீர் கொண்டு வா.**

**2. பேசும்போது சில நேரங்களில் சொற்களின் இறுதியில் உகரம் சேர்ந்து ஒலிப்பது உண்டு. 'ஆ' என்னும் எழுத்து இகரமாக மாறுவதும் உண்டு. அவ்வாறு ஒலிக்கும் சொற்களை எழுதி அவற்றுக்கு இணையான எழுத்து வழக்குச் சொற்களையும் எழுதுக.**

(எ.கா) சொல்லு – சொல், நில்லு – நில், வந்தியா – வந்தாயா?, சாப்ட்டியா – சாப்பிட்டாயா?

| | | | |
|---|---|---|---|
| செல்லு | செல் | போனியா | போனாயா? |
| கொல்லு | கொல் | பார்த்தியா | பார்த்தாயா? |
| வெல்லு | வெல் | சொன்னியா | சொன்னாயா? |
| தள்ளு | தள் | கொடுத்தியா | கொடுத்தாயா? |
| துள்ளு | துள் | செய்தியா | செய்தாயா? |

❖❁❖

இயல் 1 விரிவானம்

## சொலவடைகள் (பொம்மலாட்டம்)

### பாடநூல் மதிப்பீட்டு வினா

**பாடப்பகுதிப் பொம்மலாட்டக் காட்சிகளைச் சிறுகதையாக எழுதுக.**

**'ஆளுக்கு ஒரு வேலை'**

**முன்னுரை:**

கல்வியின் அவசியத்தை உணர்த்தும் 'ஆளுக்கு ஒரு வேலை' என்னும் பொம்மலாட்டக் கதை நிகழ்வைச் சிறுகதை வடிவில் காண்போம்.


**பையனின் பிடிவாதமும் பெற்றோர் அறிவுரையும்:**



அம்மா, அப்பா, பையன் என சிறுகுடும்பம் ஒன்றுள்ளது. அக்குடும்பத்தில் உள்ள பையன் ஒழுங்காகப் பள்ளிக் கூடம் செல்லாமல் ஊர்சுற்றிக் கொண்டே இருப்பான். யார் அறிவுரை கூறினாலும் கேட்காத பிடிவாத குணம் கொண்டவன். அவனது பிடிவாதத்தை யாராலும் மாற்ற முடியாது. ஒரு நாள் அப்பா அந்தப் பையனிடம், 'இப்பொழுது நீ படிக்கவில்லை என்றால் வாழ்க்கையில் முன்னேற முடியாது, பள்ளிக்கூடம் போய் படி' என்றார். அம்மாவும்,

'படிக்கவில்லையென்றால் யாரும் மதிக்கமாட்டார்கள்' என்றார். அவன் வேண்டா வெறுப்பாகப் பள்ளிக்கூடம் சென்றான்.

### விளையாட அழைத்தல்



வழக்கம் போலவே பள்ளிக் கூடத்தை விட்டு ஓட்டம் பிடிக்கின்றான். விளையாட யாராவது வருவார்களா? என்று பார்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுது எறும்பு ஒன்று வந்தது. அதனை விளையாடக் கூப்பிட்டான். ஆனால் அது தன் குழந்தைகளுக்குத் தீனி கொடுக்க வேண்டும். அரிசி, தவிடு சேகரிக்க வேண்டும். உனக்குத் தான் வேலை இல்லை என்றது. பிறகு தேனீ, பொதிமாடு, ஆமை, முயல் ஆகியவற்றை ஒவ்வொன்றாக விளையாடக் கூப்பிட்டான். அவனுக்குப் புத்தி புகட்டும் வண்ணம் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி அவை விளையாட மறுத்து விட்டன.

### மனமாற்றம்

ஈரமான குட்டிச் சுவர் மீது அவன் அமர்ந்தான். சுவர் இடிந்து, அதிலிருந்த பூச்சி, எறும்பு, வண்டு ஆகியன 'உனக்குத் தான் வேலை இல்லை, நாங்கள் சேர்த்த பொருளை எல்லாம் உடைத்து விட்டாயே!' என்றுச் சொல்லி அவனைக் கடித்தன. மனம் மாறிய பையன் தன் அம்மாவிடம், 'உலகத்தில் ஈ, எறும்பு கூட சும்மா இல்லாமல் வேலை செய்கின்றன. படிப்பது தான் என் வேலை என்பதைப் புரிந்து கொண்டேன். இனி ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்கின்றேன்' என்றான்.

### முடிவுரை

'ஒவ்வொருவருக்கும் ஒரு வேலை உண்டு. மாணக்கர்களுக்குப் படிப்பது மட்டும் தான் நம் வேலை' என்பதை இக்கதையின் மூலம் நாம் அறிய முடிகின்றது.

கதை உணர்த்தும் நீதி : படி ! முதற்படி! அதுவே வாழ்க்கைப் படி!

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் பகுதியில் வழங்கி வரும் சொலவடைகளைத் தொகுத்து வருக.**

1. வீட்டுக்கு வீடு வாசற் படி.
2. வீட்டைக் கட்டிப்பார், கல்யாணம் பண்ணிப்பார்.
3. அடிச்சு வளக்காத புள்ளயும் ஒடிச்சு வளக்காத முருங்கையும் உருப்படாது.
4. எறச்ச கிணறு ஊறும்.
5. நாய் வித்த காசு கொலக்கவா செய்யும்.
6. ஊராரு புள்ளய ஊட்டி வளத்தா தன்புள்ள தன்னால வளரும்.
7. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
8. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.
9. காணி சோம்பல், கோடி கேடு.
10. மானேண்ணா புள்ளி கொறயுமா? மயிலேண்ணா எறகு உதிருமா?

**2. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள சொலவடைகளில் எவையேனும் ஐந்தனைத் தேர்ந்தெடுத்துச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

(எ.கா) குத்துக்கல்லுக்குக் குளிரா வெயிலா என்பது போல் என் நண்பன் எதைப் பற்றியும் கவலைப்படாமல் வாழ்ந்து வந்தான்.

**1. எறும்பு ஊரக் கல்லும் தேயும் :**
மாணவர்களிடம் ஆசிரியர் எறும்பு ஊரக் கல்லும் தேயும் என்பது போல தீய பழக்கங்களின் கொடுமையினைக் கூறி மனமாற்றம் அடையச் செய்வார்.

**2. சொப்பனத்தில் கண்ட அரிசி சோத்துக்கு ஆகுமா?**
கற்பனையில் மிதந்து இருப்பவர்கள் சொப்பனத்தில் கண்ட அரிசி சோத்துக்கு ஆகுமா? என்பதை உணர வேண்டும்.

**3. அதிர அடிச்சா உதிர விளையும் :**
அதிர அடிச்சா உதிர விளையும் என்பது போல வாழ்வில் முன்னேற தொடர் முயற்சி செய்தால் போதும்.

**4. காவடிப் பாரம் சுமக்கிறவனுக்குத் தான் தெரியும் :**
காவடிப் பாரம் சுமக்கிறவனுக்குத் தான் தெரியும் என்பது போல உழைப்பவருக்குத் தான் பணத்தின் அருமை தெரியும்.

**5. பாடிப்பாடி குத்தினாலும் பதறு அரிசி ஆகுமா?**
தீயவன் கோடி ரூபாயைக் கோவில் உண்டியலில் போடுவது பாடிப்பாடி குத்தினாலும் பதறு அரிசி ஆகுமா? என்பது போலப் புண்ணியம் கிடைக்குமா?

❖❀❖

## இயல் 1 கற்கண்டு குற்றியலுகரம், குற்றியலிகரம்

### பாடநூல் மதிப்பீட்டு வினா

**கீழ்க்காணும் சொற்களைக் குற்றியலுகர வகையின் அடிப்படையில் வகைப்படுத்துக.**

ஆறு, எஃகு, கரும்பு, விறகு, உழக்கு, எட்டு, ஏடு, பந்து, காசு, கொய்து

| நெடில் தொடர் | ஆய்தத் தொடர் | உயிர்த் தொடர் | வன்தொடர் | மென் தொடர் | இடைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| காசு | எஃகு | ஆறு<br>ஏடு<br>விறகு | எட்டு<br>உழக்கு | பந்து<br>கரும்பு | கொய்து |

**பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக.**

1 பசு, விடு, ஆறு, கரு — **விடை :** கரு

2. பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து — **விடை :** பஞ்சு

3. ஆறு, மாசு, பாகு, அது — விடை : அது
4. அரசு, எய்து, மூழ்கு, மார்பு — விடை : அரசு
5. பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு — விடை : எஃகு

**குறு வினா**

**1. 'குற்றியலுகரம்' என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.**

குற்றியலுகரம் - குறுமை + இயல் + உகரம்
தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும்.

**2. குற்றியலிகரம் என்றால் என்ன?**

முழுமையாக ஒரு மாத்திரை அளவில் ஒலிக்காமல் அரைமாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும் இகரம் குற்றியலிகரம் எனப்படும்.

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.**

**1. பொருத்துக.**

1. நெடில் தொடர் - அ) எஃகு, அஃது
2. ஆய்தத் தொடர் - ஆ) அரசு, ஒன்பது, கயிறு
3. உயிர்த் தொடர் - இ) பாகு, மாசு, பாடு, காது
4. வன்தொடர் - ஈ) பாக்கு, பேச்சு, பாட்டு

அ) 1-அ, 2- ஈ, 3-இ, 4-ஆ ஆ) 1-ஈ, 2-ஆ, 3-இ, 4-அ
இ) 1- இ, 2-அ, 3-ஆ, 4-ஈ ஈ) 1- அ, 2-இ, 3-ஆ, 4-ஈ [**விடை: இ**]

**2. குற்றியலுகரத்தின் வகைகள்**

அ) ஆறு ஆ) நான்கு இ) ஐந்து ஈ) இரண்டு [**விடை: அ**]

**3. பொருந்தாத இணையைக் கண்டறிக.**

அ) உயிரெழுத்து - 12 ஆ) மெய்யெழுத்து - 18
இ) சார்பெழுத்து - 10 ஈ) தமிழ் எழுத்து - 5 [**விடை: ஈ**]

**4. குற்றியலுகரம் பெறும் மாத்திரை அளவு**

அ) ஒன்று ஆ) இரண்டு இ) அரை ஈ) கால் [**விடை: இ**]

**5. குற்றியலிகரம் பெறும் மாத்திரை அளவு**

அ) ஒன்று ஆ) இரண்டு இ) அரை ஈ) கால் [**விடை: இ**]

**6. குற்றியலிகரம் பயின்று வந்த சொல்லைத் தேர்ந்தெடுக்க.**

அ) எஃகு ஆ) கயிறு இ) பற்று ஈ) கொக்கியாது [**விடை: ஈ**]

**7. பின்வரும் சான்றுகளில் முற்றியலுகரம் அல்லாததைத் தேர்ந்தெடுக்க.**

அ) புகு ஆ) பசு இ) பந்து ஈ) ஏழு [**விடை: இ**]

**8. மென் தொடர்க் குற்றியலுகரச் சான்றினைத் தேர்வு செய்க.**

அ) எஃகு ஆ) காது இ) எய்து ஈ) மஞ்சு [**விடை: ஈ**]

**9. இடைத் தொடர்க் குற்றியலுகரச் சான்றினைத் தேர்வு செய்க.**

அ) எஃகு ஆ) காது

இ) எய்து ஈ) மஞ்சு [விடை : இ]

**10. தோப்பியாது, கேண்மியா - ஆகிய சொற்கள் ________ க்குச் சான்று.**

அ) குற்றியலிகரம் ஆ) நெடில் தொடர் குற்றியலுகரம்

இ) முற்றியலுகரம் ஈ) குற்றியலுகரம் [விடை : அ]

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் உகரம் ________ஆகும். **விடை : குற்றியலுகரம்**
2. முழுமையாக ஒரு மாத்திரை அளவில் ஒலிக்காமல் அரைமாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும் இகரம் ________ எனப்படும். **விடை : குற்றியலிகரம்**
3. தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள் ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதை ________ என்பர். **விடை : முற்றியலுகரம்**
4. குறில் எழுத்துகளைக் குறிக்கப் பயன்படுத்தும் அசைச் சொல் ________ **விடை : கரம்**
5. நெடில் எழுத்துகளைக் குறிக்கப் பயன்படுத்தும் அசைச் சொல் ________ **விடை : கான்**
6. குறில்,நெடில் எழுத்துகளைக் குறிக்கப் பயன்படுத்தும் அசைச் சொல் ________ **விடை : காரம்**
7. ஆய்த எழுத்தைக் குறிக்கப் பயன்படுத்தும் அசைச் சொல் ________ **விடை : கேனம்**
8. சார்பெழுத்து ________ வகைப்படும். **விடை : பத்து**
9. குற்றிலுகரத்தின் வகைகள் ________ **விடை : ஆறு**
10. ________ என்னும் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரச்சொற்கள் இல்லை. **விடை : 'வ்'**
11. ________, ________, ________ ஆகியவை இறுதியாக அமையும் இடைத்தொடர் குற்றியலுகரச் சொற்களும் இல்லை. **விடை : சு, டு, று**

**குறுவினா**

**1. குற்றியலுகரத்திற்குச் சான்று தருக.**

காசு, எஃகு, பயறு, பாட்டு, பந்து, சால்பு.

**2. முற்றியலுகரத்திற்குச் சான்று தருக.**

புகு, பசு, விடு, அது, விடு, வறு.

**3. குற்றியலிகரத்திற்குச் சான்று தருக.**

கொக்கியாது, தோப்பியாது, நாடியாது, கேண்மியா, சென்மியா.

4. **முற்றியலுகரம் என்றால் என்ன? சான்று தருக.**

தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள் ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதை முற்றியலுகரம் என்பர்.

**எ.கா.** புகு, பசு, விடு, அது, விடு, வறு.

5. **முதலெழுத்துகள் யாவை?**

உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்துகளும் முதலெழுத்துகள் எனப்படும்.

6. **சார்பெழுத்து எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

சார்பெழுத்து பத்து வகைப்படும்.

1. உயிர்மெய்
2. ஆய்தம்
3. உயிரளபெடை
4. ஒற்றளபெடை
5. ஐகாரக்குறுக்கம்
6. ஔகாரக்குறுக்கம்
7. மகரக்குறுக்கம்
8 குற்றியலிகரம்
9. குற்றியலுகரம்
10. ஆய்தக்குறுக்கம்

### சிறுவினா

1. **குற்றியலுகரம் எத்தனை வகைப்படும் ?அவை யாவை?**

குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

1. நெடில் தொடர் குற்றியலுகரம்
2. ஆய்தத் தொடர் குற்றியலுகரம்
3. உயிர்த் தொடர் குற்றியலுகரம்
4. வன் தொடர் குற்றியலுகரம்
5. மென் தொடர் குற்றியலுகரம்
6. இடைத் தொடர் குற்றியலுகரம்

### கற்பவை கற்றபின்

1. **ஒன்று முதல் பத்து வரையுள்ள எண்ணுப் பெயர்களைப் பட்டியலிட்டு எழுதுங்கள்; அவற்றில் குற்றியலுகரச் சொற்களை எடுத்து எழுதுங்கள்.**

| |
|---|
| **எண்ணுப்பெயர்கள் :** ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து. |
| **குற்றியலுகரச் சொற்கள் :** ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, எட்டு, ஒன்பது, பத்து. |

2. **குற்றியலுகர எண்ணுப் பெயர்களைக் குற்றியலுகர வகையின் அடிப்படையில் வகைப்படுத்துக.**

வன்தொடர் குற்றியலுகரம் - மூன்று, எட்டு, பத்து
மென் தொடர் குற்றியலுகரம் - ஒன்று, இரண்டு, நான்கு, ஐந்து, ஒன்பது
உயிர்த் தொடர் குற்றியலுகரம் - ஆறு

3. **குற்றியலுகர எண்ணுப் பெயர்களின் மாத்திரை அளவைக் கண்டுபிடியுங்கள்.**

(எ.கா) ஒன்று - $1 + \frac{1}{2} + \frac{1}{2} = 2$

இரண்டு - $1 + 1 + \frac{1}{2} + \frac{1}{2} = 3$

FIRST TERM
5-in-1

| | | | | |
|---|---|---|---|---|
| மூன்று | - | 2 + ½ + ½ | = | 3 |
| நான்கு | - | 2+ ½ + ½ | = | 3 |
| ஐந்து | - | 2 + ½ + ½ | = | 3 |
| ஆறு | - | 2 + ½ | = | 2½ |
| ஏழு | - | 2 + 1 | = | 3 |
| எட்டு | - | 1 + ½ + ½ | = | 2 |
| ஒன்பது | - | 1 + ½ + 1 + ½ | = | 3 |
| பத்து | - | 1 + ½ + ½ | = | 2 |

**4. கு, சு, டு, து, று ஆகிய குற்றியலுகரத்தை இறுதியாகக் கொண்ட ஈரெழுத்துச் சொற்களைத் திரட்டுக.**

✍ பாகு, வாகு
✍ பாடு, சாடு, ஓடு, விடு
✍ காசு, வீசு, பேசு
✍ வாது, கேது, சாது, மாது
✍ வறு, சேறு, செறு
✍ வது, வடு, பொது

## மொழியை ஆழ்வோம்

**கேட்க.**

தமிழின் சிறப்பைப் பற்றிய அறிஞர்களின் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்க.

**பாரதியாரின் சொற்பொழிவுச் செய்தி**

தமிழின் சிறப்பை விளக்கும் வண்ணம் காந்தியடிகளிடம் பாரதி நடத்திய கடித உரையாடல் ஒன்றைத் தனது சொற்பொழிவில் எடுத்துரைத்தார்.

காந்தியடிகளின் சொற்பொழிவை நான் கேட்க நேர்ந்தது. வெள்ளையனே வெளியேறு என்பதை அழுத்தமாக வலியுறுத்தினார். அவருடைய சொற்பொழிவைப் பற்றி நான் ஒரு மடல் எழுதினேன். அதில் மகாத்மாவே நேற்றைய சொற்பொழிவில், வெள்ளையனே வெளியேறு என்ற பேச்சு அருமை. ஆனால் ஒரு வருத்தம்.வெள்ளையனை வெளியேறச் சொல்லி, தங்கள் சொற்பொழிவு இந்தியிலோ குஜராத்தியிலோ அமையாமல் ஆங்கிலத்தில் இருந்தது மிகுந்த வருத்தம் அளிக்கின்றது என்று எழுதியிருந்தேன். அதற்கு காந்தியார் மறுமடலில், நான் ஆங்கிலத்தில் பேசியதை நீங்கள் மடலில் குறிப்பிடும் போது ஏன் நீங்களும் ஆங்கிலத்தில் எனக்கு மடல் எழுதினீர் என்றார்.அதற்கு நான், யாருடைய மனமும் புண்படும் படியான செய்தியைப் பேசுவதாக இருந்தாலும், எழுதுவதாக இருந்தாலும் என்னுடைய தாய்மொழியாகிய தமிழைப் பயன்படுத்த மாட்டேன் என்று மடல் எழுதினேன் என்றார்.

**கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

**நான் அறிந்த பழமொழிகள்**

தமிழன்னையின் தாழ்பணிந்து வணக்கங்கள் பலசொல்லி என்னுரையை ஆரம்பம் செய்கின்றேன். நான் அறிந்தபழமொழிகள் பற்றிச் சில நிமிடங்கள் பேசுகின்றேன். பழமொழி என்பது என்ன? நம் முன்னோர்கள் தங்கள் அனுபவத்தின் மூலம்உணர்ந்து கூறிய மொழிகள் பழமொழி ஆகும். அவை அனுபவ மொழிகள். வாழ்க்கையை வளப்படுத்துவன.

அவற்றின் வழிநம் எண்ணங்களையும் வாழக்கைப் பாதையையும் முடிவு செய்யலாம். யானைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே, இக்கதைக்கு அக்கரை பச்சை, ஆடிக் காற்றில் அம்மியும் பறக்கும், ஆலும் வேலும் பல்லுக்குறுதிநாளும் இரண்டும் சொல்லுக்குறுதி, காற்றுள்ளபோதே தூற்றிக் கொள், அகல உழுவதைவிட ஆழ உழுவதே மேல் ஆகியன நான் அறிந்த பழமொழிகள் ஆகும். இவை போல பல்லாயிரக்கணக்கான பழமொழிகள் நம் நாட்டில் உள்ளன. அதனை அறிந்து பயன்படுத்துவோம்.நன்றி. வணக்கம்.


**கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு ஏற்பத் தொடரில் அழுத்தம் தர வேண்டிய சொற்களை எடுத்து எழுதுக.**

கோதை கவிதையைப் படித்தாள்.

| வினா | அழுத்தம் தர வேண்டிய சொல் |
|---|---|
| கோதை எதைப் படித்தாள்? | கவிதை |
| கவிதையைப் படித்தது யார்? | கோதை |
| கோதை கவிதையை என்ன செய்தாள்? | படித்தாள் |

**படத்திற்குப் பொருத்தமான திணையை எழுதுக.**


உயர்திணை


அஃறிணை


உயர்திணை

**கீழ்க்காணும் சொற்களை உயர்திணை, அஃறிணை என வகைப்படுத்துக.**

வயல், முகிலன், குதிரை, கயல்விழி, தலைவி, கடல், ஆசிரியர், புத்தகம், சுரதா, மரம்.

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| முகிலன் | வயல் |
| கயல்விழி | குதிரை |
| தலைவி | கடல் |
| ஆசிரியர் | புத்தகம் |
| சுரதா | மரம் |

**கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**தாய்மொழிப் பற்று**

(முன்னுரை – மொழி பற்றிய விளக்கம் – தாய்மொழி – தாய்மொழிப் பற்று – தாய்மொழிப் பற்றுக் கொண்ட சான்றோர் – சாதுவன் வரலாறு – நமது கடமை – முடிவுரை)

**முன்னுரை:**

'தாயிற் சிறந்த கோவிலும் இல்லை' என்பது சான்றோர் பெருமக்கள் பலரின் வாக்காகும். நம்மைப் பெற்ற தாயைவிட சிறந்ததொரு தெய்வம் கிடையாது என்பதால் தான் 'தாய்மொழி' என்று அழைத்தனர். தாய்மொழியின் மீது பற்றுதலோடு இருக்க வேண்டும் என்பதை இக்கட்டுரை வலியுறுத்துகின்றது.

**மொழி பற்றிய விளக்கம்:**

நமது எண்ணங்களை மற்றவர்கள் புரிந்து கொள்ளவும், நமது கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளவும் உதவுவது மொழியாகும். மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் நாகரிக உயர்வுக்கும் அடிப்படையாக அமைவது மொழியாகும்.

**தாய்மொழிப் பற்று:**

குழந்தைக்குத் தாய் முதன் முதலில் சொல்லித் தரும் மொழியே தாய்மொழி. குழந்தைகளுக்குத் தாய்மொழி இயல்பாகவே வரும். கனவிலும் நனவிலும் தாய்மொழியே இயல்பாக அமையும்.அவரவர் தாய்மொழி மீது தணியாத பற்று கொள்ள வேண்டும்.

**தாய்மொழிப் பற்றுக் கொண்ட சான்றோர்:**

இன்றைய காலத்தில் தாய்மொழியில் பேசவும் படிக்கவும் பலர் தயங்குகின்றனர். இது பெற்ற தாயைப் புறந்தள்ளி வைப்பது போன்றதாகும். எண்ணற்ற உலகம் போற்றும் சான்றோர்கள் தத்தம் தாய்மொழியிலேயே செயல்களைச் செய்து உயர்ந்துள்ளனர். பாரதியார், காந்தியடிகள், இரவீந்திரநாத் தாகூர் எனப் பலரும் பன்மொழி அறிந்திருந்த போதும், சிறந்த உலகம் போற்றும் படைப்புகளைத் தம் தாய்மொழியிலேயே தந்தனர். சந்திரபோஸ் தன் மகன் ஜெகதீஸ் சந்திரபோஸைத் தாய்மொழி கற்பிக்கும் பள்ளியிலேயே படிக்க வைத்தார்.அவர் பிற்காலத்தில் உலகின் தலைசிறந்த அறிவியல் அறிஞரானர்.

**சாதுவன் வரலாறு:**

ஆதிரையின் கணவன் சாதுவன் வணிகம் செய்ய கப்பற் பயணம் செய்கின்றான் பெருங்காற்றால் கப்பல் கவிழ்ந்து விடுகின்றது. சாதுவன் பிழைத்து நாகர்கள் வாழும் தீவை அடைகின்றான். அவர்கள் மனித மாமிசம் உண்பவர்கள். சாதுவனைத் தின்ன நினைக்கின்றனர். ஆனால் சாதுவன், நாகர்கள் பேசும் மொழியைப் பேசுகின்றான். நாகர்கள் சாதுவனுக்கு வேண்டியதைக் கொடுத்து அனுப்பி வைக்கின்றனர். தாய்மொழியே எதையும் மாற்றும்.

**நமது கடமை:**

✍ அந்நிய மொழி மோகம் கொண்டு அலையாமல் தாய்மொழியின் மீது அளவற்ற பற்றுதல் வைக்கவேண்டும்.

✍ தாய்மொழி வழிக் கல்வி பெறுதலே சிறப்பு என்பதை மற்றவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

✍ கல்லூரிக் கல்வி வரைத் தாய்மொழியிலேயே பயில வேண்டும்.

**முடிவுரை:**

ஆங்கில வழிக்கல்வி மூலம் நாம் நம்மை இழந்து கொண்டு இருக்கின்றோம். நமது பண்பாடு, கலாச்சாரத்தை மீட்டுக் கொண்டுவரத் தாய்மொழிப் பற்றுடன் தாய்மொழில் பயில்வது இன்றைய காலத்தில் அவசியமாகும்.

## மொழியோடு விளையாடு

**தொகைச் சொற்களை விரித்து எழுதுக.**

(எ.கா) **இருதிணை** – உயர்திணை, அஃறிணை.

**முக்கனி** - மா, பலா, வாழை.

**முத்தமிழ்** - இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்.

**நாற்றிசை** - கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு.

**ஐவகைநிலம்** - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.

**அறுசுவை** - இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கசப்பு.

**கட்டங்களிலுள்ள எழுத்துகளை மாற்றி, மேலிருந்து கீழாகவும் இடமிருந்து வலமாகவும் எழுதினால் ஒரே சொல் வருமாறு கட்டங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| கை | எ | து |
| ற | து | வி |
| னை | கை | வி |

**விடை:**

| | | |
|---|---|---|
| எ | து | கை |
| து | ற | வி |
| கை | வி | னை |

| | | |
|---|---|---|
| கு | ம | த |
| ந் | தி | த |
| ரை | கு | தி |

**விடை:**

| | | |
|---|---|---|
| ம | த | கு |
| த | ந் | தி |
| கு | தி | ரை |

**இரு பொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக.**

1. அரசுக்கு தவறாமல் **வரி** செலுத்த வேண்டும்.
   ஏட்டில் எழுதுவது **வரி** வடிவம்.
2. மழலை பேசும் **மொழி** அழகு.
   இனிமைத் தமிழ் **மொழி** எமது.
3. அன்னை தந்தையின் கைப்பிடித்துக் குழந்தை **நடை** பழகும்.
   அறிஞர் அண்ணாவின் சிறப்பு அவரது அடுக்குமொழி **நடை.**
4. நீ அறிந்ததைப் பிறருக்குச் **சொல்.**
   எழுத்துகள் தொடர்ந்து நின்று பொருள் தருவது **சொல்.**
5. உழவர்கள் நாற்று **நட** வயலுக்குச் சென்றனர்.
   குழந்தையை மெதுவாக **நட** என்போம்.
6. நீதி மன்றத்தில் தொடுப்பது **வழக்கு.**
   'நீச்சத் தண்ணி குடி' என்பது பேச்சு **வழக்கு.**

## கலைச்சொல் அறிவோம்

1. ஊடகம் - Media
2. மொழியியல் - Linguistics
3. ஒலியியல் - Phonology
4. இதழியல் - Journalism
5. பருவ இதழ் - Magazine
6. பொம்மலாட்டம் - Puppetry
7. எழுத்திலக்கணம் - Orthography
8. உரையாடல் - Dialogue

## அலகுத் தேர்வு

### இயல் : ஒன்று

**காலம் : 30 நிமிடம்** **மதிப்பெண் :20**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 4×1=4

1. 'நெறி' என்னும் சொல்லின் பொருள் ........................
அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்

2. வானில் ...................... கூட்டம் திரண்டால் மழை பொழியும்.
அ) அகில் ஆ) முகில் இ) துகில் ஈ) துயில்

3. மொழியின் முதல் நிலை பேசுதல் ...................... ஆகியனவாகும்.
அ) படித்தல் ஆ) கேட்டல் இ) எழுதுதல் ஈ) வரைதல்

4. பொருந்தாத சொல்லை எடுத்தெழுதுக.
அ) பசு ஆ) வீடு இ) ஆறு ஈ) கரு

**II. குறு விடை தருக.** 3×2=6

5. தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகள் யாவை?
6. மொழியின் இருவடிவங்கள் யாவை?
7. குற்றியலிகரம் என்றால் என்ன? சான்று தருக.

**III. சிறு விடை தருக.** 2×3=6

8. கவிஞர் தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?
9. கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?

**IV. அடிபிறழாமல் எழுதுக.** 1×4=4

10. 'கொல்லா விரதம் ...' எனத் தொடங்கி, .....தேன்மொழியாம்' என முடியும் நாமக்கல் கவிஞர் பாடல்.

❖❁❖

இயல் 2 கவிதைப் பேழை

# காடு

## மனப்பாடப் பாடல்

பச்சை மயில்நடிக்கும்
பன்றி கிழங்கெடுக்கும்
நச்சர வங்கலங்கும் – கிளியே
நரியெலாம் ஊளையிடும்

அதிமது ரத்தழையை
யானைகள் தின்றபடி
புதுநடை போடுமடீ – கிளியே
பூங்குயில் கூவுமடி!

சிங்கம் புலிகரடி
சிறுத்தை விலங்கினங்கள்
எங்கும் திரியுமடீ – கிளியே
இயற்கை விடுதியிலே!

**நூல்** : **சுரதாவின் கவிதைகள் தொகுப்பு**
**ஆசிரியர்** : **சுரதா (இராசகோபாலன்)**



**இயற்பெயர்** : இராசகோபாலன்
**பிறப்பு** : 23.11.1921
**சிறப்புப்பெயர்** : உவமைக்கவிஞர்
**படைப்புகள்** : தேன்மழை, சாவின் முத்தம், உதட்டில் உதடு, பட்டத்தரசி, சுவரும் சுண்ணாம்பும், துறைமுகம், வார்த்தைவாசல், எச்சில் இரவு, அமுதும் தேனும்.

### சொல்லும் பொருளும்

ஈன்று – தந்து
கொம்பு – கிளை
அதிமதுரம் – மிகுந்த சுவை
தீபம் – ஒளி
களித்திட – மகிழ்ந்திட
நச்சரவம் – விடமுள்ள பாம்பு
விடுதி – தங்கும் இடம்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **வாழை, கன்றை _________.**

அ) ஈன்றது ஆ) வழங்கியது இ) கொடுத்தது ஈ) தந்தது [**விடை : அ**]

2. **'காடெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.**

அ) காடு + டெல்லாம் ஆ) காடு + எல்லாம்
இ) கா + டெல்லாம் ஈ) கான் + எல்லாம் [**விடை : ஆ**]

3. **'கிழங்கு + எடுக்கும்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _________.**

அ) கிழங்குஎடுக்கும் ஆ) கிழங்கெடுக்கும்
இ) கிழங்குடுக்கும் ஈ) கிழங்கொடுக்கும் [**விடை : ஆ**]

### நயம் அறிக

**பாடலிலுள்ள மோனை, எதுகை, இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.**

| மோனை | எதுகை | இயைபு |
|---|---|---|
| செய்யுளில் அடி (அல்லது) சீரில் உள்ள சொற்களில் முதல் எழுத்து ஒன்று போல (ஒரே மாதிரி) வருவது மோனை ஆகும். | செய்யுளில் அடி (அல்லது) சீரில் உள்ள சொற்களில் இரண்டாம் எழுத்து ஒன்று போல (ஒரே மாதிரி) வருவது எதுகை ஆகும். | செய்யுளில் ஒவ்வோர் அடியின் இறுதியிலும் உள்ள சீரோ எழுத்தோ ஒன்று போல (ஒரே மாதிரி) வருவது இயைபு ஆகும். |
| **பாடலில் உள்ள மோனைச் சொற்கள்** | **பாடலில் உள்ள எதுகைச் சொற்கள்** | **பாடலில் உள்ள இயைபுச் சொற்கள்** |
| கார்த்திகை - காடெல்லாம்<br>பார்த்திட - பார்வை<br>காடு - காய்கனி<br>பச்சை - பன்றி<br>நச்சர - நரியெலாம்<br>சிங்கம் - சிறுத்தை | கார்த்திகை-பார்த்திட-பார்வை<br>களித்திடவே - குளிர்ந்திடவே<br>குரங்கு - மரங்கள்<br>பச்சை - நச்சர<br>சிங்கம் - எங்கும் | ஈன்றெடுக்கும் - நிழல் கொடுக்கும்<br>கனிபறிக்கும் - தடையிருக்கும்<br>- கிழங்கெடுக்கும் |

### குறு வினா

1. **காட்டுப்பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?**

காட்டுப்பூக்களுக்குக் கார்த்திகை விளக்கை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்.

2. **காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?**

✍ காட்டிலுள்ள மலர்களைக் காணும் கண்கள் குளிர்ச்சி பெறும்.

✍ காடு பல வகையான பொருள்களையும் காய்கனிகளையும் தரும்.

✍ எல்லோரும் சேர்ந்துமகிழ்ந்திட குளிர்ந்த நிழல் தரும்.

✍ காட்டு விலங்குகளுக்கு உணவாகக் கனி தரும்.

### சிறு வினா

**'காடு' பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.**

✍ பன்றிகள் காட்டிலுள்ள கிழங்குகளைத் தோண்டி உண்ணும்.

✍ நரிக் கூட்டம் ஊளையிடும்.

✍ மிகுந்த சுவையுடைய தழையை யானைகள் தின்றபடி புதிய நடைபோடும்.

✍ இயற்கைத் தங்குமிடமாகிய காட்டில் சிங்கம், புலி, கரடி, சிறுத்தை ஆகிய விலங்குகள் எங்கும் அலைந்து திரியும்.

### சிந்தனை வினா

**காட்டை இயற்கை விடுதி என்று கவிஞர் கூறக் காரணம் என்ன?**

✍ பறவைகள், விலங்குகள் உள்ளிட்ட அஃறிணை உயிர்களுக்குத் தேவையான உறையுள் (தங்குமிடம்) - உணவு ஆகியன காட்டில் இயற்கையாகவே உள்ளன.

✍ மரங்கள், செடி கொடிகள் ஆகியன பூச்சிகள், புழுக்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றிற்குத் தங்குமிடம் மற்றும் உணவை இயற்கை அன்னையே வழங்குவதால், காட்டை இயற்கை விடுதியாகக் கவிஞர் கூறுகிறார்.

## கூடுதல் வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. இராசகோபாலன் என்ற இயற்பெயர் கொண்ட கவிஞர்**

அ) பாரதியார் ஆ) உடுமலை நாராயணகவி

இ) சுரதா ஈ) கவிமணி [விடை : இ]

**2. உவமைக்கவிஞர் என்றழைக்கப்படக் கூடிய கவிஞர்**

அ) பாரதியார் ஆ) உடுமலை நாராயணகவி

இ) சுரதா ஈ) கவிமணி [விடை : இ]

**3. தேன்மழை, துறைமுகம், அமுதும் தேனும் முதலிய நூல்களைப் படைத்த கவிஞர்**

அ) பாரதியார் ஆ) உடுமலை நாராயணகவி

இ) சுரதா ஈ) கவிமணி [விடை : இ]

**4. கார்த்திகை விளக்குகள் போன்று இருந்தவை**

அ) காடு ஆ) மலர்கள் இ) காய்கனி ஈ) மயில் [விடை : ஆ]

**5. பொருத்துக.**

1. அதிமதுரம் - அ) மகிழ்ந்திட
2. களித்திட - ஆ) மிகுந்த சுவை
3. கொம்பு - இ) பெற்று
4. ஈன்று - ஈ) கிளை

அ) 1- ஆ 2-அ 3- ஈ 4-இ ஆ) 1-ஈ 2- அ 3-ஆ 4- இ
இ) 1-ஆ 2-அ 3- இ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4- ஈ [**விடை : அ**]

6. **பொருத்துக.**
1. மயில்கள் - அ) கிழங்குகளைத் தோண்டி உண்ணும்
2. பன்றிகள் - ஆ) கலக்கமடையும்
3. பாம்புகள் - இ) புதிய நடை போடும்
4. யானைகள் - ஈ) நடனமாடும்
அ) 1- ஆ 2-அ 3- ஈ 4-இ ஆ) 1-ஈ 2- அ 3-ஆ 4- இ
இ) 1-ஆ 2-அ 3- இ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4- ஈ [**விடை : ஆ**]

7. **________ குயில் கூவுமடி! பாடலடியில் இடம்பெறும் தகுந்த சொல்லால் நிரப்புக.**
அ) கருங் ஆ) பூங் இ) மணிக் ஈ) சிறு [**விடை : ஆ**]

8. **புதுநடை போட்டது எது?**
அ) பாம்பு ஆ) பன்றி இ) குரங்கு ஈ) யானை [**விடை : ஈ**]

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. ________, ________ நமக்கு எப்போதும் காட்சிக்கு இன்பம் தருபவை.
**விடை : காடும் கடலும்**
2. உவமைகளைப் பயன்படுத்தி கவிதை எழுதுவதில் வல்லவர் ________.
**விடை : சுரதா**
3. காடு என்னும் கவிதை அமைந்த நூல் ________. **விடை: சுரதாவின் கவிதைகள்**
4. சுரதாவின் கவிதைகள் என்ற நூலில் காடு என்னும் கவிதை அமைந்த பகுதி ________.
**விடை : இயற்கை எழில்**
5. காடு என்ற கவிதை அமைந்த பாவகை ________. **விடை : கிளிக்கண்ணி**
6. நரிக்கூட்டம் ________. விடை : **ஊளையிடும்**

**குறு வினா**

1. **சுரதா என்பதன் பெயர்க்காரணம் யாது?**
இராசகோபாலன் பாரதிதாசன் மீது பற்றுக்கொண்டவர். பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம். எனவே தம் பெயரைச் சுப்புரத்தின தாசன் எனமாற்றிக்கொண்டார்.அதன் சுருக்கமே சுரதா என்பதாகும்.

2. **கவிஞர் சுரதாவை ‘உவமைக்கவிஞர்’ என அழைக்கப்படுவது ஏன்?**
உவமைகளைப் பயன்படுத்தி கவிதை எழுதுவதில் வல்லவர் என்பதால் சுரதா ‘உவமைக்கவிஞர்’ என அழைக்கப்படுகிறார்.

3. **சுரதாவின் படைப்புகள் யாவை?**
1. தேன்மழை 2. துறைமுகம் 3. அமுதும் தேனும்

4. **கிளிக்கண்ணி என்னும் பாவகை குறித்து எழுதுக.**
கிளியின் மொழி போன்ற இனிய சொற்களைப் பேசும் பெண்ணை நோக்கிக் கூறுவதாக இனிய சந்தத்தில் பாடப்படும் இசைப்பாடல் கிளிக்கண்ணி ஆகும்.

தமிழ்

5. **'காட்டின் வளமே நாட்டின் வளம்' எனக் அறிஞர் கூறக் காரணம் யாது?**

ஒரு நாட்டின் வளம், அந்நாட்டின் மொத்த நிலப்பரப்பில் அமைந்துள்ள காடுகளின் அளவைப் பொருத்தே மதிப்பிடப்படுகின்றது. அதனால் தான் 'காட்டின் வளமே நாட்டின் வளம்' என அறிஞர் கூறுகின்றனர்.

6. **'காடு' பாடலில் பறவைகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.**

✍ பச்சை நிறமுடைய மயில்கள் நடனமாடும்.

✍ பூக்கள் பூத்துக் குலுங்கும் மரங்களில் குயில்கள் கூவும்.

7. **இயற்கைத் தங்குமிடம் எது?**

இயற்கைத் தங்குமிடம் : காடு.

8. **எங்கும் திரியுமடீ! – இதில் 'திரிந்தவை' எவை?**

சிங்கம், புலி, கரடி, சிறுத்தை.

**சிறு வினா**

1. **சுரதா – குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| **இயற்பெயர்** | : | இராசகோபாலன் |
| **பிறப்பு** | : | 23.11.1921 |
| **சிறப்புப்பெயர்** | : | உவமைக்கவிஞர் |
| **பெயர்க் காரணம்** | : | பாரதிதாசன் மீது பற்றுக்கொண்டவர். பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம். எனவே தம் பெயரைச் சுப்புரத்தினதாசன் என மாற்றிக் கொண்டார். அதன் சுருக்கமே **'சுரதா'** என்பதாகும். |
| **படைப்புகள்** | : | 1.தேன்மழை 2. துறைமுகம் 3. அமுதும் தேனும் முதலியன. |

2. **'காடு' என்னும் கவிதையில் இடம் பெறும் அஃறிணை உயிர்கள் யாவை?**

1. குரங்கு 2. கிளி 3. மயில் 4. பன்றி 5. பாம்பு 6. நரி
7. யானை 8. குயில் 9. சிங்கம் 10. புலி 11. கரடி 12. சிறுத்தை

3. **காட்டைக் குறிக்கும் வேறுபெயர்கள் யாவை?**

கா, கால், கான், கானகம், அடவி, அரண், புரவு, பொற்றை, பொழில், தில்லம், அழுவம், இயவு, பழவம், முளரி, வல்லை, விடர், வியல், வனம், முதை, மிளை, இறும்பு, சுரம், பொச்சை, பொதி, முளி, அரில்,அறல், பதுக்கை, கணையம்.

4. **கவிஞர் தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?**

தேன் இனிமையானது; தூய்மையானது; சுவைமிக்கது; இன்பம் கொடுப்பது. அதைப் போல இனிமையானது, தூய்மையானது, சுவைமிக்கது, இன்பம் கொடுப்பது தமிழ். எனவே கவிஞர் தமிழைத் தேனுடன் ஒப்பிடுகிறார்.

❖❀❖

இயல் 2 கவிதைப் பேழை

# அப்படியே நிற்கட்டும் அந்த மரம்



**பெயர்** : இராசமார்த்தாண்டன்

**திறன்கள்** : இதழாளர், கவிதைத் திறனாய்வாளர்.

**பரிசு** : ராஜமார்த்தாண்டன் கவிதைகள் நூலுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றவர்.

**படைப்புகள்** : ராஜமார்த்தாண்டன் கவிதைகள், சிறந்த கவிதைகளைத் தொகுத்து கொங்குதேர் வாழ்க்கை என்னும் நூல் படைத்துள்ளார்.

## சொல்லும் பொருளும்

1. பரவசம் – மகிழ்ச்சிப் பெருக்கு
2. துஷ்டி கேட்டல் – துக்கம் விசாரித்தல்
3. தாண்டி – கடந்து
4. பழந்தின்னி – பழம் உண்ணும்
5. பரவி – விரவி
6. வடகோடி – வட எல்லை

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது ________**

அ) பச்சை இலை ஆ) கோலிக்குண்டு

இ) பச்சைக்காய் ஈ) செங்காய் [**விடை : ஆ**]

**2. 'சுட்ட பழங்கள்' என்று குறிப்பிடப்படுபவை ________**

அ) மண் ஒட்டிய பழங்கள் ஆ) சூடான பழங்கள்

இ) வேகவைத்த பழங்கள் ஈ) சுடப்பட்ட பழங்கள் [**விடை : அ**]

**3. 'பெயரறியா' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________**

அ) பெயர + றியா ஆ) பெயர் + ரறியா

இ) பெயர் + அறியா ஈ) பெயர + அறியா [**விடை : இ**]

**4. 'மனமில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ________**

அ) மன + மில்லை ஆ) மனமி + இல்லை

இ) மனம் + மில்லை ஈ) மனம் + இல்லை [**விடை : ஈ**]

**5. 'நேற்று + இரவு' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________**

அ) நேற்றுஇரவு ஆ) நேற்றிரவு

இ) நேற்றுரவு ஈ) நேற்இரவு [**விடை : ஆ**]

தமிழ்

**குறுவினா**

**1. நாவல் மரம் எத்தனை தலைமுறையாக அங்கு நின்றிருந்தது?**

நாவல் மரம் இரண்டு தலைமுறையாக அங்கு நின்றிருந்தது.

**2. சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க உதவியோர் யாவர்?**

| | | |
|---|---|---|
| 1. காக்கை | 2. குருவி | 3. மைனா |
| 4. பெயரறியாப் பவைகள் | 5. அணில் | 6. காற்று |

**சிறுவினா**

**நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை?**

- ✍ ஊரின் வட எல்லையில் ஐந்து வயதில் பார்த்த போதும், ஐம்பது வயதைத் தாண்டி இப்பொழுது பார்க்கின்ற போதும், தாத்தாவின் தாத்தா நட்டு வைத்த நாவல் மரம் அப்படியே இருக்கின்றது.
- ✍ அந்த நாவல் மரத்தில் பச்சைக்காய்கள் மாறி செந்நிறமாய்ப் பழுக்கும் போது சிறுவர் மனங்களில் மகிழ்ச்சி பொங்கும்.
- ✍ பளபளக்கும் பச்சை இலைகளுடக் கருநீலக்கோலிக்குண்டுகள் போல நாவற்பழங்கள் கிளைகளில் தொங்குவதைப் பார்க்கும் போதே நாவில் நீர் ஊறும்.
- ✍ காக்கை, குருவி, மைனா, பெயரறியாப் பவைகள், அணில், காற்று ஆகின உதிர்த்துவிடும் நாவல் பழங்களைப் பொறுக்க சிறுவர் கூட்டம் அலைமோதும்.
- ✍ தங்கைகள் தங்கள் அக்காக்களுக்காகக் கையில் பெட்டியுடன் நாவல்பழம் பொறுக்குகின்றனர்.
- ✍ இரவின் மெல்லிய நிலா வெளிச்சத்தில் பழந்தின்னி வௌவால் கூட்டம் மரத்தில் பழம் தின்னப் படை எடுக்கும்.
- ✍ அப்பா வரும் வரை நாவல் மர நிழலில் கிளியாந்தட்டு விளையாடுவோம். நேற்று நண்பகல் என் மகன் விளையாடியதும் இந்த நாவல் மர நிழலில்தான்.

**சிந்தனை வினா**

**பெருங்காற்றில் வீழ்ந்த மரத்தைக் கவிஞர் ஏன் பார்க்க விரும்பவில்லை?**

- ✍ பெருங்காற்றினால் நாவல் மரம் வேரோடு வீழ்ந்து விட்டது. அதனைப் பார்க்க ஊர்மக்கள் பதற்றத்தில் விரைந்து செல்கின்றனர்.
- ✍ குன்றுகளின் நடுவே உள்ள பெரிய மலை போல அந்த நாவல் மரம் கவிஞர் மனதில் நிற்பதால் பெருங்காற்றில் வீழ்ந்த மரத்தை அவர் பார்க்க விரும்பவில்லை.
- ✍ அந்த மரம் கவிஞர் நினைவில் வாழ்கின்றது.

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. சிறந்த கவிதைகளைத் தொகுத்து கொங்குதேர் வாழ்க்கை என்னும் நூல் படைத்த கவிஞர்.**

அ) ராஜமார்த்தாண்டன் ஆ) கவிமணி

இ) சுரதா ஈ) உடுமலை நாராயணகவி [விடை : அ]

**2. ராஜமார்த்தாண்டன் கவிதைகள் என்னும் நூலுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றவர்**

அ) ராஜமார்த்தாண்டன் ஆ) கவிமணி
இ) சுரதா ஈ) உடுமலை நாராயணகவி [விடை : அ]

**3. 'பெருவாழ்வு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ______**

அ) பெரு + வாழ்வு ஆ) பெ + ருவாழ்வு
இ) பெருமை + வாழ்வு ஈ) பேர் + வாழ்வு [விடை : இ]

**4. ஊரின் வடகோடியில் இருந்த மரம் ______**

அ) புளிய மரம் ஆ) மாமரம் இ) நாவல் மரம் ஈ) அரசமரம் [விடை : இ]

**5. தாத்தா நட்டு வைத்த மரம்**

அ) புளிய மரம் ஆ) மாமரம் இ) நாவல் மரம் ஈ) அரசமரம் [விடை : இ]

**6. பொருத்துக.**

1. பரவசம் - அ) துக்கம் விசாரித்ததல்
2. துஷ்டி கேட்டல் - ஆ) விரவி
3. பரவி - இ) எல்லை
4.கோடி - ஈ) மகிழ்ச்சிப்பெருக்கு

அ) 1- ஆ 2-அ 3- ஈ 4-இ ஆ) 1-ஈ 2- அ 3-ஆ 4- இ
இ) 1-ஆ 2-அ 3- இ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4- ஈ [விடை : ஆ]

**7. 'செங்காய்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ______**

அ) செம்மை + காய் ஆ) செம் + காய்
இ) செங் + காய் ஈ) செ + காய் [விடை : அ]

**8. இரவில் படையெடுத்து வரும் பழந்தின்னி ______**

அ) வௌவால் கூட்டம் ஆ) காக்கைக் கூட்டம்
இ) குருவிக் கூட்டம் ஈ) மைனாக் கூட்டம் [விடை : அ]

**9. நாவற்பழங்களை உதிர்த்துவிடுவனவற்றுள் பறவைகள் அல்லாத ஒன்று ______**

அ) காக்கை ஆ) குருவி இ) அணில் ஈ) மைனா [விடை : இ]

**10. பெருவாழ்வு வாழ்ந்த மரம் ______**

அ) புளிய மரம் ஆ) மாமரம் இ) நாவல் மரம் ஈ) அரசமரம் [விடை : இ]

**11. நேற்று இரவுப் பேய்க்காற்றில் வேறோடு சாய்ந்தது ______**

அ) புளிய மரம் ஆ) மாமரம் இ) நாவல் மரம் ஈ) அரசமரம் [விடை : இ]

**12. குன்றுகளின் நடுவே மாமலை போன்றது ______**

அ) புளிய மரம் ஆ) மாமரம் இ) நாவல் மரம் ஈ) அரசமரம் [விடை : இ]

**13. கொல்லிப்பாவை என்னும் சிற்றிதழை நடத்தியவர்**

அ) ராஜமார்த்தாண்டன் ஆ) கவிமணி
இ) சுரதா ஈ) உடுமலை நாராயணகவி [விடை : அ]

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. நிலமடந்தைக்கு இயற்கை சூட்டிய மணிமகுடங்களே ______. **விடை : மரங்கள்**
2. ______ பற்றிய நினைவுகள் பெரும்பாலான மனிதர்களின் உள்ளங்களுக்குள் புதைந்து கிடக்கின்றன. **விடை : மரங்கள்**
3. ______ பழங்களைப் பொறுக்க சிறுவர் கூட்டம் அலைமோதும். **விடை : நாவல்**
4. தங்கைகள் தங்கள் அக்காக்களுக்காகக் கையில் பெட்டியுடன் ______ பொறுக்குகின்றனர் **விடை : நாவல்பழம்**
5. அப்படியே நிற்கட்டும் அந்த மரம் – என்ற நூலை இயற்றியவர் ______. **விடை : ராஜமார்த்தாண்டன்**
6. குன்றுகளின் நடுவே மாமலை போல நின்றது ______. **விடை : மாமரம்**

**குறு வினா**

**1. நாவல் மரம் தோற்றம் குறித்துக் கவிஞர் கூறுவன யாவை?**

ஊரின் வட எல்லையில் ஐந்து வயதில் பார்த்த போதும், ஐம்பது வயதைத் தாண்டி இப்பொழுது பார்க்கின்ற போதும், தாத்தாவின் தாத்தா நட்டு வைத்த நாவல் மரம் அப்படியே இருக்கின்றது.

**2. சிறுவர் மனங்களில் மகிழ்ச்சி பொங்கக் காரணம் யாது?**

நாவல் மரத்தில் பச்சைக்காய்கள் மாறி செந்நிறமாய்ப் பழுக்கும் போது சிறுவர் மனங்களில் மகிழ்ச்சி பொங்கும்.

**3. எப்போது நாவில் நீர் ஊறும்?**

பளபளக்கும் பச்சை இலைகளுடக் கருநீலக்கோலிக்குண்டுகள் போல நாவற்பழங்கள் கிளைகளில் தொங்குவதைப் பார்க்கும் போதே நாவில் நீர் ஊறும்.

**4. சிறுவர் கூட்டம் அலைமோதக் காரணம் யாது?**

காக்கை, குருவி, மைனா, பெயரறியாப் பவைகள், அணில், காற்று ஆகின உதிர்த்துவிடும் நாவல் பழங்களைப் பொறுக்க சிறுவர் கூட்டம் அலைமோதும்.

**5. தங்கைகள் யாருக்காக நாவல் பழம் பொறுக்குகின்றனர்?**

தங்கைகள் தங்கள் அக்காக்களுக்காகக் கையில் பெட்டியுடன் நாவல்பழம் பொறுக்குகின்றனர்.

**6. இரவு நேரத்தில் நாவல்மரத்தை நோக்கிப் படைஎடுத்தது எது? ஏன்?**

இரவின் மெல்லிய நிலா வெளிச்சத்தில் பழந்தின்னி வௌவால் கூட்டம் மரத்தில் பழம் தின்னப் படை எடுக்கும்.

**7. ஊர்மக்கள் எதனைப் பார்க்கச் சென்றனர்?**

பெருங்காற்றினால் நாவல் மரம் வேரோடு வீழ்ந்து விட்டது. அதனைப் பார்க்க ஊர்மக்கள் பதற்றத்தில் விரைந்து செல்கின்றனர்.

**8. கவிஞர் மனதில் என்றும் நிற்பது எது?**

குன்றுகளின் நடுவே உள்ள பெரிய மலை போல அந்த நாவல் மரம் கவிஞர் மனதில் என்றும் நிற்கிறது.

**சிறு வினா:**

**1. கவிஞர் ராஜமார்த்தாண்டன் – குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | இராசமார்த்தாண்டன் |
| **திறன்கள்** | : | இதழாளர், கவிதைத் திறனாய்வாளர். |
| **பரிசு** | : | ராஜமார்த்தாண்டன் கவிதைகள் நூலுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றவர். |
| **படைப்புகள்** | : | ராஜமார்த்தாண்டன் கவிதைகள், அப்படியே நிற்கட்டும் அந்த மரம், சிறந்த கவிதைகளைத் தொகுத்து கொங்குதேர் வாழ்க்கை என்னும் நூல் படைத்துள்ளார். |

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் சுற்றுப்புறத்திலுள்ள ஏதேனும் ஒரு மரம் குறித்து வருணனையாக ஐந்து தொடர்கள் எழுதுக.**

**பலாமரம்**

✍ நெடுநெடுனு வளர்ந்த மரம், நேர்த்தியான பலாமரம்.
✍ முக்கனியில் இராண்டாம் கனி தரு மரம்.
✍ பெரும்பழம் சுமந்ததால் உன்மேனி இளைத்ததோ?
✍ பழுமரத்தை நாடி பரவசமாய் பறவை வரும்.
✍ கொடுக்க குறையாத அமுதசுரபி மரம் பலாமரம்.

**2. உங்கள் பகுதிகளில் மரங்களின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**

வேப்ப மரம், புளிய மரம், அரசமரம், ஆல மரம், வாழை மரம், முருங்கை மரம், தென்னை மரம்,பனை மரம், பாக்கு மரம், பலா மரம், தேக்கு மரம், சந்தன மரம், அத்தி மரம், வாகை மரம், புங்க மரம்.

❖❁❖

இயல் 2 உரைநடை உலகம்

# விலங்குகள் உலகம்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. ஆசிய யானைகளில் ஆண் – பெண் யானைகளை வேறுபடுத்துவது _______.**
அ) காது ஆ) தந்தம் இ) கண் ஈ) கால்நகம் [**விடை : ஆ**]

**2. தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் _______.**
அ) வேடந்தாங்கல் ஆ) கோடியக்கரை
இ) முண்டந்துறை ஈ) கூந்தன்குளம் [**விடை : இ**]

**3. 'காட்டாறு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______.**
அ) காடு + ஆறு ஆ) காட்டு + ஆறு
இ) காட் + ஆறு ஈ) காட் + டாறு [**விடை : அ**]

**4. 'அனைத்துண்ணி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______.**
அ) அனைத்து + துண்ணி ஆ) அனை + உண்ணி
இ) அனைத் + துண்ணி ஈ) அனைத்து + உண்ணி [**விடை : ஈ**]

**5. 'நேரம் + ஆகி' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _______.**
அ) நேரமாகி ஆ) நேராகி இ) நேரம்ஆகி ஈ) நேர்ஆகி [**விடை : அ**]

**6. 'வேட்டை + ஆடிய' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _______.**
அ) வேட்டைஆடிய ஆ) வேட்டையாடிய
இ) வேட்டாடி ஈ) வேடாடிய [**விடை : ஆ**]

### கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. 'காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு' – என்று அழைக்கப்படும் விலங்கு _______.
**விடை : புலி**

2. யானைக் கூட்டத்திற்கு ஒரு _______ யானைதான் தலைமை தாங்கும்.
**விடை : பெண்**

3. கரடிகளைத் தேனீக்களிடமிருந்து காப்பது அதன் _______. **விடை : அடர்ந்த முடிகள்**

### குறு வினா

**1. காடு – வரையறுக்க.**

✍ மனிதர்களின் முயற்சியின்றி வளர்ந்த மரங்கள், செடி, கொடிகள், புல், புதர்கள், பூச்சியினங்கள், பறவைகள், விலங்குகள் போன்ற பல உயிர்களின் வாழ்விடம் காடாகும்.

✍ இடையிடையே காட்டாறுகளும், நீரோடைகளும் இருக்கும்.

✍ மனிதனின் முதல் இருப்பிடம் காடு.

**2. யானைகள் மனிதர்களை ஏன் தாக்குகின்றன?**

- ✍ யானைகள் பொதுவாக மனிதர்களைத் தாக்குவதில்லை.
- ✍ யானைகள் செல்லும் வழிப்பாதைகளில் மனிதர்கள் குறுக்கிடும்போது, அவர்களைத் தாக்குகின்றன.
- ✍ மேலும் யானைக்குக் கண்பார்வைக் குறைவு, கேட்கும் ஆற்றலும் மோப்ப ஆற்றலும் மிகுதியாக உள்ளது.

**3. கரடி 'அனைத்துண்ணி' என அழைக்கப்படுவது ஏன்?**

பழங்கள், தேன், உதிர்ந்த மலர்கள், காய்கள், கனிகள், புற்றீசல், கரையான் என அனைத்தையும் உண்பதால் கரடி 'அனைத்துண்ணி' என அழைக்கப்படுகின்றது.

**4. மானின் வகைகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.**

1. புள்ளிமான் 2. சருகுமான் 3. மிளாமான் 4. வெளிமான்

### சிறு வினா

**புலிகள் குறித்து நீங்கள் அறிந்துகொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

- ✍ புலிகள் தனித்து வாழும் இயல்பு உடையன.
- ✍ ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஒரு புலி மட்டுமே வாழும். மற்ற புலிகள் அந்த எல்லைக்குச் செல்லாது.
- ✍ கருவுற்ற புலியானது 90 நாட்களில் இரண்டு அல்லது மூன்று குட்டிகள் வரைப் பெற்றெடுக்கும். அந்தக் குட்டிகளை இரண்டு ஆண்டுகள் வரை வளர்த்து வரும்.
- ✍ அவை வேட்டையாடக் கற்றவுடன் அவற்றுக்கான எல்லைகளைப் பிரித்து அனுப்பிவிடும்.

### சிந்தனை வினா

**காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுக.**

- ✍ மழை வளம் குறையும்.
- ✍ மண் தரிசு நிலமாக மாறிவிடும்.
- ✍ காட்டுயிரிகள் வாழ்விடம் அழியும்.
- ✍ குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படும்.
- ✍ உணவுத் தட்டுப்பாடு ஏற்படும்.
- ✍ மண் வளம் சேர்க்கும் நுண்ணுயிரிகள் அழியும்.
- ✍ மண்ணரிப்பு ஏற்படும்.
- ✍ நோய் தீர்க்கும் மூலிகைகள் அழியும்.
- ✍ பருவநிலை மாறும்.
- ✍ புவி வெப்பமயமாகும்.
- ✍ நிலத்தடி நீர் குறையும்.

## கூடுதல் வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. தமிழ்நாட்டில் வனக்கல்லூரி அமைந்த இடம் _______.**

அ) மேட்டுப்பாளையம் ஆ) குன்னூர்
இ) ஊட்டி ஈ) கோத்தகிரி [**விடை : அ**]

**2. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம் _______.**

அ) ஈரோடு ஆ) கோவை இ) நாமக்கல் ஈ) சேலம் [**விடை : ஆ**]

3. **தமிழ்நாட்டில் இரண்டாவது மிகப்பெரிய காப்பகம் அமைந்துள்ள இடம்**
அ) வேடந்தாங்கல் ஆ) கோடியகரை
இ) முண்டந்துறை ஈ) கூந்தக் குளம் [**விடை : இ**]

4. **உலகில் உள்ள யானை வகைகள்**
அ) ஒன்று ஆ) இரண்டு இ) மூன்று ஈ) நான்கு [**விடை : ஆ**]

5. **ஆண், பெண் ஆகிய இரண்டுக்கும் தந்தம் கொண்ட யானை வகை ________**
அ) ஆப்ரிக்க யானை ஆ) ஆசிய யானை
இ) அமெரிக்க யானை ஈ) தாய்லாந்து யானை [**விடை : அ**]

6. **நாள் ஒன்றுக்கு 250 கிலோ புல், இலை தழைகளை உணவாகக் கொள்ளும் விலங்கு**
அ) கரடி ஆ) மான் இ) புலி ஈ) யானை [**விடை : ஈ**]

7. **கேட்கும் ஆற்றலும் மோப்ப ஆற்றலும் மிகுதியாக உள்ள விலங்கு**
அ) கரடி ஆ) மான் இ) புலி ஈ) யானை [**விடை : ஈ**]

8. **நன்கு வளர்ந்த கரடியின் எடை**
அ) 160 கி ஆ) 100 கி இ) 106 கி ஈ) 601 கி [**விடை : அ**]

9. **தனக்கான உணவை வேட்டையாடிய பின்பு வேறு எந்த உணவையும் வேட்டையாடாத விலங்கு**
அ) கரடி ஆ) மான் இ) புலி ஈ) யானை [**விடை : இ**]

10. **பண்புள்ள விலங்கு என்றழைக்கப்படும் விலங்கு**
அ) கரடி ஆ) மான் இ) புலி ஈ) யானை [**விடை : இ**]

11. **இரவில் மட்டும் வேட்டையாடும் தன்மை கொண்ட விலங்கு**
அ) கரடி ஆ) மான் இ) புலி ஈ) யானை [**விடை : இ**]

12. **அழகில் சிறந்த மான் வகை**
அ) புள்ளிமான் ஆ) சருகுமான்
இ) மிளாமான் ஈ) வெளிமான் [**விடை : அ**]

13. **இயற்கை விஞ்ஞானிகள் காட்டுக்கு அரசனாகக் குறிப்பிடும் விலங்கு**
அ) கரடி ஆ) மான் இ) புலி ஈ) சிங்கம் [**விடை : இ**]

14. **'நினைவாற்றல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ________**
அ) நினை + ஆற்றல் ஆ) நினை + வாற்றல்
இ) நினைவு + ஆற்றல் ஈ) நினைவு + வாற்றல் [**விடை : இ**]

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இந்திய வனக்கல்லூரி அமைந்த மாவட்டம் ________. **விடை : கோவை**
2. காட்டுவிலங்குகளின் உறைவிடம் ________. **விடை : முண்டந்துறை புலிகள் காப்பகம்**
3. மனிதனின் முதல் இருப்பிடம் ________. **விடை : காடு**
4. முண்டந்துறை புலிகள் காப்பகத்தின் பரப்பளவு ________. **விடை : 895 சதுர மீட்டர்**

FIRST TERM
5-in-1

5. கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் வனவியல் சார்ந்த படிப்புகள் ________, ________.
விடை : **இளநிலை வனவியல், முதுநிலை வனவியல்**

6. மிகுந்த நினைவாற்றலைக் கொண்ட விலங்கு ________. விடை : **யானை**

7. பாசம் நிறைந்த விலங்கு ________. விடை : **யானை**

8. யானைக்குக் கடிப்பதற்குத் தேவைப்படும் தண்ணீரின் அளவு ________.
விடை : **65 லிட்டர்**

9. ________ ஒரு அனைத்துண்ணி. விடை : **கரடி**

10. காட்டு அரசன் ________. விடை : **சிங்கம்**

11. விஞ்ஞானிகள் என்ற பிறமொழிச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் ________.
விடை : **அறிவியலறிஞர் (அ) அறிவியலாளர்**

## குறுவினா

**1. ஆதினி எங்குச் சென்றாள்? எதற்காகச் சென்றாள்?**

- ஆதினி தன் அம்மாவுடன் முண்டந்துறை புலிகள் காப்பகத்திற்குச் சென்றாள்.
- காட்டு விலங்குகள் பற்றிய புகைப்படத்தொகுப்பிற்குத் தேவையான புகைப்படங்கள் எடுப்பதற்காகச் சென்றாள்.

**2. முண்டந்துறை புலிகள் காப்பகம் குறித்து வன அலுவலர் கூறியது யாது?**

- தமிழ்நாட்டிலேயே இரண்டாவது மிகப்பெரிய காப்பகம் : முண்டந்துறை புலிகள் காப்பகம்.
- 895 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டது.
- யானை, புலி, சிறுத்தை, மான், கரடி, காட்டுமாடு போன்ற அரிய விலங்குகள் வாழ்கின்றன.

– என்று முண்டந்துறை புலிகள் காப்பகம் குறித்து வன அலுவலர் கூறினார்.

**3. முண்டந்துறை புலிகள் காப்பகத்தல் வாழும் அரிய விலங்குகள் யாவை?**

1. யானை 2. புலி 3. சிறுத்தை 4. மான் 5. கரடி 6. காட்டுமாடு

**4. உலகில் உள்ள யானை வகைகள் எத்தனை? அவை யாவை?**

உலகில் இரண்டு வகையான யானைகள் உள்ளன. அவையாவன:

1. ஆசிய யானை 2. ஆப்பிரிக்க யானை

**5. ஆசிய யானைக்கும் ஆப்பிரிக்க யானைக்கும் உள்ள வேறுபாடு யாது?**

**ஆசிய யானை**

ஆண் யானைக்குத் தந்தம் உண்டு, பெண் யானைக்குத் தந்தம் இல்லை.

**ஆப்பிரிக்க யானை**

ஆண், பெண் யானைகள் இரண்டுக்குமே தந்தம் உண்டு.

**6. ஒரு காட்டு வளத்தைக் குறிக்கும் குறியீடு எது?**

புலியே ஒரு காட்டு வளத்தைக் குறிக்கும் குறியீடாகும்.

**7. தமிழ்நாட்டில் வனக் கல்லூரி எங்கு அமைந்துள்ளது?**

தமிழ்நாட்டில் வனக் கல்லூரி கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் அமைந்துள்ளது.

**8. வனவியல் சார்ந்த படிப்புகள் யாவை? அவை எங்குள்ளன?**

✍ வனவியல் சார்ந்த படிப்புகள் இளநிலை வனவியல், முதுநிலை வனவியல் ஆகும்.

✍ கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் அவை கற்பிக்கப்படுகின்றன.

**9. புலியைப் பண்புள்ள விலங்கு எனக் கூறக் காரணம் யாது?**

தனக்கான உணவை வேட்டையாடிய பின்பு வேறு எந்த உணவையும் வேட்டையாடாத விலங்கு. எனவே புலியைப் பண்புள்ள விலங்கு எனக் கூறுகின்றனர்.

**10. புலியைக் காட்டுக்கு அரசன் என இயற்கை விஞ்ஞானிகள் கூறக் காரணம் யாது?**

✍ நீளம், உயரம், பருமன், எடை, பலம், வேட்டைத் திறன் ஆகிய அனைத்திலும் சிங்கத்தைவிட புலியே உயர்ந்தது.

✍ எனவே, புலியைக் காட்டுக்கு அரசன் என இயற்கை விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

**11. அழகில் சிறந்த மான் வகை எது?**

நம் நாட்டில் உள்ள புள்ளி மானே அழகில் சிறந்ததாகும்.

**12. சிங்கங்களின் வகைகளைக் குறிப்பிடுக.**

1. ஆசியச் சிங்கம் 2. ஆப்பிரிக்ச் சிங்கம்

**13. யானைகள் அடிக்கடி இடம்பெயரக் காரணம் யாது?**

யானைகள் தண்ணீர் மற்றும் உணவுக்காக இடம்பெயர்ந்து கொண்டே இருக்கும்.

**14. சிங்கம் குறித்து நீவிர் அறிந்த செய்திகள் யாவை?**

✍ ஆசியச் சிங்கம், ஆப்பிரிக்கச் சிங்கம் என இரண்டு வகைச் சிங்கங்கள் உள்ளன.

✍ இந்தியாவில் குஜராத்தில் ‘கிர் சரணாலயத்தில்’ மட்டுமே ஆசியச் சிங்கங்கள் உள்ளன.

## சிறு வினா

**1. யானைகள் குறித்து நீவிர் அறிந்ததை எழுதுக.**

✍ யானைகள் எப்போதும் கூட்டமாகவே வாழும்.

✍ கூட்டத்திற்குப் பெண் யானை தலைமை தாங்கும்.

✍ தண்ணீர் மற்றும் உணவுக்காக யானைகள் இடம்பெயர்ந்து கொண்டே இருக்கும்.

✍ நாள் ஒன்றுக்கு 250 கிலோ புல், இலை தழைகளை உணவும், 60 லிட்டர் தண்ணீரும் தேவைப்படும்.

✍ மிகுந்த நினைவாற்றலும் பாசமும் கொண்ட விலங்கு.

✍ கண்பார்வைக் குறைவு, மோப்ப ஆற்றல் மிகுதி.

**2. கரடி குறித்து நீவிர் அறிந்த செய்திகள் யாவை?**

✍ நன்கு வளர்ந்த கரடி 160 கிலோ எடை வரை இருக்கும்

✍ பழங்கள் மற்றும் தேன் உண்பதற்காக கரடி மரம் ஏறும்.

✍ பழங்கள், தேன், உதிர்ந்த மலர்கள், காய்கள், கனிகள், புற்றீசல், கரையான் என அனைத்தையும் உண்பதால் கரடி 'அனைத்துண்ணி' என அழைக்கப்படுகின்றது.

✍ தன் அடர்ந்த முடிகள் மூலம் எதிரிகளிடம் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்கின்றது.



## கற்பவை கற்றபின்

**1. விலங்குகள் தொடர்பான பழமொழிகளைத் திரட்டி வருக.**

எ.கா: புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.

1. பார்த்தால் பசு, பாய்ந்தால் புலி.
2. சாது மிரண்டால் காடு கொள்ளாது.
3. யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே.
4. நொண்டிக் கழுதைக்குச் சருக்கினது சாக்காம்.
5. வீட்டில் எலி, வெளியில் புலி.
6. நாயப் பொறந்தாலும் நல்லாப் பொறக்கனும்.
7. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசைன.
8. ஆடு மாடு இல்லாதவன் அடைமழைக்கு ராசா.
9. தூங்கணாங் குருவிக்குக் குரங்கு புத்தி சொல்லுச்சாம்.

**2. காட்டு விலங்குகளின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.**



❖❁❖

இயல் 2 விரிவானம்

# இந்திய வனமகன்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார்?**

**முன்னுரை:**

அஸ்ஸாம் மாநிலத்தின் ஜோர்விராட் மாவட்டத்தைச் சார்ந்தவர் ஜாதவ்பயேங். 'இந்திய வனமகன்' என்று இவர் அழைக்கப்படுகிறார். பிரம்மபுத்திரா ஆற்றின் நடுவே உள்ள மிகப்பெரிய தீவில் தனது கடின உழைப்பால் ஒரு காட்டை உருவாக்கினார். அதனை எப்படி உருவாக்கினார்? என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

**மரம் வளர்க்கும் எண்ணம்:**

1979ல் பிரம்மபுத்திரா ஆற்றில் பெருவெள்ளம் ஏற்பட்டது. மரங்கள் இல்லாத தீவில் பாம்புகள் கரை ஒதுங்கின.சில பாம்புகள் இறந்தன. பல பாம்புகள் வெப்பம் தாங்காமல் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தது. இக்காட்சி ஜாதவ்பயேங்கை மிகவும் பாதித்தது. ஊர்ப் பெரியவர்கள் 'தீவில் மரங்கள் இல்லாததுதான் காரணம்' என்றனர். அவரிடம் தீவு முழுவதும் மரம் வளர்க்கும் எண்ணம் தோன்ற ஆரம்பித்தது. ஊர் மக்களிடம் தீவில் மரம் வளர்க்கலாம் என்று அவர் கூறிய போது, அதனை யாரும் ஏற்கவில்லை.

**விடா முயற்சி:**

ஜாதவ்பயேங் தீவில் விதைகளை விதைக்கத் தொடங்கினார். நன்கு பராமரித்தார். ஆனால் அவைகள் முளைக்கவில்லை. வனத்துறை அறிவுறுத்தலால் மூங்கில் மரங்களை வளர்க்கத் தொடங்கினார். அவை நன்கு வளர ஆரம்பித்தது. அவர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்.மூங்கிலைத் தவிர வேறு எந்த மரமும் இத்தீவில் வளரவில்லை. அசாம் வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜாதுநாத் அவர்களின் அறிவுறுத்தலின்படி மண்புழுவுடன் சிவப்புக் கட்டெறும்பை அத்தீவு மண்ணில் விட்டார். சிறிது சிறிதாக மண்ணின் தன்மை மாறி பசும்புல்லும் மரங்களும் வளரத் தொடங்கின.

**புதிய காடு உருவானது:**

மரங்களில் விளைந்த பழங்களை உண்டு, அதன் கொட்டைகளை விதையாகச் சேமித்து வைத்து விதைத்தார். கால்நடைகளை வளர்த்து அதன் சாணங்களை மரங்களுக்கு உரமாக்கினார். மழை பெய்யாத காலங்களில் பானை பெரிய மூங்கில் துணை கொண்டு சொட்டு சொட்டாக நீரினை மரங்களுக்குவிட்டார். மரங்கள் பெருகி வளர்ந்து, அத் தீவு பெருங்காடானது.யானைகள், பாம்புகள், கழுகுகள், காண்டாமிருகங்கள், புலிகள் முதலிய காட்டு விலங்குகள் வரத்தொடங்கின.

**முடிவுரை:**

ஜாதவ்பயேங் போல நாமும் காட்டை உருவாக்க முயல்வோம். அதற்கு அடையாளமாக நம் வீட்டைச் சுற்றி மரங்களை நட்டு, அவை நன்கு வளரும் வரை காக்க வேண்டும். இந்திய வனமகன் வழியில் நாமும் செல்வோம்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!
காட்டினை உருவாக்குவோம்!

இயல் 2 கற்கண்டு

# நால்வகைக் குறுக்கங்கள்

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **‘வேட்கை’ என்னும் சொல்லில் ஐகாரக் குறுக்கம் பெறும் மாத்திரை அளவு ______**
   அ) அரை ஆ) ஒன்று இ) ஒன்றரை ஈ) இரண்டு [**விடை : ஆ**]

2. **மகரக் குறுக்கம் இடம்பெறாத சொல் ______**
   அ) போன்ம் ஆ) மருண்ம்
   இ) பழம் விழுந்தது ஈ) பணம் கிடைத்தது [**விடை : ஈ**]

3. **சொல்லின் முதலில் மட்டுமே இடம் பெறுவது ______**
   அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம்
   இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம் [**விடை : ஆ**]

**குறு வினா**

1. **ஔகாரம் எப்போது முழுமையாக ஒலிக்கும்?**
   ஔ, வௌ என ஔவைகார எழுத்து, தனித்து வரும் இடங்களில் தன்னுடைய இரண்டு மாத்திரையில் முழுமையாக ஒலிக்கும்.

2. **சொல்லின் முதல், இடை, இறுதி ஆகிய இடங்களில் ஐகாரக்குறுக்கம் பெறும் மாத்திரை அளவு யாது?**
   **ஐகாரக்குறுக்கம் பெறும் மாத்திரை**
   முதல் - 1½ மாத்திரை
   இடை - 1 மாத்திரை
   கடை - 1 மாத்திரை

3. **மகரக்குறுக்கத்துக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.**
   1. வலம் வந்தான்
   2. போன்ம்

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.**

1. **மூவிடங்களிலும் குறுகும் குறுக்கம் ______.**
   அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம்
   இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம் [**விடை : அ**]

2. **சொல்லுக்கு முதலில் மட்டுமே குறுகும் குறுக்கம்**
அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம்
இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம் [விடை : ஆ]

3. **வையம், சமையல், பறவை ஆகிய சொற்களில் பயின்று வரும் குறுக்கம்**
அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம்
இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம் [விடை : அ]

4. **ஔவையார், வௌவால் ஆகிய சொற்களில் பயின்று வரும் குறுக்கம்**
அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம்
இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம் [விடை : ஆ]

5. **சொல்லின் இடையிலும் கடையிலும் வராத குறுக்கம்**
அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம்
இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம் [விடை : ஆ]

6. **மகரக்குறுக்கத்தின் மாத்திரையளவு**
அ) அரை ஆ) ஒன்று இ) ஒன்றரை ஈ) கால் [விடை : ஈ]

7. **ஆய்தக்குறுக்கத்தின் மாத்திரையளவு**
அ) அரை ஆ) ஒன்று இ) ஒன்றரை ஈ) கால் [விடை : ஈ]

8. **மெய்யெழுத்து பெறும் மாத்திரையளவு**
அ) அரை ஆ) ஒன்று இ) ஒன்றரை ஈ) கால் [விடை : அ]

9. **உயிர்க்குறில் பெறும் மாத்திரையளவு**
அ) அரை ஆ) ஒன்று இ) ஒன்றரை ஈ) கால் [விடை : ஆ]

10. **உயிர்க்நெடில் பெறும் மாத்திரையளவு**
அ) அரை ஆ) ஒன்று இ) ஒன்றரை ஈ) இரண்டு [விடை : ஈ]

11. **வலம் வந்தான், போன்ம், மருண்ம் ஆகிய சொற்களில் பயின்று வரும் குறுக்கம்**
அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம்
இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம் [விடை : இ]

12. **முஃடீது, கஃறீது ஆகிய சொற்களில் பயின்று வரும் குறுக்கம்**
அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம்
இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம் [விடை : ஈ]

13. **பொருத்துக.**
1. ஐகாரக்குறுக்கம் - அ) ஔவையார், வௌவால்
2. ஔகாரக்குறுக்கம் - ஆ) வலம் வந்தான்
3. மகரக்குறுக்கம் - இ) முஃடீது, கஃறீது
4. ஆய்தக்குறுக்கம் - ஈ) சமையல், பறவை

அ) 1-ஆ 2-அ 3-ஈ 4-இ ஆ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ
இ) 1-ஆ 2-அ 3-இ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4-ஈ [விடை : ஆ]

14. **ஆய்தக்குறுக்கம் இடம் பெறாத சொல்**

அ) அஃ்து ஆ) முஃ்டீது

இ) கஃ்றீது ஈ) பஃ்றுளி [**விடை : அ**]

15. **பொருந்தாதவற்றைக் கண்டறிக.**

1. ஐகாரக்குறுக்கம் - ஒன்றரை மற்றும் ஒரு மாத்திரை
2. ஒளகாரக்குறுக்கம் - இரண்டு மாத்திரை
3. மகரக்குறுக்கம் - கால் மாத்திரை
4. ஆய்தக்குறுக்கம் - கால் மாத்திரை [**விடை :** 2]

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. சில இடங்களில் தன்னுடைய மாத்திரையளவு குறைந்து ஒலிப்பவை ________.
   **விடை : குறுக்கங்கள்**
2. 'ஐ' என்ற எழுத்து பெறும் மாத்திரையளவு ________. **விடை : இரண்டு**
3. அம்மா, பாடம் படித்தான் ஆகிய சொற்களில் மகர மெய்யெழுத்து பெறும் மாத்திரையளவு ________. **விடை : அரை**
4. ________ சொல்லின் இடையிலும் இறுதியிலும் வாராது. **விடை : ஒளகாரம்**
5. ஆய்தம் தன் மாத்திரையில் குறைந்து ஒலிப்பது ________ . **விடை : ஆய்தக்குறுக்கம்**

**குறுவினா**

1. **ஒளகாரக்குறுக்கம் என்றால் என்ன?சான்று தருக.**

ஒளகாரம் தன் இரண்டு மாத்திரை அளவிலிருந்து ஒன்றரை மாத்திரையாகக் குறைந்து ஒலிப்பது ஒளகாரக்குறுக்கம் எனப்படும். சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும்.

**சான்று:** ஒளவையார், வௌவால்

2. **ஐகாரக்குறுக்கம் என்றால் என்ன?சான்று தருக.**

ஐகாரம் தன் இரண்டு மாத்திரை அளவிலிருந்து ஒன்றரை மாத்திரையாக குறைந்து ஒலிப்பது ஐகாரக்குறுக்கம் எனப்படும். சொல்லுக்கு முதல், இடை, கடை ஆகிய இடங்களில் குறுகும்.

**சான்று:** சைவம், சமையல்.

3. **மகரக்குறுக்கம் என்றால் என்ன? சான்று தருக.**

மகரம் தன் அரை மாத்திரை அளவிலிருந்து கால் மாத்திரையாக குறைந்து ஒலிப்பது மகரக்குறுக்கம் எனப்படும்.

**சான்று:** வலம் வந்தான்.

4. **ஆய்தக்குறுக்கம் என்றால் என்ன? சான்று தருக.**

ஆய்தம் தன் அரை மாத்திரை அளவிலிருந்து கால் மாத்திரையாக குறைந்து ஒலிப்பது ஆய்தக்குறுக்கம் எனப்படும்.

**சான்று:** கற்றீது.

## கற்பவை கற்றபின்

**1. ஐகார, ஔகார, மகர, ஆய்தக்குறுக்கங்களுக்கு எடுத்துக்காட்டாக அமையும் சொற்களைத் தொகுத்து எழுதுக.**

| ஐகாரக்குறுக்கம் | ஔகாரக்குறுக்கம் | மகரக்குறுக்கம் | ஆயுதக்குறுக்கம் |
|---|---|---|---|
| ஐம்பது | ஔடதம் | தரும் வண்டி | கஃறீது |
| மடையன் | ஔவை | வரும் வளவன் | பஃறீது |
| தலைவன் | கௌதாரி | வரும் வண்டி | முஃடீது |
| கடலை | கௌரி | போன்ம் | பஃறுளி |
| ஐவர் | தௌலீஸ்வரம் | மருண்ம் | பஃறொடை |
| ஐந்து | ஔவியம் | தரும் வளவன் | பஃறாழிசை |
| படையல் | ஔதசியம் | பெறும் வணிகன் | |
| வடை | ஔதா | | |
| தடை | ஔவுதல் | | |
| படை | | | |

## மொழியை ஆழ்வோம்

**கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்று பற்றி இரண்டு நிமிடம் பேசுக.**

### 1. காட்டு வளமே நாட்டு வளம்!

அனைவருக்கும் வணக்கம்!

காட்டு வளமே நாட்டு வளம் என்பதைப் பற்றி சில நிமிடங்கள் பேசுகின்றேன். ஒரு நாட்டு வளம் எப்படி முடிவு செய்யப்படுகின்றது என்றால், அந்த நாட்டில் உள்ள நீர் வளம், நில வளம், தொழில் வளம் ஆகியவை கொண்டு தான் கணக்கிடப்படுகின்றது. நீர் வளத்திற்குக் காரணம் மழை. மழையினால் மட்டுமே நீர் வளத்தைப் பெருக்க முடியும். அந்த மழைக்கு அடிப்படைக் கராணம் காடுகள்தான். காடுகள் இல்லையென்றால் நீர் வளம் நாட்டில் இல்லை.காடுகளும் காட்டுயிரிகளும் நிலவளமாகிய மண்வளத்தை மேம்படுத்துகின்றது. நிலமும் நீரும் பெருகவில்லை என்றால் நாட்டின் தொழில் வளம் கிடையாது. எனவே காட்டு வளமே நாட்டு வளம் என்று கூறி நிறைவு செய்கின்றேன். நன்றி.

### 2. காட்டின் பயன்கள்

அனைவருக்கும் வணக்கம்!

காட்டின் பயன்கள் என்பதைப் பற்றி சில நிமிடங்கள் பேசுகின்றேன். காட்டின் பயன்கள் ஒன்றல்ல. இரண்டல்ல.அவை பலவாகும். விலங்குகள், பறவைகள், பூச்சிகள், நுண்ணுயிரிகள், ஊர்வன ஆகிய எண்ணற்ற உயிரிகளுக்கு உணவையும் உறைவிடத்தையும் தருவது காடே. உயிர்வளியை அதிகமாக உற்பத்தி செய்து கொடுக்கின்றது. மழை வளத்தைப் பெருக்குகின்றது. மண்ணைப் பண்படுத்துகின்றது. குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்கும். உணவுப்பெருக்கம் ஏற்படும். பருவநிலை சீரடையும். மண்ணரிப்பு தடுக்கப்படும். நிலத்தடி நீர் மட்டத்தைப் பெருக்கும். புவி வெப்பமயமாதலைத் தடுக்கும். எனவே காட்டின் பயன் அறிந்து காடுகள் வளர்ப்போம் என்று கூறி நிறைவு செய்கின்றேன். நன்றி.

## அறிந்து பயன்படுத்துவோம்.

| பால் ஐந்து வகைப்படும் | அஃறிணை | | உயர்திணை | | |
|---|---|---|---|---|---|
| 1. ஆண்பால்<br>2. பெண்பால்<br>3. பலர்பால்<br>4. ஒன்றன்பால்<br>5. பலவின்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் | ஆண்பால் | பெண்பால் | பலர்பால் |
| | ஒன்றைக் குறிப்பது ஒன்றன் பால். | ஒன்றுக்கு மேற்பட்ட வற்றைக் குறிப்பது பலவின் பால். | ஓர் ஆணைக் குறிப்பது ஆண்பால். | ஓர் பெண்ணைக் குறிப்பது பெண்பால். | ஒன்றுக்கு மேற்பட்டவர் களைக் குறிப்பது பலர் பால். |
| **சான்று:** | கல், பசு. | மண் புழுக்கள், பசுக்கள். | மாணவன், செல்வன். | ஆதினி, மாணவி. | மாணவர்கள், மக்கள். |

## எதிர்ப்பாலுக்குரிய பெயர்களை எழுதுக.

1. மகளிர் × ஆடவர்
2. அரசன் × அரசி
3. பெண் × ஆண்
4. மாணவன் × மாணவி
5. சிறுவன் × சிறுமி
6. தோழி × தோழன்

## படத்திற்குப் பொருத்தமான பாலை எழுதுக.

| | | |
|---|---|---|
|  |  |  |
| **ஒன்றன் பால்** | **ஆண்பால்** | **ஒன்றன் பால்** |
|  |  |  |
| **பெண்பால்** | **பலர்பால்** | **பலவின் பால்** |

## பிழையைத் திருத்திச் சரியாக எழுதுக.

**எ.கா :** கண்ணகி சிலம்பு அணிந்தான்.
**விடை :** கண்ணகி சிலம்பு அணிந்தாள்.

1. **கோவலன் சிலம்பு விற்கப் போனாள்.**
   கோவலன் சிலம்பு விற்கப் போனான்.
2. **அரசர்கள் நல்லாட்சி செய்தார்.**
   அரசர்கள் நல்லாட்சி செய்தனர்.
3. **பசு கன்றை ஈன்றன.**
   பசு கன்றை ஈன்றது.
4. **மேகங்கள் சூழ்ந்து கொண்டது.**
   மேகங்கள் சூழ்ந்து கொண்டன.
5. **குழலி நடனம் ஆடியது.**
   குழலி நடனம் ஆடினாள்.

தமிழ்

**கடிதம் எழுதுக.**

**நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.**

**நண்பனுக்குக் கடிதம்**

23, பெரியார் வீதி,
சேலம் - 3.
10.06.2020.

ஆருயிர் நண்பா!

உன் அன்பு நண்பன் எழுதும் கடிதம்.நானும் என் குடும்பத்தாரும் மிகுந்த நலத்துடன் இருக்கின்றோம். நீயும் உன் குடும்பத்தாரும் நலமா? எங்கள் பள்ளியில் கடந்த வாரம் மதுரைக்குச் சுற்றுலா அழைத்துச் சென்றார்கள். அங்குச் சென்ற அனுபவத்தை உன்னுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். மதுரை என்றால் இனிமை என்பதைப் பாடநூலில் தான் படித்திருக்கின்றேன். அங்குச் சென்றபோது தான் அந்த இனிமையை உணர்ந்தேன்.

மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குச் சென்றேன். அங்கு எவ்வளவு நுணுக்கமான கலைநுட்பம் தெரியுமா? காணக் கண் கோடி வேண்டும் நண்பா! குமரகுருபரரின் மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ்ப்பாடல்கள் கல்வெட்டுகளில் அங்குச் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன. பின்னர் நாயக்கர் மகாலுக்குச் சென்றோம். அங்குள்ள ஒவ்வொரு தூணும் கதைகள் பல சொல்லும். அங்குள்ள நாட்டிய அரங்கு மிகவும் பொலிவுடன் உள்ளது. மதுரை காமராசர் பல்கலைக் கழகம் சென்றோம். அங்குள்ள நூலகத்தைக் கண்டு வியந்து தமிழ்ச்சங்கமே ! இதுவோ? என்று நினைத்தேன். அடுத்த வாரம் நேரில் வரும் போது இன்னும் விளக்கமாகக் கூறுகின்றேன். அன்புடன் முடிக்கின்றேன். வாழ்க வளமுடன்.

இப்படிக்கு
உயிர் நண்பன்,
ப. இளங்கதிர்.

உறைமேல் முகவரி:

பெறுநர்
ச. கதிரவன்,
34, புதுக் காலனி,
கரூர் - 3.

**மொழியோடு விளையாடு**

**வட்டத்திலுள்ள எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்களை அமைக்க.**




| | |
|---|---|
| 1. புதையல் | 6. தையல் |
| 2. இயல் | 7. புல் |
| 3. கயல் | 8. கல் |
| 4. புயல் | 9. இல்லை |
| 5. கடல் | 10. இயல்பு |

**சொற்களை இணைத்துப் புதிய சொற்கள் அமைக்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| வாழை | தயிர் | கூடு | திடல் | பாட்டு |
| குருவி | கொய்யா | சோறு | பழம் | பறவை |
| விளையாட்டு | கூட்டம் | அவரை | போட்டி | காய் |

**எ.கா :** வாழை + காய் - வாழைக்காய்

1. குருவி + கூடு - குருவிக்கூடு
2. விளையாட்டு + திடல் - விளையாட்டுத்திடல்
3. தயிர் + சோறு - தயிர்ச்சோறு
4. கொய்யா + பழம் - கொய்யாப்பழம்
5. விளையாட்டு + போட்டி - விளையாட்டுப்போட்டி
6. அவரை + காய் - அவரைக்காய்

**விடுகதைகளுக்கு விடை எழுதுக.**

1. மரம் விட்டு மரம் தாவுவேன்; குரங்கு அல்ல.
வளைந்த வாலுண்டு; புலி அல்ல
கொட்டைகளைக் கொறிப்பேன்; கிளி அல்ல.
முதுகில் மூன்று கோடுகளை உடையவன்.
நான் யார்?................ **விடை : அணில்**

2. என் பெயர் மூன்று எழுத்துகளைக் கொண்டது.
முதலெழுத்தை நீக்கினால் மறைப்பேன்.
இரண்டாம் எழுத்தை நீக்கினால் குரைப்பேன்.
மூன்றாம் எழுத்தை நீக்கினால் குதிப்பேன்.
நான் யார்?.................. **விடை : குதிரை**

3. வெள்ளையாய் இருப்பேன். பால் அல்ல.
மீன் பிடிப்பேன்; தூண்டில் அல்ல
தவமிருப்பேன்; முனிவரல்ல.
நான் யார்?................. **விடை : கொக்கு**

**கலைச்சொல் அறிவோம்**

| | |
|---|---|
| தீவு | - Island |
| இயற்கை வளம் | - Natural Resource |
| வன விலங்குகள் | - Wild Animals |
| வனப் பாதுகாவலர் | - Forest Conservator |
| உவமை | - Parable |
| காடு | - Jungle |
| வனவியல் | - Forestry |
| பல்லுயிர் மண்டலம் | - Bio Diversity |

❖❀❖

# இயல் 2 வாழ்வியல்

# திருக்குறள்

**மனப்பாடப் பாடல்**

1. ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.
2. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.
3. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.
4. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு.

**நூல்** : **திருக்குறள்**
**ஆசிரியர்** : **திருவள்ளுவர்**



**ஆசிரியர்** : திருவள்ளுவர்

**காலம்** : 2000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர்.

**வேறுபெயர்கள்** : செந்நாப்போதார், பொய்யில்புலவர், முதற்பாவலர்.

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| அழுக்காறாமை | - பொறாமை கொள்ளாமை | ஏதிலார் | - பிறர் |
| அழுக்காறு | - பொறாமை | பூரியார் | - இழிந்தவர் |
| ஆக்கம் | - செல்வம் | வாய்மை | - உண்மை |
| கேடு | - வறுமை | செவ்வியான் | - சான்றோர் |

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்க.

**1. வாய்மை எனப்படுவது ---------.**

அ) அன்பாகப் பேசுதல் ஆ) தீங்குதராத சொற்களைப் பேசுதல்
இ) தமிழில் பேசுதல் ஈ) சத்தமாகப் பேசுதல் [**விடை : ஆ**]

2. -------- செல்வம் சான்றோர்களால் ஆராயப்படும்.
அ) மன்னன் ஆ) பொறாமை இல்லாதவன்
இ) பொறாமை உள்ளவன் ஈ) செல்வந்தன் [**விடை : இ**]

3. 'பொருட்செல்வம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ---------.
அ) பொரு + செல்வம் ஆ) பொருட் + செல்வம்
இ) பொருள் + செல்வம் ஈ) பொரும் + செல்வம் [**விடை : இ**]

4. 'யாதெனின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ---------.
அ) யா + எனின் ஆ) யாது + தெனின்
இ) யா + தெனின் ஈ) யாது + எனின் [**விடை : ஈ**]

5. தன் + நெஞ்சு எனபதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ---------.
அ) தன்நெஞ்சு ஆ) தன்னெஞ்சு இ) தானெஞ்சு ஈ) தனெஞ்சு [**விடை : ஆ**]

6. தீது + உண்டோ எனபதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ---------.
அ) தீதுண்டோ ஆ) தீதுஉண்டேத
இ) தீதிண்டோ ஈ) தீயுண்டோ [**விடை : அ**]

சிறந்த அரசின் பணிகளை வரிசைப்படுத்துக.
அ) பொருளைப் பிரித்துச் செலவு செய்தல்.
ஆ) பொருள் வரும் வழிகளை அறிதல்.
இ) சேர்த்த பொருளைப் பாதுகாத்தல்.
ஈ) பொருள்களைச் சேர்த்தல். [**விடை: ஆ, ஈ, இ, அ**]

**குறு வினா**

1. எப்போது தன்நெஞ்சே தன்னை வருத்தும்?
ஒருவர் தன் மனம் அறிய பொய்சொல்லக் கூடாது. அவ்வாறு கூறினால் அவர் மனமே அவரைச் சுடும்.

2. வாழும் நெறி யாது?
ஒருவர் தன் மனத்தில் பொறாமை இல்லாது ஒழுக்க நெறியோடு வாழ வேண்டும்.

3. உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் யார்?
உள்ளத்தில் பொய்யில்லாமல் வாழ்பவர், உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவர் ஆவர்.

கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு திருக்குறள் அமைக்க.

| | | | |
|---|---|---|---|
| பொருட்செல்வம் | எல்லாம் | பூரியார் | செல்வத்துள் |
| கண்ணும் | அருட்செல்வம் | உள | செவிச்செல்வம் |
| அச்செல்வம் | தலை | செல்வம் | - |

விடை :

**1. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்**
**பூரியார் கண்ணும் உள.**

**2. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.**

**பின்வரும் பத்திக்குப் பொருத்தமான திருக்குறளைத் தேர்ந்தெடு.**

அறவழி என்றவுடன் நம் நினைவுக்கு வருபவர் தேசத்தந்தை காந்தியடிகள். அவர் தம் சிறு வயதில் 'அரிச்சந்திரன்' நாடகத்தைப் பார்த்தார். அதில் அரிச்சந்திரன் என்னும் மன்னர் 'பொய் பேசாமை' என்னும் அறத்தை எத்தகைய சூழ்நிலையிலும் தவறாமல் கடைப்பிடித்தார். இந்த நாடகத்தைக் கண்ட காந்தியடிகள் தாமும் பொய் பேசாமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று உறுதி பூண்டார். அதனைத் தம் வாழ்நாள் முழுவதும் பின்பற்றினார். இப்பண்பே காந்தியடிகள் எல்லார் இதயத்திலும் இடம் பிடிக்கக் காரணமாக அமைந்தது.

1. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
   அழுக்காறு இலாத இயல்பு.

2. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
   தீமை இலாத சொலல்.

3. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
   உள்ளத்துள் எல்லாம் உளன்.

விடை : **3. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.**

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1. **முப்பால், பொய்யா மொழி, தெய்வ நூல் போன்ற பிறபெயர்களில் அழைக்கப்படும் நூல்**
   அ) திருக்குறள் ஆ) ஏலாதி
   இ) திரிகடுகம் ஈ) ஆசாரக்கோவை [**விடை : அ**]

2. **திருக்குறளில் அமைந்த மொத்த குறட்பாக்கள்**
   அ) 133 ஆ) 1330 இ) 70 ஈ) 38 [**விடை : ஆ**]

3. **திருக்குறள் பகுப்பு**
   அ) மூன்று ஆ) நான்கு இ) ஒன்பது ஈ) 133 [**விடை : அ**]

4. **பொருத்துக**
   1. அழுக்காறு - அ) செல்வம்
   2. ஆக்கம் - ஆ) பொறாமை
   3. கேடு - இ) பிறர்
   4. ஏதிலார் - ஈ) வறுமை

   அ) 1- ஆ 2-அ 3- ஈ 4-இ ஆ) 1-ஈ 2- அ 3-ஆ 4- இ
   இ) 1-ஆ 2-அ 3- இ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4- ஈ [**விடை : அ**]

5. **பொருத்துக.**

1. பூரியார் - அ) இழிந்தவர்
2. வாய்மை - ஆ) சான்றோர்
3. செவ்வியான் - இ) உண்மை
4. தீது - ஈ) குற்றம்

அ) 1- ஆ 2-அ 3- ஈ 4-இ ஆ) 1-ஈ 2- அ 3-ஆ 4- இ

இ) 1-ஆ 2-அ 3- இ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4- ஈ [**விடை : ஈ**]

6. **தீங்கு தராத சொற்களைச் சொல்லுதல் -------.**

அ) வாய்மை ஆ) அருள்

இ) அழுக்காறாமை ஈ) இறைமாட்சி [**விடை : அ**]

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ஒருவர் __________ பொய் சொல்லக் கூடாது. **விடை : நெஞ்சறிய**
2. அவ்விய நெஞ்சத்தான் __________ செவ்வியான். **விடை : ஆக்கமும்**
3. தன் குற்றம் காண்பவருடைய வாழ்வில் ________ இல்லை. **விடை : துன்பம்**
4. சிறந்த செல்வம் __________. **விடை : அருட்செல்வம்**
5. தன்னெஞ்சு அறிவது __________. **விடை : பொய்யற்க**

**குறு வினா**

1. **செவ்வியான் கேடு நினைக்கப்படும் எப்போது?**

பொறாமை கொண்டவருடைய செல்வம், பொறாமை இல்லாதவருடைய வறுமை சான்றோரால் ஆராயப்படும்.

2. **எப்போது வாழ்வில் துன்பம் இல்லை?**

பிறருடைய குற்றத்தைக் காண்பது போல தன் குற்றத்தைக் காண்பவருக்குவாழ்வில் துன்பம் இல்லை.

3. **எப்போது புறங் கூறுதல் கூடாது?**

நேருக்கு நேர் நின்று கடுமையான சொற்களைச் சொன்னாலும் சொல்லலாம. ஆனால், அவர் இல்லாத போது புறங்கூறல் கூடாது.

4. **அருட்செல்வம், பொருட்செல்வம் குறித்து வள்ளுவர் கூறுவது?**

✍ செல்வங்களுள் சிறந்தது அருட்செல்வம்.

✍ பொருட்செல்வம் இழிந்தவரிடத்திலும் உள்ளது.

**குறு வினா**

**சிறந்த அரசின் செயல்கள் யாவை?**

✍ பொருள் வரும் வழிகளை அறிதல்.

✍ பொருள்களைச் சேர்த்தல்.

✍ சேர்த்த பொருளைப் பாதுகாத்தல்.

✍ பொருளைப் பிரித்துச் செலவு செய்தல் ஆகியன சிறந்த அரசின் செயல்கள் ஆகும்.

## அலகுத் தேர்வு

### இயல் : இரண்டு

**காலம் : 30 நிமிடம்** **மதிப்பெண் :20**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 4×1=4

**1. 'காடெல்லாம்' என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.**

அ) காடு + எல்லாம் ஆ) காடு + டெல்லாம்

இ) கா + டெல்லாம் ஈ) கான் + எல்லாம்

**2. நாவல் பழத்திற்கு உவமையாகக் கூறப்பட்டது -------.**

அ) பச்சை இலை ஆ) கோலிக்குண்டு

இ) பச்சைக்காய் ஈ) செங்காய்

**3. தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் -------.**

அ) வேடந்தாங்கல் ஆ) கோடியக்கரை

இ) முண்டந்துறை ஈ) கூந்தன் குளம்

**4. மகரக்குறுக்கம் பெறும் மாத்திரை அளவு -------.**

அ) ஒன்று ஆ) அரை

இ) கால் ஈ) இரண்டு

**II. குறு விடை தருக.** 3×2=6

5. காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா உரைப்பன யாவை?

6. மானின் வகைகள் சிலவற்றைக் கூறுக.

7. மகரக்குறுக்கத்திற்குச் சான்றுகள் தருக.

**III. சிறு விடை தருக.** 3×2=6

8. காட்டை இயற்கை விடுதி என்று ஏன் அழைக்கின்றோம்?

9. கரடிகள் குறித்து நீவிர் அறிந்த செய்தியை எழுதுக.

**IV. கடிதம் எழுதுக.** 1×4=4

10. நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

❖❁❖

இயல் 3 கவிதைப் பேழை

# புலி தங்கிய குகை

### மனப்பாடப் பாடல்

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டு உளனோ எனவினவுதி என்மகன்
யாண்டுஉளன் ஆயினும் அறியேன் ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே

**நூல்** : **புறநானூறு**
**ஆசிரியர்** : **காவற்பெண்டு**

**காவற்பெண்டு :**

- சங்ககாலப் பெண்பாற் புலவர்.
- கோப்பெரு நற்கிள்ளியின் செவிலித்தாய்.
- படைப்பு : புறநானூற்றில் ஒரு பாடல்.

**சொல்லும் பொருளும்**

சிற்றில் - சிறு வீடு
கல் அளை - கற்குகை
யாண்டு - எங்கே
ஈன்ற வயிறு - பெற்றெடுத்த வயிறு
குடில் - வீடு

### பாடநூல் மதிப்பீட்டு வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **'யாண்டு' என்ற சொல்லின் பொருள் ______.**
   அ) எனது ஆ) எங்கு
   இ) எவ்வளவு ஈ) எது [**விடை : ஆ**]

2. **'யாண்டுளனோ?' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.**
   அ) யாண்டு + உளனோ? ஆ) யாண் + உளனோ?
   இ) யா + உளனோ? ஈ) யாண்டு + உனோ? [**விடை : அ**]

3. **‘கல் + அளை’ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _______.**
அ) கல்லளை ஆ) கல்அளை இ) கலலளை ஈ) கல்லுளை [**விடை : அ**]

**குறு வினா**

**தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகிறார்?**

தம் வயிற்றுக்குத் தாய் ‘புலி தங்கிய குகை’யை உவமையாகக் கூறுகிறார்.

**சிறு வினா**

**தம் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

✍ சிறிய என் வீட்டிலுள்ள தூணைப் பற்றிக் கொண்டு , எதுவும் தெரியாதவள் போல நீ ‘உன் மகன் எங்கே?’ என்று என்னைக் கேட்கின்றாய்.

✍ அவன் எங்கு இருக்கின்றான் என்று எனக்குத் தெரியாது. ஆனால் ‘புலி தங்கிய குகை’ போன்று அவனைப் பெற்ற வயிறு என்னிடம் உள்ளது.

✍ அவன் இங்கு இல்லை ஆனால் போர்க்களத்தில் இருக்கலாம். போய்க் காண்பாயாக!

– என்று தன் மகன் குறித்துத் தாய் கூறினாள்.

**சிந்தனை வினா**

**தாய் தன் வயிற்றைப் புலி தங்கிச்சென்ற குகையோடு ஒப்பிடுவது ஏன்?**

✍ புலி மிகுந்த வலிமையானது, சுறுசுறுப்பானது, தன்னம்பிக்கை மிக்கது, வீரம் மிகுந்தது.

✍ அதைப் போல வீரம் மிக்கவன் மகன்.

✍ இருள் நிறைந்த குகையில் புலி இருப்பது போல், இருள் நிறைந்த வீரம் மிக்க கருவறையில் தன் மகன் உறங்கி வளர்ந்தான்.

✍ புலி குகையை விட்டு வேட்டைக்குச் செல்வது போல பகைவர்களை வேட்டையாடுவதற்கு மகன் போர்க்களம் சென்று இருக்கின்றான்.

✍ அதனால் தாய் தன் வயிற்றைப் புலி தங்கிச் சென்ற குகையோடு ஒப்பிடுகிறார்.

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **கோப்பெரு நற்கிள்ளியின் செவிலித்தாயாக விளங்கியவா _______.**
அ) ஔவையார் ஆ) ஒக்கூர் மாசாத்தியார்
இ) காவற்பெண்டு ஈ) வெண்ணிக்குயத்தியார் [**விடை : இ**]

2. **எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று _______.**
அ) புறநானூறு ஆ) முல்லைப்பாட்டு
இ) திருக்குறள் ஈ) திருமுருகாற்றுப்படை [**விடை : அ**]

3. **தமிழ்மக்களின் வாழ்க்கை முறை, நாகரிகம், பண்பாடு, வீரம் முதலியவற்றை வெளிப்படுத்தும் நூல்**
அ) புறநானூறு ஆ) முல்லைப்பாட்டு
இ) பதிற்றுப்பத்து ஈ) குறுந்தொகை [**விடை : அ**]

4. **கோப்பெரு நற்கிள்ளி _______ மன்னன்.**
அ) சேர ஆ) சோழ
இ) பாண்டிய ஈ) பல்லவ [விடை : ஆ]

5. **காவற்பெண்டு பாடிய பாடல் அமைந்த நூல் _______.**
அ) புறநானூறு ஆ) முல்லைப்பாட்டு
இ) பதிற்றுப்பத்து ஈ) குறுந்தொகை [விடை : அ]

6. **பொருந்தாத இணையைக் கண்டறிக.**
அ) காவற்பெண்டு - பெண்பாற் புலவர்
ஆ) காவற்பெண்டு - சங்ககாலப் புலவர்
இ) காவற்பெண்டு - புறநானூற்றில் பாடல் பாடினார்
ஈ) காவற்பெண்டு - கோப்பெரு நற்கிள்ளியின் தாய் [விடை : ஈ]

7. **பொருத்துக.**
1. சிற்றில் - அ. கற்குகை
2. கல் அளை - ஆ. சிறு வீடு
3. யாண்டு - இ. பெற்றெடுத்த
4. ஈன்ற வயிறு - ஈ. எங்கே

அ) 1- ஆ 2-அ 3- ஈ 4-இ ஆ) 1-ஈ 2- அ 3-ஆ 4- இ
இ) 1-ஆ 2-அ 3- இ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4- ஈ [விடை : அ]

8. **'புலிசேர்ந்து போகிய கல்அளை போல' - இதில் 'குகை' என்னும் பொருள்**
அ) சேர்ந்து ஆ) போகிய
இ) அளை ஈ) போல [விடை : இ]

9. **பொருந்தாத இணையைக் கண்டறிக.**
அ) இல் - வீடு ஆ) அளை - குகை
இ) ஈன்ற - பெற்ற ஈ) யாண்டு - இங்கே [விடை : ஈ]

10. **சரியான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்க.**
அ) அன்னையே! உன் மகன் எங்கு உள்ளான்?
ஆ) உன் மகன் எங்கு உள்ளான்?அன்னையே!
இ) எங்கு அன்னையே உன் மகன் உள்ளான்?
ஈ) உன் மகன் எங்குஅன்னையே உள்ளான்? [விடை : அ]

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. 'புலி தங்கிய குகை' என்னும் தலைப்பில் அமைந்தப் பாடலை எழுதியவர்_______.
விடை : **காவற்பெண்டு**

2. தமிழர்கள் பழங்காலம் தொட்டே _______, _______ சிறந்து விளங்கினர்.
விடை : **கல்வியிலும், வீரத்திலும்**

3. நாட்டைக்காக்க _______ செல்வது முதற்கடமை. விடை : **போர்க்களம்**

4. கல்வியில் தேர்ச்சியும் கவிபாடும் ஆற்றலும் மிக்க புலவர் _____. விடை : **காவற்பெண்டு**

தமிழ்

5. 'புலி தங்கிய குகை' என்னும் தலைப்பில் அமைந்தப் பாடல் புறநானூற்றில் _______வது பாடல். விடை : 86

**குறு வினா**

**1. காவற்பெண்டு – குறிப்பு வரைக.**

✍ சங்ககாலப் பெண்பாற் புலவர்.

✍ கோப்பெரு நற்கிள்ளியின் செவிலித்தாய்.

✍ படைப்பு : புறநானூற்றில் ஒரு பாடல்.

✍ கல்வியில் தேர்ச்சியும் கவிபாடும் ஆற்றலும் மிக்க புலவர் இவர்.

**2. புறநானூறு குறிப்பு வரைக.**

✍ எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று : புறநானூறு

✍ இது பண்டைத் தமிழ்மக்களின் வாழ்க்கை முறை, நாகரிகம், பண்பாடு, வீரம். முதலியவற்றை வெளிப்படுத்தும் நூல்

**3. புலவரிடம் பெண் வினவியது யாது ?**

அன்னையே ! உன் மகன் எங்கு உள்ளான்? என்று புலவரிடம் பெண் வினவினாள்.

**4. 'புலிசேர்ந்து போகிய கல்அளை போல' தொடர் பொருள் யாது?**

பொருள் : புலி தங்கிச் சென்ற குகை போல்

**5. தன் மகன் எங்கு இருக்கக் கூடும் என்று புலவர் கூறுகின்றார்?**

தன் மகன் போர்க்களத்தில் இருக்கக் கூடும் என்று புலவர் கூறுகின்றார்.

**கற்பவை கற்றபின்**

**1. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை அறிந்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1. அஞ்சிஅத்தை மகள் நாகையார் | 11. காவற்பெண்டு | 21. நெடும்பல்லியத்தை |
| 2. அஞ்சில் அஞ்சியார் | 12. ஏமிழிஞாலளார் | 22. பாரிமகளிர் |
| 3. அள்ளூர் நன்முல்லையார் | 13. குளம்பாதாயனார் | 23. பூங்கண் உத்திரையார் |
| 4. ஆதி மந்தியார் | 14. குறமகள் இளவெயினி | 24. பெருங்கோப்பெண்டு |
| 5. ஊன் பித்தை | 15. குறமகள் குறியெயினி | 25. நக்கண்ணையார் |
| 6. ஒக்கூர் மாசாத்தியார் | 16. குன்றியனார் | 26. பேய்மகள் இளவெயினி |
| 7. கச்சிப்பேட்டு நன்னாகையார் | 17. தாயங்கண்ணியார் | 27. பொன்மணியார் |
| 8. கழார்கீரன் எயிற்றியார் | 18. நக்கண்ணியார் | 28. பொன்முடியார் |
| 9. காக்கைப் பாடினியார் | 19. நல்வெல்லியார் | 29. வெண்ணிக்குயத்தியார் |
| 10.காமக்கண்ணிப் பசலையார் | 20. நன்னாகையார் | 30. வெள்ளிவீதியார் |

**2. பண்டைக்காலப் போர்க்கருவிகள் சிலவற்றைப் படம் வரைந்து அவற்றின் பெயர்களை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| வேல் | வாள் | ஈட்டி | வில் |

❖❀❖

# இயல் 3 கவிதைப் பேழை — பாஞ்சை வளம்

**தொகுப்பாசிரியர்** : நா. வானமாமலை

**நூல்** : வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாடல்

**காலம்** : 1917 - 1980

**ஆர்வம்** : நாட்டுப்புறப் பாடல்கள், பழமொழிகள் சேகரித்து தொகுப்பு நூல் வெளியீடு

**ஊர்** : திருநெல்வேலி நாங்குநேரி

**படைப்புகள்** : தமிழர் வரலாறும் பண்பாடும், தமிழர் நாட்டுப் பாடல்கள், உயிரின் தோற்றம், முத்துப்பட்டன் கதை முதலியன.

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| சூரன் | - வீரன் | வாரணம் | - யானை |
| பொக்கிஷம் | - செல்வம் | பரி | - குதிரை |
| சாஸ்தி | - மிகுதி | சிங்காரம் | -அழகு |
| விஸ்தாரம் | - பெரும்பரப்பு | கமுகு | - பாக்கு |

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. ஊர்வலத்தின் முன்னால் ________ அசைந்து வந்தது.**

அ) தோரணம் ஆ) வானரம் இ) வாரணம் ஈ) சந்தனம் [**விடை : இ**]

**2. பாஞ்சாலங்குறிச்சியில் ________ நாயை விரட்டிடும்.**

அ) முயல் ஆ) நரி இ) பரி ஈ) புலி [**விடை : அ**]

3. **மெத்தை வீடு என்று குறிப்பிடப்படுவது _______.**
அ) மெத்தை விரிக்கப்பட்ட வீடு ஆ) படுக்கையறை உள்ள வீடு
இ) மேட்டுப்பகுதியில் உள்ள வீடு ஈ) மாடிவீடு [**விடை : ஈ**]

4. **'பூட்டுங்கதவுகள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______.**
அ) பூட்டு + கதவுகள் ஆ) பூட்டும் + கதவுகள்
இ) பூட்டின் + கதவுகள் ஈ) பூட்டிய + கதவுகள் [**விடை : ஆ**]

5. **'தோரணமேடை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______.**
அ) தோரணம் + மேடை ஆ) தோரண + மேடை
இ) தோரணம் + ஒடை ஈ) தோரணம் + ஓடை [**விடை : அ**]

6. **வாசல் + அலங்காரம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _______.**
அ) வாசல்அலங்காரம் ஆ) வாசலங்காரம்
இ) வாசலலங்காரம் ஈ) வாசலிங்காரம் [**விடை : ஆ**]

**பொருத்துக.**

| வினா : | | விடை : | |
|---|---|---|---|
| பொக்கிஷம் | - அழகு | **பொக்கிஷம்** | **- செல்வம்** |
| சாஸ்தி | - செல்வம் | **சாஸ்தி** | **- மிகுதி** |
| விஸ்தாரம் | - மிகுதி | **விஸ்தாரம்** | **- பெரும்பரப்பு** |
| சிங்காரம் | - பெரும்பரப்பு | **சிங்காரம்** | **- அழகு** |

## குறுவினா

1. **பாஞ்சாலங்குறிச்சியின் கோட்டைகள் பற்றிக் கூறுக.**
 - பாஞ்சாலங்குறிச்சி நகரில் பல சுற்றுகளாகக் கோட்டைகள் இருக்கும்.
 - அவை மதில்களால் சூழப்பட்டவையாக மிகவும் வலிமையாக இருக்கும்.

2. **பாஞ்சாலங்குறிச்சியின் இயற்கை வளம் எத்தகையது?**
பூஞ்சோலைகளும் சந்தனமரச் சோலைகளும் ஆறுகளும் நெல் வயல்களும் பாக்குத் தோப்புகளும் பாஞ்சாலங்குறிச்சிக்கு அழகு சேர்க்கும்.

## சிறுவினா

1. **பாஞ்சாலங்குறிச்சியில் வீடுகள் எவ்வாறு இருக்கும்?**
 - பாஞ்சாலங்குறிச்சியில் ஒவ்வொரு வீடுகளிலும் மணிகளால் அழகு செய்யப்பட்ட மேடைகள் இருக்கும்.
 - வீடுகளெல்லாம் மதில்களால் சூழப்பட்ட மாடி வீடுகளாக இருக்கும்.
 - வீட்டுக் கதவுகள் மிகவும் நேர்த்தியாகவும் வீடுகள் செல்வம் நிறைந்ததாகவும் இருக்கும்.

2. **பாஞ்சாலங்குறிச்சியின் வீரத்துக்குச் சான்றாகும் நிகழ்வுகள் பற்றி எழுதுக.**
 - வீரம் நிறைந்த பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள முயலானது தன்னைப் பிடிக்கவரும் வேட்டை நாயை எதிர்த்து விரட்டும்.

- பசுவும் புலியும் நீர் நிலையின் ஒரே பக்கம் நின்று பால் போன்ற தண்ணீரைக் குடிக்கும்.
- மன்னன் கட்டபொம்மன் பெயரைச் சொன்னால் கறந்து வைத்த பாலைக் கூட காகம் குடிக்காது.

**சிந்தனை வினா**

**நாட்டுப்புறக்கதைப் பாடல்களில் கட்டபொம்மன் பெரிதும் புகழப்படக் காரணம் என்ன?**

- மாவீரன் கட்டபொம்மன் வீரம் நிறைந்தவர்.
- அஞ்சா நெஞ்சினர்.
- ஆங்கிலேய உயர் அதிகாரிகளை நேருக்கு நேராகவே தன் நாட்டு உரிமைக்காக எதிர்த்தவர். ஆகிய காரணத்தினாலும், மக்கள் மனதில் வீரம் நிறைந்தவராக இடம் பிடித்திருப்பதாலும் நாட்டுப் புறக்கதைப் பாடல்களில் கட்டபொம்மன் பெரிதும் புகழப்படுகின்றார்.

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாடலைத் தொகுத்து நூலாக வெளியிட்டவர் ________.**
அ) நா.வானமாமலை ஆ) சு.சண்முகசுந்தரம்
இ) அன்னகாமு ஈ) சண்முக சுந்தரம் [**விடை : அ**]

2. **குறையில்லாத வீரன் ________.**
அ) கட்டபொம்மன் ஆ) ஆங்கிலேயன்
இ) மருது ஈ) நா.வானமாமலை [**விடை : அ**]

3. **கட்டபொம்மனின் நாடு ________.**
அ) மதுரை ஆ) செஞ்சி
இ) பாஞ்சாலங்குறிச்சி ஈ) பாளையங்கோட்டை [**விடை : இ**]

4. **பாஞ்சாலங்குறிச்சியில் மணிகளால் அழகு செய்யப்பட்ட மேடைகள் இருக்கும் இடம்**
அ) கடைகள் ஆ) வீதிகள் இ) வீடுகள் ஈ) சோலைகள் [**விடை : இ**]

5. **நீர்நிலையின் ஒரே துறையில் நின்று பால்போன்ற தண்ணீரைக் குடிப்பவை ________**
அ) குயில், மயில் ஆ) யானை, பசு
இ) பசு, புலி ஈ) முயல், நாய் [**விடை : இ**]

6. **பாஞ்சாலங்குறிச்சியின் தண்ணீருக்குக் கூறப்பட்ட உவமை ________.**
அ) பால் ஆ) மணி இ) அமுதம் ஈ) சந்தனம் [**விடை : அ**]

7. **கறந்து வைத்த பாலைக் குடிக்காதது ________.**
அ) காகம் ஆ) குயில் இ) மயில் ஈ) பசு [**விடை : அ**]

8. **வீரம் மிகுந்த நாடு ________.**
அ) மதுரை ஆ) செஞ்சி
இ) பாஞ்சாலங்குறிச்சி ஈ) பாளையங்கோட்டை [**விடை : இ**]

**9. பாஞ்சாலங்குறிச்சியில் நாட்டின் வளத்தைக் கூறி விளையாடியது _______.**
அ) காகம் ஆ) குயில் இ) மயில் ஈ) பசு [**விடை : இ**]

**10. அன்பு வளரும் நாடு _______.**
அ) மதுரை ஆ) செஞ்சி
இ) பாஞ்சாலங்குறிச்சி ஈ) பாளையங்கோட்டை [**விடை : இ**]

**11. பொருத்துக.**
1. வாரணம் - அ) பாக்கு
2. பரி - ஆ) அழகு
3. சிங்காரம் - இ) குதிரை
4. கமுகு - ஈ) யானை

அ) 1-ஈ 2-இ 3-ஆ 4- அ ஆ) 1-இ 2-ஈ 3-அ 4-ஆ
இ) 1-ஆ 2-இ 3-அ 4-ஈ ஈ) 1-அ 2- ஈ 3-ஆ 4-இ [**விடை : அ**]

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. 'பாஞ்சை' என்ற அழைக்கப்படும் நாடு _______. விடை : **பாஞ்சாலங்குறிச்சி**
2. தமிழ்நாட்டில் பல வகையான _______ இலக்கியங்கள் வழங்கி வருகின்றன. விடை : **நாட்டுப்புற**
3. கதைப்பாடல் என்பது _______ தழுவிய பாடல். விடை : **கதை**
4. 'பரி வளரும் சாலை' - இதில் 'பரி' என்பதன் பொருள் _______. விடை : **குதிரை**
5. 'கமுகு' என்பதன் பொருள் _______. விடை : **பாக்கு**
6. _______யில் மாங்குயில் கூப்பிடுமாம். விடை : **சோலை**
7. முயலும் _______ விரட்டும். விடை : **நாயை**
8. வரந்தருபவள் _______. விடை : **சக்கமாதேவி**

## குறு வினா

**1. குயில்கள் எங்கு கூவும் ? மயில்கள் எப்படி விளையாடும்?**
✍ குயில்கள் சோலைகளில் கூவும்.
✍ மயில்கள் நாட்டின் வளத்தைக் கூறி விளையாடும்.

**2. பாஞ்சாலங்குறிச்சிக்கு அழகு சேர்ப்பன எது?**
பூஞ்சோலைகளும் சந்தனமரச் சோலைகளும் ஆறுகளும் நெல் வயல்களும் பாக்குத் தோப்புகளும் பாஞ்சாலங்குறிச்சிக்கு அழகு சேர்க்கும்.

**3. கரந்த பாலைக் காகம் குடிக்காததற்குக் காரணம் யாது?**
மன்னன் கட்டபொம்மன் பெயரைச் சொன்னால் கறந்து வைத்த பாலைக் கூட காகம் குடிக்காது.

**4. பசு மற்றும் புலியின் செயல் யாது?**
பசுவும் புலியும் நீர் நிலையின் ஒரே பக்கம் நின்று பால் போன்ற தண்ணீரைக் குடிக்கும்.

5. **எவ்வெற்றுக்கெல்லாம் பாஞ்சாலங்குறிச்சியில் இடங்கள் இருந்தன?**
- ✍ யானைக் கூடம்
- ✍ தோரணங்கள் கட்டப்பட்ட மேடை
- ✍ குதிரைக் கொட்டில்
- ✍ தாயம் ஆடுவதற்கான இடம்

6. **பாஞ்சாலங்குறிச்சியில் வீரம் நிறைந்த விலங்குகள் எவை?**

முயல், பசு.

7. **வீரபாண்டிய கட்டபொம்மன் கதைப்பாடலில் நும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள அஃறிணை உயிர்கள் யாவை?**
- ✍ யானை
- ✍ மயில்கள்
- ✍ பசு
- ✍ குதிரை
- ✍ முயல்
- ✍ புலி
- ✍ குயில்கள்
- ✍ வேட்டை நாய்
- ✍ காகம்

8. **வீரபாண்டியகட்டபொம்மன் கதைப்பாடலில் நும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள விலங்குகள் யாவை?**
- ✍ யானை
- ✍ முயல்
- ✍ பசு
- ✍ குதிரை
- ✍ வேட்டை நாய்
- ✍ புலி

9. **வீரபாண்டியக ட்டபொம்மன் கதைப்பாடலில் நும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பறவைகள் யாவை?**

குயில்கள், மயில்கள், காகம்.

**சிறு வினா:**

1. **"சில அதிசயங்கள் சொல்கின்றேன் கேளுமையா" - பாஞ்சாலங்குறிச்சி அதிசயங்கள் யாவை?**
- ✍ வீரம் நிறைந்த பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள முயலானது தன்னைப் பிடிக்கவரும் வேட்டை நாயை எதிர்த்து விரட்டும்.
- ✍ பசுவும் புலியும் நீர் நிலையின் ஒரே பக்கம் நின்று பால் போன்ற தண்ணீரைக் குடிக்கும்.
- ✍ மன்னன் கட்டபொம்மன் பெயரைச் சொன்னால் கறந்து வைத்த பாலைக் கூட காகம் குடிக்காது.

**கற்பவை கற்றபின்**

**உங்கள் வீட்டில் உள்ள பெரியோரிடம் நாட்டுப்புறக்கதைப் பாடல்களைக் கேட்டு வந்து வகுப்பறையில் பகிர்க.**

**முடுகு**

எட்டுத் திசையும் பதினாறு கோணமும்
கட்டியே காத்தவன் கட்டபொம்மன்
ஆத்துரு வாழும் அண்ணா சாய்பு
அண்ணனும் தம்பியும் வல்லவனாம்
குளத்தூர் வாழும் சுப்பையா
கொள்ளை யடிப்பதில் வல்லவனாம்
கிழக்கே எல்லையாம் கீழக்கரை
மேக்க எல்லையாம் சூலக்கரை
ஆயிரம் கண்ணுள்ள மாரியம்மா
ஆதரிக்க வேணும் இந்த நேரம்

❖❁❖

# இயல் 3 உரைநடை உலகம்

## தேசியம் காத்த செம்மல் பசும்பொன் உ.முத்துராமலிங்கத்தேவர்

### பாடநூல் மதிப்பீட்டு வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **முத்துராமலிங்கத்தேவர் முதன் முதலில் உரையாற்றிய இடம் ________.**
அ) தூத்துக்குடி ஆ) காரைக்குடி
இ) சாயல்குடி ஈ) மன்னார்குடி [**விடை : இ**]

2. **முத்துராமலிங்கத்தேவர் நடத்திய இதழின் பெயர் ________.**
அ) இராஜாஜி ஆ) நேதாஜி இ) காந்திஜி ஈ) நேருஜி [**விடை : ஆ**]

3. **தேசியம் காத்த செம்மல் எனப் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டியவர் ________.**
அ) இராஜாஜி ஆ) பெரியார் இ) திரு.வி.க ஈ) நேதாஜி [**விடை : அ**]

**குறு வினா**

1. **முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டிப் பெரியார் கூறியது யாது?**
   - ✍ வீரப்பேச்சால் எத்தனையோ தியாகிகளையும் விவேகப் பேச்சால் எத்தனையோ அறிவாளிகளை உண்டாக்கியவர்.
   - ✍ உண்மையை மறைக்காமல் வெளியிடுவதில் தனித்துணிச்சல் பெற்றவர். சுத்தத் தியாகி.

   – என்று முத்துராமலிங்கத்தேவரைப் பெரியார் பாராட்டியுள்ளார்.

2. **முத்துராமலிங்கத்தேவரின் பேச்சுக்கு வாய்ப்பூட்டுச் சட்டத்தின் மூலம் தடைவிதிக்கப்படக் காரணம் யாது?**
   - ✍ முத்துராமலிங்கத்தேவர், ஆங்கில ஆட்சிக்கு எதிராக மக்களிடம் பெரும் எழுச்சி ஏற்படும் வகையில் வீர உரையாற்றினார்.
   - ✍ அவரது பேச்சைக் கேட்டு மக்கள் ஆங்கில ஆட்சிக்கு எதிராக வீறுகொண்டு எழுந்தனர்.
   - ✍ இதனால், அவரைப் பலமுறை ஆங்கில அரசு கைது செய்தது.
   - ✍ மேலும், வாய்ப்பூட்டுச் சட்டம் முலம் மேடைகளில் அரசியல் பேசக் கூடாது என்று அவருக்குத் தடைவிதித்தது.

3. **முத்துராமலிங்கத்தேவர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப் பற்றி எழுதுக.**
   - ✍ முத்துராமலிங்கத்தேவர் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் சொற்பொழிவு ஆற்றும் திறன் பெற்றிருந்தார்.
   - ✍ சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கிச் சுடுதல், சோதிடம், மருத்துவம் ஆகிய பலதுறை ஆற்றல் உடையவராக விளங்கினார்.

### சிறு வினா

1. **நேதாஜியுடன் முத்துராமலிங்கத்தேவர் கொண்ட தொடர்புப் பற்றி எழுதுக.**
   - ✍ நேதாஜியுடன் முத்துராமலிங்கத்தேவர் நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தார்.
   - ✍ அவரைத் தம் அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார்.
   - ✍ முத்துராமலிங்கத்தேவரின் அழைப்பை ஏற்று 06.9.1939 இல் நேதாஜி மதுரைக்கு வருகை தந்தார்.
   - ✍ நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்தில் முத்துராமலிங்கத்தேவரின் முயற்சியால் ஏராளமான தமிழர்கள் இணைந்தனர்.
   - ✍ விடுதலைக்குப் பின்னர் நேதாஜி என்ற பெயரில் வார இதழ் நடத்தினார்

2. **தொழிலாளர் நலனுக்காக முத்துராமலிங்கத்தேவர் செய்த தொண்டுகள் யாவை?**
   - ✍ 1938 காலகட்டத்தில் மதுரையில் 23 தொழிலாளர் சங்கங்களின் தலைவராகத் தேவர் திகழ்ந்தார்.
   - ✍ மதுரையில் இருந்த நூற்பாலை ஒன்றில் வேலை செய்த தொழிலாளர்களின் உரிமைக்காகத் தோழர் ப.ஜீவானந்தத்துடன் இணைந்து 1938 ஆம் ஆண்டு போராட்டம் நடத்தினார். அதற்காக ஏழு மாதம் சிறைத் தண்டனை பெற்றார்.
   - ✍ உழவர்களின் நலன் காக்க இராஜபாளையத்தில் மிகப்பெரிய அளவிலான மாநாடு ஒன்றை நடத்தினார்.
   - ✍ பெண்தொழிலாளர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வேண்டும் என்று போராடினார்.

### சிந்தனை வினா

**சிறந்த தலைவருக்குரிய பண்புகள் எவை என நீங்கள் கருதுகிறீர்கள்?**

- ✍ உரிமைக்காகப் போராடுதல்
- ✍ மக்கள் நலம் காத்தல்
- ✍ பொதுநல வாழ்வு
- ✍ பேச்சாற்றல்
- ✍ சாதி, மத, இன, மொழி ஆகியன பாராமை
- ✍ ஒழுக்கம் காத்தல்
- ✍ பிறர்நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல்
- ✍ மனித நேயம்
- ✍ நாட்டுப் பற்று
- ✍ தியாக உணர்வு

ஆகியன சிறந்த தலைவருக்குரிய பண்புகளாக நாங்கள் கருதுகின்றோம்.

## கூடுதல் வினா

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **தந்தைப் பெரியாரால் 'சுத்தத் தியாகி' என்று பாராட்டப்பட்டவர் ________.**

   அ) முத்துராமலிங்கத் தேவர் ஆ) நேதாஜி
   இ) திரு.வி.க. ஈ) காந்திஜி [விடை : அ]

2. **முத்துராமலிங்கத் தேவர் பிறந்த ஊர் ________.**
அ) பசும்பொன் ஆ) மதுரை
இ) கோவை ஈ) சென்னை [விடை : அ]

3. **முத்துராமலிங்கத் தேவர் தொடக்கக் கல்வி பயின்ற இடம் ________.**
அ) பசும்பொன் ஆ) மதுரை
இ) இராமநாதபுரம் ஈ) கமுதி [விடை : ஈ]

4. **முத்துராமலிங்கத் தேவர் படித்துக்கொண்டிருந்த போது பரவிய நோய் ________.**
அ) காலரா ஆ) பிளேக்
இ) மலேரியா ஈ) மஞ்சள் காமாலை [விடை : ஆ]

5. **வடஇந்தியாவில் வாய்ப்பூட்டுச் சட்டத்தின் படி கைது செய்யப்பட்ட தலைவர் ________.**
அ) பாலகங்காதர திலகர் ஆ) காந்திஜி
இ) நேதாஜி ஈ) திரு.வி.க [விடை : அ]

6. **வங்கச் சிங்கம் என்று போற்றப்படுபவர்.**
அ) பாலகங்காதர திலகர் ஆ) காந்திஜி
இ) நேதாஜி ஈ) திரு.வி.க [விடை : இ]

7. **நேதாஜி என்னும் வார இதழை நடத்தியவர் ________.**
அ) முத்துராமலிங்கத் தேவர் ஆ) நேதாஜி
இ) திரு.வி.க. ஈ) காந்திஜி [விடை : அ]

8. **முத்துராமலிங்கத் தேவர் முதன் முதலில் உரையாற்றிய இடம் ________.**
அ) சாயல்குடி ஆ) பசும்பொன் இ) இராமநாதபுரம் ஈ) வங்கம் [விடை : அ]

9. **முத்துராமலிங்கத் தேவரின் பேச்சு விடுதலைப்போருக்கு உதவும் என்று கூறியவர் ________.**
அ) பாலகங்காதர திலகர் ஆ) காமராசர்
இ) நேதாஜி ஈ) திரு.வி.க [விடை : ஆ]

10. **தென்னாட்டுச் சிங்கம் என்றழைக்கப்படக் கூடியவர் ________.**
அ) முத்துராமலிங்கத் தேவர் ஆ) நேதாஜி
இ) திரு.வி.க. ஈ) காந்திஜி [விடை : அ]

11. **முத்துராமலிங்கத் தேவர் முதன் முதலில் சட்ட மன்றத்தேர்தலில் வெற்றி பெற்ற ஆண்டு ________.**
அ) 1947 ஆ) 1937
இ) 1957 ஈ) 1973 [விடை : ஆ]

12. **முத்துராமலிங்கத் தேவர் குற்றப்பரம்பரைச் சட்ட எதிர்ப்பு மாநாட்டை நடத்திய இடம்.**
அ) கமுதி ஆ) பசும்பொன்
இ) சாயல் குடி ஈ) இராமநாதபுரம் [விடை : அ]

13. **குற்றப்பரம்பரைச் சட்டம் நீக்கப்பட்ட ஆண்டு.**
அ) 1948 ஆ) 1984
இ) 1949 ஈ) 1943 [விடை : அ]

**14. பாரதமாதா கூட்டுறவுப் பண்டக சாலை ஏற்படுத்தப்பட்ட இடம்.**
அ) கமுதி ஆ) பசும்பொன்
இ) சாயல் குடி ஈ) இராமநாதபுரம் [**விடை : அ**]

**15. பாரதமாதா கூட்டுறவுப் பண்டக சாலை ஏற்படுத்தியவர் ________.**
அ) முத்துராமலிங்கத் தேவர் ஆ) நேதாஜி
இ) திரு.வி.க. ஈ) காந்திஜி [**விடை : அ**]

**16. ஜமீன் விவசாயிகள் சங்கம் ஏற்படுத்தியவர் ________.**
அ) முத்துராமலிங்கத் தேவர் ஆ) நேதாஜி
இ) திரு.வி.க. ஈ) காந்திஜி [**விடை : அ**]

**17. உழவர்களின் நலன் காக்க இராஜபாளையத்தில் மிகப்பெரிய அளவிலான மாநாடு ஒன்றை நடத்தியவர் ________.**
அ) முத்துராமலிங்கத் தேவர் ஆ) நேதாஜி
இ) திரு.வி.க. ஈ) காந்திஜி [**விடை : அ**]

**18. பெண்தொழிலாளர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வேண்டும் என்று போராடியவர் ________.**
அ) முத்துராமலிங்கத் தேவர் ஆ) நேதாஜி
இ) திரு.வி.க. ஈ) காந்திஜி [**விடை : அ**]

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இளமையில் அன்னையை இழந்து இஸ்லாமியத் தாய் ஒருவரால் பாலூட்டி வளர்க்கப் பட்டவர் ________.
விடை : **முத்துராமலிங்கத் தேவர்**
2. முத்துராமலிங்கத் தேவர் உயர்நிலைக் கல்வியைப் படித்த இடங்கள் ________ , ________.
விடை : **மதுரை, இராமநாதபுரம்**
3. முத்துராமலிங்கத் தேவர் இளமையிலேயே ________ ஆர்வம் மிகுதி.
விடை : **அரசியல்**
4. நேதாஜி மதுரைக்கு வந்த ஆண்டு ________. விடை : **கி.பி.1939**
5. நேதாஜி பெயரில் வார இதழ் ஒன்றை நடத்தியவர் ________. விடை : **முத்துராமலிங்கத் தேவர்**
6. முதன் முதலில் முத்துராமலிங்கத் தேவர் பேசிய தலைப்பு ________.
விடை : **விவேகானந்தர் பெருமை**
7. இந்திய அரசால் முத்துராமலிங்கத் தேவர் தபால்தலை வெளியிடப்பட்ட ஆண்டு ________.
விடை : **கி.பி.1995**
8. ஆங்கில ஆட்சியில் மக்களை ஒடுக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம் ________.
விடை : **குற்றப்பரம்பரைச் சட்டம்.**
9. முத்துராமலிங்கத் தேவர் ________ கோவில் நுழைவுப் போராட்டம் நடத்தத் திட்டமிட்டார்.
விடை : **மதுரை வைத்தியநாத ஐயர்**

## குறுவினா

**1. முத்துராமலிங்கத் தேவர் எங்கு எப்போது பிறந்தார்?**

முத்துராமலிங்கத் தேவர் 30.10.1908 இல் இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன் என்ற ஊரில் பிறந்தார்.

**2. முத்துராமலிங்கத் தேவரின் பெற்றோர் யாவர்?**

தந்தை : உக்கிர பாண்டியத்தேவர்

தாய் : இந்திராணி அம்மையார்.

**3. முத்துராமலிங்கத் தேவரின் படிப்பு பாதியில் நின்ற காரணம் யாது?**

இராமநாதபுரத்தில் படித்துக்கொண்டிருந்த போது , அவ்வூரில் 'பிளேக்' நோய் பரவியதால் அவரின் படிப்பு பாதியில் நின்றது.

**4. முத்துராமலிங்கத் தேவரின் அரசியல் குரு யார்?**

நேதாஜி சுபாஷ் சந்திர போசு.

**5. முத்துராமலிங்கத் தேவர் குறித்து மூதறிஞர் இராஜாஜி கூறியது யாது?**

முத்துராமலிங்கத் தேவர் பேச்சு உள்ளத்தில் இருந்து வெளிவருகிறது. உதடுகளில் இருந்து அல்ல. உள்ளத்தால் எதிலும் பற்றற்று உண்மையெனப் பட்டதை மறைக்காமல் அப்படியே பேசிவிடுவது, அவர் வழக்கம் என்று முத்துராமலிங்கத் தேவர் குறித்து மூதறிஞர் இராஜாஜி பாராட்டுகிறார்.

**6. முத்துராமலிங்கத் தேவர் பேச்சு குறித்து வட இந்திய இதழ்கள் பாராட்டிய செய்தி யாது?**

பாராளுமன்றத்தில் அவர் பேசிய ஆங்கிலத்தில் பேசிய பேச்சு வெள்ளையர்காலத்தில் விட்டல் பாய், வல்லபபாய் பட்டேல் போன்ற மேதைகள் பேசிய பேச்சைப் போல் இருந்ததாக வடஇந்திய இதழ்கள் பாராட்டின.

**7. முத்துராமலிங்கத் தேவரின் சிறப்புப்பெயர்கள் யாவை?**

- ✍ தேசியம் காத்த செம்மல்
- ✍ சன்மார்க்க சண்ட மாருதம்
- ✍ வித்யா பாஸ்கர்
- ✍ இந்து புத்தசமய மேதை
- ✍ பிரவசன கேசரி

**8. விவசாயிகளின் தோழன் முத்துராமலிங்கத் தேவர் என்பதற்கான நிகழ்வினைக்குறிப்பிடுக.**

- ✍ முத்துராமலிங்கத் தேவர் 'ஜமீன் விவசாயிகள் சங்கம்' ஏற்படுத்தி விவசாயிகள் துன்பம் போக்கப் பாடுபட்டார்.
- ✍ தமக்குச் சொந்தமான 32½ சிற்றூர்களில் இருந்த விளை நிலங்களைக் குத்தகை இல்லாமல் உழுபவர்க்கே பங்கிட்டுக் கொடுத்தார்.

**9. முத்துராமலிங்கத் தேவர் சிறைவைக்கப்பட்டிருந்த இடங்கள் யாவை?**

- ✍ அலிப்பூர்
- ✍ தாமோ
- ✍ சென்னை
- ✍ அமராவதி
- ✍ கல்கத்தா
- ✍ வேலூர்

**10. முத்துராமலிங்கத் தேவர் எப்போது மறைந்தார்?**

30.10.1963 இல் முத்துராமலிங்கத் தேவர் மறைந்தார்.

**சிறு வினா**

**1. முத்துராமலிங்கத் தேவரின் இளமைக்காலம் குறித்து எழுதுக.**

**பிறப்பு:**

முத்துராமலிங்கத் தேவர் 30.10.1908 இல் இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன் என்ற ஊரில் பிறந்தார்.

**முத்துராமலிங்கத் தேவரின் பெற்றோர்:**

தந்தை: உக்கிர பாண்டியத்தேவர், தாய்: இந்திராணி அம்மையார்.

இளமையில் அன்னையை இழந்து இஸ்லாமியத் தாய் ஒருவரால் பாலூட்டி வளர்க்கப்பட்டார்.

**படிப்பு பாதியில் நின்ற காரணம்:**

இராமநாதபுரத்தில் படித்துக்கொண்டிருந்த போது, அவ்வூரில் 'பிளேக்' நோய் பரவியதால் அவரின் படிப்பு பாதியில் நின்றது.

**2. முத்துராமலிங்கத் தேவருக்கு அரசு செய்த சிறப்புகள் யாவை?**

**அரசு விழா:**

பசும்பொன்னில் உள்ள முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில் அவர் தோன்றி மறைந்த அக்டோபர் 30 ஆம் நாள் தமிழக அரசின் சார்பில் அரசு விழா எடுக்கப்படுகின்றது.

**படம் மற்றும் சிலை:**

- ✍ தமிழகச் சட்டமன்றத்தில் அவரது திருவுருவப்படம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- ✍ சென்னையில் அரசு சார்பாகச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.
- ✍ நாடாளுமன்ற வளாகத்திலும் சிலை வைக்கப்பட்டுள்ளது.

**தபால் தலை:**

இந்திய அரசால் 1995 இல் இவரின் தபால் தலை வெளியிடப்பட்டுள்ளது.

**3. பாரத மாதா கூட்டுறவு பண்டக சாலையை நிறுவியவர் யார்? எதற்காக நிறுவப்பட்டது?**

பாரத மாதா கூட்டுறவு பண்டக சாலையை நிறுவியவர் : முத்துராமலிங்கத் தேவர்.

**நிறுவக் காரணம்**

- ✍ கமுதியில் வியாபாரிகள் விவசாய உற்பத்திப் பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கியதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.
- ✍ விவசாயிகளின் விளைபொருள்களுக்குச் சரியான விலை கிடைப்பதற்காக பாரத மாதா கூட்டுறவு பண்டக சாலையை நிறுவினார்.

## கற்பவை கற்றபின்

**நாட்டுக்கு உழைத்த சிறந்த பிற தலைவர்கள் பற்றிய செய்திகளைத் திரட்டி எழுதுக.**

**காந்தியடிகள்:**

அகிம்சை வழியில் நாட்டு விடுதலைக்குப்பாடுபட்டவர். வெள்ளையனே வெளியேறு இயக்கம், உப்புச் சத்தியாகிரகம், ஒத்துழையாமை இயக்கம், தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு முதலியன.

**நேதாஜி:**

இந்திய தேசிய இராணுவத்தை அமைத்து ஆங்கிலேயர்களை எதிர்த்தவர்.

**வ.உ.சிதம்பரனார்:**

நம் நாட்டிற்காகச் சுதேசக் கப்பல் வாங்கியவர். நாட்டுமக்களுக்காக சிறையில் செக்கிழுத்தவர்.

**ஜவஹர்லால் நேரு:**

காந்தியடிகளுடன் இணைந்து நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டவர்.

**பூலித்தேவன்:**

ஆங்கிலேயரை எதிர்த்து தன்பகுதியை வென்றவர். விடுதலைப் போரின் முதல் முழக்கமிட்டவர்.

**வீரபாண்டிய கட்டபொம்மன்:**

ஆங்கிலேயருக்கு வரி கொடுக்கமாட்டோம் என்று ஆங்கிலேயரை எதிர்த்தவர்.

❖❁❖

இயல் 3 விரிவானம்

# கப்பலோட்டிய தமிழர்



**இரா. பி. சேது**

தமிழறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், வழக்குரைஞர்.

சிறப்பு : சொல்லின் செல்வர், தமிழின்பம் நூலுக்குச் சாகித்ய அகாதெமி விருது.

படைப்புகள் : ஆற்றங்கரையினிலே, கடற்கரையினிலே, தமிழ்விருந்து, தமிழகம் ஊரும் பேரும், மேடைப் பேச்சு.

## பாடநூல் மதிப்பீட்டு வினா

**1. வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை:**

கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் என்றெல்லாம் போற்றப்படுபவர் வ.உ.சிதம்பரனார் ஆவார். ஆங்கிலேயரை எதிர்த்து சுதேசி கப்பல் இயக்கிய பெருமைக்குரியவர் வ.உ.சிதம்பரனார். அவரின் உரை வழி, அவரது வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகக் காண்போம்.

**சுதேசக் கப்பல்:**

தூத்துக்குடியில் கொற்கைதுறைமுகத்தில் முத்து வாணிகத்தில் நம்மவர் சிறந்திருந்தனர். கப்பல் வணிகத்தில் தமிழர் சிறந்திருந்தனர். ஆனால் ஆங்கிலேயர் ஆதிக்கத்துப் பின்னர், கப்பல்களில் ஆங்கிலக் கொடி பறந்தது. நம்மவர் கூலிகளாக அக்கப்பலில் வேலை செய்தனர். இந்நிலையை மாற்ற பாண்டித்துரையாரைத் தலைவராகக் கொண்டு சுதேசக் கப்பல் நிறுவனத்தை வ.உ.சிதம்பரனார் உருவாக்கினார். இக்கப்பல் முதன் முதலில் கொழும்பு நோக்கிச் சென்றது.

**ஆங்கிலேயரின் அடக்குமுறை:**

சுதேசக் கப்பல் வணிகம் வளரத் தொடங்கியது. ஆங்கிலக் கப்பல் வணிகம் வீழத் தொடங்கியது. அதனால் ஆங்கிலேயர்கள் வ.உ.சிதம்பரனாரையும் அவரத நண்பர்களையும் பயமுறுத்தினர். அதற்கெல்லாம் கவலைப்படாமல் ‘வந்தே மாதரம்’ என்ற முழக்கத்தை எழுப்பினார். இதனைக் கேட்ட மக்கள் விடுதலைக்கு ஆதரவாக ஊக்கம் அடைந்தனர். ஆங்கில அரசு வ.உ.சிதம்பரனாரைச் சிறையில் அடைத்தது.

**வ.உ.சிதம்பரனாரின் தியாகம்**

வ.உ.சிதம்பரனார் கோவைச்சிறை, கண்ணூர்ச் சிறை ஆகியவற்றில் கொடும்பணி செய்தார். அவர் உடல் சலித்தது, உள்ளம் தளரவில்லை. சிறையதிகாரி வ.உ.சிதம்பரனாரிடம்

அறிவுரை கூற "உனக்கும் உன் கவர்னருக்கும் மன்னனுக்கும் புத்தி சொல்வேன்'' என்றார். சிறையில் செக்கிழுத்தார். சிறையில் கைத்தோல் உரிய கடும்பணி செய்தார். செந்தமிழும் கன்னித் தமிழும் கண்ணீரைப் போக்கியது.

**தமிழ்ப்பற்றும் ஏக்கமும்:**

வ.உ.சிதம்பரனார் தொல்காப்பியம், இன்னிலை கற்றுத் தன் துன்பங்களை மறந்தார். ஆங்கிலத்தில் ஆலன் இயற்றிய அறிவு நூல்களில் ஒன்றை 'மனம் போல் வாழ்வு' என்னும் தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்தார். மெய்யறிவு, மெய்யறம் முதலிய சிறு நூல்களைப் படைத்தார். சிறைவாழ்வு முடிந்து வ.உ.சிதம்பரனார் வெளியில் வந்த போது தன் குழந்தைகளைக் கண்டு மகிழ்ந்தார். ஆனால் கடற்கரையில் தன் ஆசைக்குழந்தை சுதேசக் கப்பலைக் காணாமல் வருத்தம் அடைந்தார் என்று நற்காலம் வருமோ என்று ஏங்கினார்.

**முடிவுரை:**

"பயக் காண்பது சுதந்திர வெள்ளம்
பணியக் காண்பது வெள்ளையர் உள்ளம்
என்று நாம் பாடும் நாள் எந்நாளோ?''

என்று உருக்கமாகப் பேசி கடற்கரையை விட்டு அகன்றார் வ.உ.சிதம்பரனார்.

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **சொல்லின் செல்வர் என்று போற்றப்படுபவர்**
   அ) அண்ணா ஆ) இரா.பி. சேது
   இ) வ.உ.சி ஈ) பாண்டித்துரையார் [விடை : ஆ]

2. **தமிழின்பம் என்னும் நூலை எழுதியவர்**
   அ) அண்ணா ஆ) இரா.பி. சேது
   இ) வ.உ.சி ஈ) பாண்டித்துரையார் [விடை : ஆ]

3. **இரா.பி. சேதுவின் சாகித்ய அகாதெமி விருது பெற்ற நூல்**
   அ) தமிழின்பம் ஆ) ஆற்றங்கரையினிலே
   இ) கடற்கரையினிலே ஈ) தமிழ் விருந்து [விடை : அ]

4. **வ.உ.சிதம்பரனார் பேசுவதாக அமைந்த நம் பாடப்பகுதி இரா.பி. சேதுவின் நூல்**
   அ) தமிழின்பம் ஆ) ஆற்றங்கரையினிலே
   இ) கடற்கரையினிலே ஈ) தமிழ் விருந்து [விடை : இ]

5. **சாகித்ய அகாதெமி விருது பெற்ற முதல் நூல்**
   அ) தமிழின்பம் ஆ) ஆற்றங்கரையினிலே
   இ) கடற்கரையினிலே ஈ) தமிழ் விருந்து [விடை : அ]

## கற்பறை கற்றபின்

**பாரதியார், கொடிகாத்த குமரன் போன்ற விடுதலைப் போராட்ட வீரர்களுள் ஒருவராக உங்களைக் கற்பனை செய்து கொண்டு வகுப்பறையில் உரையாற்றுக.**

**பாரதியார்**

வணக்கம்!

நான் தான் உங்கள் முறுக்கு மீசை பாரதி பேசுகின்றேன். மாணவர்களே நலமா? ஒருமுறை எனக்குப் பிடித்த பலகாரம் பற்றி ஒருவர் கேட்டார். நான் சற்றும் தயங்காமல் முறுக்கு என்றேன். அது குறித்த காரணம் இவர் கேட்டார். முறுக்கு என்றுச் சொல்லும் போது நாடி நரம்புகள் எல்லாம் முறுக்கேறி வெள்ளையர்களை அடித்து நொறுக்க வேண்டும் என்ற உணர்ச்சி பெருக்கேற்படுகின்றது. அதனால் நான் முறுக்கை வீரப்பலகாரம் என்றே அழைக்கின்றேன். இப்போதும் முறுக்கேறி இலஞ்சம், ஊழல் செய்பவரை அடக்க முறுக்கு மீசை துடிக்கின்றது.

சரி! நேரம் ஆகிவிட்டது இற்றொரு நாள் வருகின்றேன்.

❖❁❖

# இயல் 3 கற்கண்டு — வழக்கு

## பாடநூல் மதிப்பீட்டு வினா

### பொருத்துக.

**வினா:**

1. பந்தர் - முதற்போலி
2. மைஞ்சு - முற்றுப்போலி
3. அஞ்சு - இடைப்போலி
4. அரையர் - கடைப்போலி

**விடை:**

1. **பந்தர் - கடைப்போலி**
2. **மைஞ்சு - முதற்போலி**
3. **அஞ்சு - முற்றுப்போலி**
4. **அரையர் - இடைப்போலி**

### குறு வினா

**1. வழக்கு என்றால் என்ன?**

முன்னோர்கள் எந்தெந்தச் சொற்களை என்னென்ன பொருளில் பயன்படுத்தினார்களோ, அச்சொற்களை அவ்வாறே பயன்படுத்துவதை வழக்கு என்பர்.

**2. தகுதி வழக்கின் வகைகள் யாவை?**

தகுதி வழக்கு மூன்று வகைப்படும்.

இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி.

**3. வாழைப்பழம் மிகவும் நஞ்சு விட்டது.**
**இத்தொடரில் இடம்பெற்றுள்ள போலிச் சொல்லைக் கண்டறிக. அதன் சரியான சொல்லை எழுதுக.**

இத்தொடரில் இடம்பெற்றுள்ள போலிச் சொல்: நஞ்சு. சரியான சொல்: நைந்து.
வாழைப்பழம் மிகவும் **நஞ்சு** விட்டது.
வாழைப்பழம் மிகவும் **நைந்து** விட்டது.

## கூடுதல் வினா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.**

**1. வழக்கு ________ வகைப்படும்.**
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்னு ஈ) ஐந்து [**விடை : அ**]

**2. இயல்பு வழக்கு ________ வகைப்படும்.**
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்னு ஈ) ஐந்து [**விடை : ஆ**]

**3. தகுதி வழக்கு ________ வகைப்படும்.**
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்னு ஈ) ஐந்து [**விடை : ஆ**]

**4. முன்பின் தொக்கப் போலி எனக்குறிப்பிடப்படுவது.**
அ) இலக்கணமுடையது ஆ) இலக்கணப்போலி
இ) மரூஉ ஈ) முதற்போலி [**விடை : ஆ**]

**5. புறநகர், கால்வாய், தசை, கடைக்கண் ஆகிய சான்றுகள் ________க்குச் சான்றாகும்.**
அ) இலக்கணமுடையது ஆ) இலக்கணப்போலி
இ) மரூஉ ஈ) முதற்போலி [**விடை : ஆ**]

**6. இலக்கண நெறியிலிருந்து பிறழ்ந்து, சிதைந்து வழங்கும் சொற்கள் ________.**
அ) இலக்கணமுடையது ஆ) இலக்கணப்போலி
இ) மரூஉ ஈ) முதற்போலி [**விடை : இ**]

**7. தகுதியற்ற சொற்களைத் தகுதியான வேறு சொற்களால் குறிப்பிடுவது.**
அ) இயல்பு வழக்கு ஆ) தகுதி வழக்கு
இ) மரூஉ ஈ) இலக்கணப்போலி [**விடை : ஆ**]

**8. ஒரு குழுவினர் ஒரு பொருள் அல்லது செயலைக் குறிக்கத் தமக்குள் பயன்படுத்திக் கொள்ளும் சொற்கள்.**
அ) குழூஉக்குறி ஆ) மங்கலம்
இ) இடக்கரடக்கல் ஈ) இலக்கணப்போலி [**விடை : அ**]

**9. பொன்னைப் பறி என்பர் - இது எவ்வகைத் தகுதி வழக்கிற்குச் சான்று?**
அ) குழூஉக்குறி ஆ) மங்கலம்
இ) இடக்கரடக்கல் ஈ) இலக்கணப்போலி [**விடை : அ**]

**10. கால் கழுவி வந்தான், குழந்தை வெளியே போய்விட்டது - இவை எவ்வகைத் தகுதி வழக்கிற்குச் சான்றுகள்?**

அ) குழூஉக்குறி ஆ) மங்கலம்
இ) இடக்கரடக்கல் ஈ) இலக்கணப்போலி [விடை : இ]

**12. சுடுகாட்டை நன்காடு என்பது ________.**

அ) குழூஉக்குறி ஆ) மங்கலம்
இ) இடக்கரடக்கல் ஈ) இலக்கணப்போலி [விடை : ஆ]

**13. போலி ________ வகைப்படும்.**

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்னு ஈ) ஐந்து [விடை : ஆ]

**14. இடக்கரடக்கல் அல்லாதது ________.**

அ) கால் கழுவி வந்தான் ஆ) குழந்தை வெளியே போய்விட்டது
இ) ஒன்றுக்குப் போய் வந்தேன் ஈ) சுடுகாட்டை நன்காடு [விடை : ஈ]

**15. பொருத்துக.**

1. ஒன்றுக்குப் போய் வந்தேன் - அ) மங்கலம்
2. கறுப்பு ஆடு என்பதை வெள்ளாடு என்பது - ஆ) இடக்கரடக்கல்
3. பொன்னைப் பறி என்பது - இ) மரூஉ
4. தஞ்சாவூரைத் தங்சை என்பது - ஈ) குழூஉக்குறி

அ) 1- ஆ 2-அ 3- ஈ 4-இ ஆ) 1-ஈ 2- அ 3-ஆ 4- இ
இ) 1-ஆ 2-அ 3- இ 4-ஈ ஈ) 1-அ 2-இ 3-ஆ 4- ஈ [விடை : அ]

**16. பொருந்தாத இணையைக் கண்டறிக.**

அ) கால்வாய் - இலக்கணப்போலி
ஆ) மைஞ்சு - முதற்போலி
இ) இலஞ்சி - இடைப்போலி
ஈ) முகன் - முற்றுப்போலி [விடை : ஈ]

**17. பொருந்தாத இணையைக் கண்டறிக.**

அ) குழந்தை வெளியே போய்விட்டது - இடக்கரடக்கல்
ஆ) செத்தாரைத் துஞ்சினார் எனல் -மங்கலம்
இ) ஆடையைக் காரை எனல் -மரூஉ
ஈ) தசை - இலக்கணப்போலி [விடை : இ]

### குறுவினா

**1. வழக்கு எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

வழக்கு இரண்டு வகைப்படும். அவையாவன: இயல்பு வழக்கு, தகுதி வழக்கு.

**2. இயல்பு வழக்கு என்றால் என்ன?**

ஒரு பொருளை அதற்கே உரிய இயல்பான சொற்களால் குறிப்பிடுவது இயல்பு வழக்கு ஆகும்.

**3. இயல்பு வழக்கு எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

இயல்பு வழக்கு மூன்று வகைப்படும்.

அவையாவன: இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ.

**4. இலக்கணப்போலி என்றால் என்ன?**

இலக்கண முறைப்படி அமையாவிட்டாலும், இலக்கணமுடையதைப் போல ஏற்றுக்கொள்ளப்படும் சொற்கள் இலக்கணப்போலி எனப்படும்.

**5. இலக்கணப்போலிக்குச் சான்றுகள் தருக.**

புறநகர், கால்வாய், தசை, கடைக்கண்.

**6. தஞ்சை, நெல்லை ஆகிய சொற்கள் எவ்வகை வழக்குச் சொற்கள் என்பதைக் குறிப்பிட்டு விளக்குக.**

✍ தஞ்சை, நெல்லை ஆகிய சொற்கள் இயல்பு வழக்குச் சொற்களில் மரூஉச் சொல்லாகும்.

✍ இலக்கண நெறியிலிருந்து பிறழ்ந்து, சிதைந்து வழங்கும் சொற்கள் மரூஉ எனப்படும்.

✍ தஞ்சாவூரைத் 'தஞ்சை' என்றும், திருநெல்வேலியை 'நெல்லை' என்பதும் மரூஉச் சொற்களாகும்.

**7. தகுதி வழக்கு என்றால் என்ன?**

ஏதேனும் ஒரு காரணத்தினால் பிறரிடம் சொல்லத் தகுதியற்ற சொற்களைத் தகுதியான வேறு சொற்களால் குறிப்பிடுவது தகுதி வழக்கு ஆகும்.

**8. தகுதி வழக்கு எத்தனை வகைப்படும்? அவையாவை?**

தகுதி வழக்கு மூன்று வகைப்படும்.

அவையாவன: இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி.

**9. இடக்கரடக்கல் என்றால் என்ன? சான்று தருக.**

பிறரிடம் வெளிப்படையாகச் சொல்லத்தகாத சொற்களைத் தகுதியுடைய வேறு சொல்லால் குறிப்பிடுவது இடக்கரடக்கல் ஆகும்.

**சான்று :** கால் கழுவி வந்தான்.

குழந்தை வெளியே போய்விட்டது.

**10. மங்கலம் என்றால் என்ன? சான்று தருக.**

மங்கலம் இல்லாத சொற்களை மங்கலமான வேறு சொல்லால் குறிப்பிடுவது மங்கலம் ஆகும்.

**சான்று :** ஓலை – திருமுகம்; கறுப்பு ஆடு – வெள்ளாடு; சுடுகாடு – நன்காடு.

**11. குழூஉக்குறி என்றால் என்ன? சான்று தருக.**

ஒரு குழுவினர் ஒரு பொருள் அல்லது செயலைக் குறிக்கத் தமக்குள் பயன்படுத்திக் கொள்ளும் சாற்கள் குழூஉக்குறி எனப்படும்.

**சான்று :** பொன்னைப் பறி என்பர். (பொற்கொல்லர் பயன்படுத்துவது)

ஆடையைக் காரை என்பர். (யானைப்பாகர் பயன்படுத்தவது)

**12. போலி என்றால் என்ன?**

ஓர் எழுத்து நிற்கவேண்டிய இடத்தில் வேறு ஓர் எழுத்து வந்து நின்று அதே பொருள் மாறாது வருவது போலி எனப்படும்.

**13. போலி எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

போலி மூன்று வகைப்படும். அவையாவன: முதற்போலி, இடைப்போலி, கடைப்போலி.

**14. முதற்போலி என்றால் என்ன? சான்று தருக.**

சொல்லின் முதலில் ஓர் எழுத்து நிற்கவேண்டிய இடத்தில் வேறு ஓர் எழுத்து வந்து நின்று அதே பொருள் மாறாது வருவதுமுதற்போலி எனப்படும்.

**சான்று :** பசல் – பைசல், மஞ்சு – மைஞ்சு, மயல் – மையல்

**15. இடைப்போலி என்றால் என்ன? சான்று தருக.**

சொல்லின் இடையில் ஓர் எழுத்து நிற்கவேண்டிய இடத்தில் வேறு ஓர் எழுத்து வந்து நின்று அதே பொருள் மாறாது வருவது இடைப்போலி எனப்படும்.

**சான்று :** அமச்சு –அமைச்சு, இலஞ்சி – இலைஞ்சி, அரசர் – அரைசர்

**16. கடைப்போலி (இறுதிப்போலி) என்றால் என்ன? சான்று தருக.**

சொல்லின் இறுதியில் ஓர் எழுத்து நிற்கவேண்டிய இடத்தில் வேறு ஓர் எழுத்து வந்து நின்று அதே பொருள் மாறாது வருவது கடைப்போலி (இறுதிப்போலி) எனப்படும்.

**சான்று :** அகம் – அகன், முகம் – முகன், பந்தல் – பந்தர்

**17. முற்றுப்போலி என்றால் என்ன? சான்று தருக.**

ஒரு சொல்லில் இயல்பாக அமைந்த எழுத்துகளுக்குப் பதிலாக எழுத்துகள் அனைத்தும் வேறுபட்டாலும் பொருள் மாறாமல் இருப்பது முற்றுப்போலி ஆகும்.

**சான்று** : ஐந்து – அஞ்சு

## கற்பவை கற்றபின்

**1. மூவகைப் போலிகளிலும் எந்தெந்த எழுத்துகள் எந்தெந்த எழுத்துகளாக மாறுகின்றன என்பதை அறிந்து தொகுக்க.**

| போலி வகை | சான்று | சரியான எழுத்து | போலியான எழுத்து |
|---|---|---|---|
| **முதற்போலி** | பசல் – **பைசல்** | ப | பை |
| | மஞ்சு – **மைஞ்சு** | ம | மை |
| | மயல் – **மையல்** | ம | மை |
| **இடைப்போலி** | அமச்சு – **அமைச்சு** | ம | மை |
| | இலஞ்சி – **இலைஞ்சி** | ல | லை |
| | அரயர் – **அரையர்** | ர | ரை |
| **கடைப்போலி** | அகம் – **அகன்** | ம் | ன் |
| | நிலம் – **நிலன்** | ம் | ன் |
| | பந்தல் – **பந்தர்** | ல் | ர் |

## மொழியை ஆள்வோம்

**கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்று பற்றி இரண்டு நிமிடங்கள் பேசுக.**

### 1. தேசியம் காத்த செம்மல் : முத்துராமலிங்கத்தேவர்

வணக்கம்!

தேசியம் காத்த செம்மல் முத்துராமலிங்கத் தேவர் பற்றி சில நிமிடங்கள் பேசுகின்றேன். கேளுங்கள்.

முத்துராமலிங்கத்தேவர், ஆங்கில ஆட்சிக்கு எதிராக மக்களிடம் பெரும் எழுச்சி ஏற்படும் வகையில் வீர உரையாற்றினார். அவரது பேச்சைக் கேட்டு மக்கள் ஆங்கில ஆட்சிக்கு எதிராக வீறுகொண்டு எழுந்தனர். இதனால், அவரைப் பலமுறை ஆங்கில அரசு கைது செய்தது. மேலும், வாய்பூட்டுச் சட்டம் முலம் மேடைகளில் அரசியல் பேசக்கூடாது என்று அவருக்குத் தடைவிதித்தது. முத்துராமலிங்கத்தேவர் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் சொற்பொழிவு ஆற்றும் திறன் பெற்றிருந்தார். சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கிச் சுடுதல், சோதிடம், மருத்துவம் ஆகிய பலதுறை ஆற்றல் உடையவராக விளங்கினார். நேதாஜியுடன் முத்துராமலிங்கத் தேவர் நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தார், அவரைத் தம் அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார். முத்துராமலிங்கத்தேவரின் அழைப்பை ஏற்று 06.9.1939 இல் நேதாஜி மதுரைக்கு வருகை தந்தார். நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்தில் முத்துராமலிங்கத்தேவரின் முயற்சியால் ஏராளமான தமிழர்கள் இணைந்தனர்.

விடுதலைக்குப் பின்னர் நேதாஜி என்ற பெயரில் வார இதழ் நடத்தினார் 1938 காலகட்டத்தில் மதுரையில் 23 தொழிலாளர் சங்கங்களின் தலைவராகத் தேவர் திகழ்ந்தார். மதுரையில் இருந்த நூற்பாலை ஒன்றில் வேலை செய்த தொழிலாளர்களின் உரிமைக்காகத் தோழர் ப. ஜீவானந்தத்துடன் இணைந்து 1938 ஆம் ஆண்டு போராட்டம் நடத்தினார். அதற்காக ஏழு மாதம் சிறைத் தண்டனை பெற்றார். உழவர்களின் நலன் காக்க இராஜபாளையத்தில் மிகப்பெரிய அளவிலான மாநாடு ஒன்றை நடத்தினார்.பெண்தொழிலாளர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வேண்டும் என்று போராடினார்.

தேசியம் காத்த செம்மல் முத்துராமலிங்கத் தேவர் போல உழைப்போம்! உயர்வோம்!

நன்றி!

### 2. கப்பலோட்டிய தமிழர் : வ.உ.சிதம்பரனார்.

வணக்கம்!

கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் பற்றி சில நிமிடங்கள் பேசுகின்றேன். கேளுங்கள்.

கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் என்றெல்லாம் போற்றப்படுபவர் வ.உ.சிதம்பரனார் ஆவார். ஆங்கிலேயரை எதிர்த்து சுதேசி கப்பல் இயக்கிய பெருமைக்குரியவர் வ.உ.சிதம்பரனார். தூத்துக்குடியில் கொற்கை துறைமுகத்தில் முத்து வாணிகத்தில் நம்மவர் சிறந்திருந்தனர். கப்பல் வணிகத்தில் தமிழர் சிறந்திருந்தனர். ஆனால் ஆங்கிலேயர் ஆதிக்கத்துப் பின்னர், கப்பல்களில் ஆங்கிலக் கொடி பறந்தது. நம்மவர் கூலிகளாக அக்கப்பலில் வேலை செய்தனர். இந்நிலையை

மாற்ற பாண்டித்துரையாரைத் தலைவராகக் கொண்டு சுதேசக் கப்பல் நிறுவனத்தை வ.உ.சிதம்பரனார் உருவாக்கினார். இக்கப்பல் முதன் முதலில் கொழும்பு நோக்கிச் சென்றது. சுதேசக் கப்பல் வணிகம் வளரத் தொடங்கியது. ஆங்கிலக் கப்பல் வணிகம் வீழத்தொடங்கியது. அதனால் ஆங்கிலேயர்கள் வ.உ.சிதம்பரனாரையும் அவரத நண்பர்களையும் பயமுறுத்தினர். அதற்கெல்லாம் கவலைப்படாமல் 'வந்தே மாதரம்' என்ற முழக்கத்தை எழுப்பினார். இதனைக் கேட்ட மக்கள் விடுதலைக்கு ஆதரவாக ஊக்கம் அடைந்தனர்.

ஆங்கில அரசு வ.உ.சிதம்பரனாரைச் சிறையில் அடைத்தது. வ.உ.சிதம்பரனார் கோவைச்சிறை, கண்ணூர்ச் சிறை ஆகியவற்றில் கொடும்பணி செய்தார். அவர் உடல் சலித்தது, உள்ளம் தளரவில்லை. சிறையதிகாரி வ.உ.சிதம்பரனாரிடம் அறிவுரை கூற 'உனக்கும் உன் கவர்னருக்கும் மன்னனுக்கும் புத்தி சொல்வேன் என்றார். சிறையில் செக்கிழுத்தார். சிறையில் கைத்தோல் உரிய கடும்பணி செய்தார். செந்தமிழும் கன்னித் தமிழும் கண்ணீரைப் போக்கியது.அவரைப்போல நாட்டுக்காக உழைப்போம் என்று சொல்லி என்னுரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி!

**அறிந்து பயன்படுத்துவோம்.**

ஒரு தொடரில் மூன்று பகுதிகள் இடம்பெறும்.

அவை 1. எழுவாய், 2. பயனிலை, 3. செயப்படுபொருள்

| எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|
| ஒரு தொடரில் யார்? எது? எவை? என்னும் வினாக்களுக்கு விடையாக அமைவது எழுவாய். | ஒரு தொடரில் வினை, வினா, பெயர் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றைக் கொண்டு முடித்து வைப்பது பயனிலை. | யாரை, எதை, எவற்றை என்னும் வினாக்களுக்கு விடையாக வருவது செயப்படுபொருள். |
| **சான்று:**<br>நீலன் பாடத்தைப் படித்தான்.<br>பாரி யார்?<br>புலி ஒரு விலங்கு | **சான்று:**<br>கரிகாலன் கல்லணையைக் கட்டினான்.<br>கரிகாலன் யார்?<br>கரிகாலன் ஒரு மன்னன். | **சான்று:**<br>நான் கவிதையைப் படித்தேன்.<br>என் புத்தகத்தை எடுத்தது யார்?<br>நெல்லிக்கனியைத் தந்தவர் அதியமான். |

**பின்வரும் தொடர்களை எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எனப் பிரிக்க.**

1. வீரர்கள் நாட்டைக் காத்தனர்.
2. பொதுமக்கள் அந்நியத்துணிகளைத் தீயிட்டு எரித்தனர்.
3. கொற்கைத் துறைமுகத்திலே பாண்டியனுடைய மீனக் கொடி பறந்தது.
4. திருக்குறளை எழுதியவர் யார்?
5. கபிலர் குறிஞ்சிப்பாட்டை எழுதிய புலவர்.

| எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|
| வீரர்கள் | காத்தனர் | நாட்டைக் |
| பொதுமக்கள் | தீயிட்டு எரித்தனர் | அந்நியத் துணிகளைத் |
| பாண்டியனுடைய | மீனக்கொடி பறந்தது | கொற்கைத் துறைமுகத்திலே |
| திருக்குறளை | யார்? | எழுதியவர் |
| கபிலர் | குறிஞ்சிப்பாட்டை | எழுதிய புலவர் |

**எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் அமையும்படி ஐந்து தொடர்களை எழுதுக.**

1. கண்ணன் பாடம் படித்தான்.
2. மேரி ஓவியம் வரைந்தாள்.
3. நான் கவிதை எழுதினேன்.
4. விதை விருட்சமாக வளர்ந்தது.
5. ஆசிரியர் செய்யுளைக் கற்பித்தார்.

**கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**நான் விரும்பும் தலைவர் – பெரியார்**

**முன்னுரை:**

ஏன்? எப்படி? எதற்கு? என்ற வினாக்கள் எழுப்பி, அறிவின் வழியே சிந்தித்து முடிவெடுப்பதே பகுத்தறிவு ஆகும். அதன் தந்தை பெரியார். வெண்தாடி வேந்தர், பகுத்தறிவு பகலவன், வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம் என்றெல்லாம் அழைக்கப்பட்ட பெரியார் நான் விரும்பும் தலைவர் ஆவார்.

**இளமை:**

ஈரோடு நகரில் 1879 இல் பெரியார் பிறந்தார். தொடக்கக் கல்வியுடன் தம் படிப்பை நிறுத்திக் கொண்டு தம் தந்தையின் வணிகத் தொழிலில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

**வைக்கம் வீரர்:**

கேரளத்தில் வைக்கம் என்னும் ஊரில் தலை விரித்தாடிய தீண்டாமைக் கொடுமையை ஒழிக்கப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டார். அதனால் வைக்கம் வீரர் என்று அழைக்கப்பட்டார்.

**சுயமரியாதை இயக்கம்:**

பெரியார் காங்கிரசிலிருந்து விலகி 1925 இல் சுயமரியாதை இயக்கம் தொடங்கினார். இந்த இயக்கத்தின் வாயிலாக சாதி ஏற்றத்தாழ்வு போக்குதல், தீண்டாமை ஒழித்தல், மூடநம்பிக்கை ஒழித்தல், பெண்ணுரிமை நிலைநாட்டுதல் ஆகும்.

**பெரியார் சீரமைத்த எழுத்துகள்:**

'ஐ' என்பதை 'அய்' எனவும், 'ஔ' என்பதை 'அவ்' எனவும் சீரமைத்தார். இவற்றுக்கான மாற்று வரிவடிவத்தையும் கொண்டு வந்தார்.

**பெண்ணுரிமை போற்றியவர்:**

பெண்ணுரிமை, பெண் கல்வி, சொத்துரிமை, அரசுப்பணி, மறுமணம் ஆகியவற்றிற்காகப் பெரியார் போராடினார். பெண்கள் மாநாடுகள் பல நடத்தி பெண்களை

விழிப்படையச் செய்தார். 13.11.1938 சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில் ஈ.வே.ராவுக்குப் பெரியார் பட்டம் கொடுக்கப்பட்டது.

**கவரக் காரணம்:**

- சிக்கனம் மற்றும் எளிமையான வாழ்கை.
- சுயமரியாதை போற்றல்.
- பெண்ணுரிமை பேசுதல்.
- சாதி, மத ஏற்றத்தாழ்வுகளைக் களைதல்.
- கல்வியில் புரட்சி

– ஆகிய காரணங்களால் பெரியாரை விரும்புகின்றேன்.

**முடிவுரை:**

தொண்டு செய்து பழுத்த பழமான பெரியாரைப் போற்றுவோம். அவரின் வழி நடப்போம்.

## மொழியோடு விளையாடு

**இடைச்சொல் ‘கு’ சேர்த்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| எ.கா: வீடு சென்றான் | - வீடு+கு+சென்றான். | - வீட்டுக்குச் சென்றான். |
| 1. மாடு புல் கொடுத்தார். | - மாடு+கு+புல் கொடுத்தார். | - மாட்டுக்குப் புல் கொடுத்தார். |
| 2. பாட்டு பொருள் எழுது. | - பாட்டு+கு+பொருள் எழுது. | - பாட்டுக்குப் பொருள் எழுது. |
| 3. செடி பாய்ந்த நீர். | - செடி+கு+பாய்ந்த நீர் | - செடிக்குப் பாய்ந்த நீர் |
| 4. முல்லை தேர் தந்தான் பாரி. | - முல்லை+கு+தேர் தந்தான் பாரி. | - முல்லைக்குத் தேர் தந்தான் பாரி. |
| 5. சுவர் சாந்து பூசினாள். | - சுவர்+கு+சாந்து பூசினாள். | - சுவருக்குச் சாந்து பூசினாள். |

**இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| கண் | அழகு உண்டு | கண்ணழகு | கண்ணுண்டு |
| மண் | | மண்ணழகு | மண்ணுண்டு |
| விண் | | விண்ணழகு | விண்ணுண்டு |
| பண் | | பண்ணழகு | பண்ணுண்டு |

**அகம் என முடியும் சொற்களை எழுதுக.**

நூலகம், குறளகம், நகலகம், அச்சகம், துறைமுகம், தமிழகம்.

**கோடிட்ட இடங்களைத் தமிழ் எண் கொண்டு நிரப்புக.**

1. திருக்குறள் ௩ பால்களைக் கொண்டது.
2. எனது வயது **கக.**
3. நான் படிக்கும் வகுப்பு **எ**
4. தமிழ் இலக்கணம் **ரு** வகைப்படும்.
5. திருக்குறளில் **க௩௩** அதிகாரங்கள் உள்ளன.
6. இந்தியா **க௯௪எ** ஆம் ஆண்டு விடுதலை பெற்றது.

**குறிப்புகளைக் கொண்டு தலைவர்களின் பெயர்களைக் கட்டங்களிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தி | ரு | ப் | பூ | ர் | கு | ம | ர | ன் |
| ரு | தா | கா | ன் | க | க் | க | நா | லை |
| வ | ந் | ம | யா | ர் | டு | ட் | க | ம |
| ள் | ஜி | ரா | ஜா | யா | ர் | ட | ம் | ன |
| ளி | ஜா | ச | ர | தி | யா | பொ | மை | ன் |
| ய | ரா | ர் | னா | ர | ப | ம் | த | சி |
| ம் | இ | டி | ண் | பா | ர | ம | மி | ற |
| மை | வா | ஞ் | சி | நா | த | ன் | ழி | ப் |
| ர் | யா | சி | ச் | நா | லு | வே | ல் | பு |

1. மூதறிஞர் - இராஜாஜி
2. வீரமங்கை - வேலுநாச்சியார்
3. பாஞ்சாலங்குறிச்சி வீரன் - கட்டபொம்மன்
4. வெள்ளையரை எதிர்த்த தீரன் - சின்னமலை
5. கொடிகாத்தவர் - திருப்பூர் குமரன்
6. எளிமையின் இலக்கணம் - கக்கன்
7. தில்லையாடியின் பெருமை - வள்ளியம்மை
8. கப்பலோட்டிய தமிழர் - சிதம்பரனார்
9. பாட்டுக்கொரு புலவன் - பாரதியாார்
10. விருதுப்பட்டி வீரர் - காமராசர்
11. கள்ளுக்கடை மறியல் பெண்மணி - நாகம்மை
12. மணியாட்சியின் தியாகி - வாஞ்சிநாதன்

## கலைச்சொல் அறிவோம்

1. கதைப்பாடல் - Ballad
2. துணிவு - Courage
3. தியாகம் - Sacrifice
4. அரசியல் மேதை - Political Genius
5. பேச்சாற்றல் - Elocution
6. ஒற்றுமை - Unity
7. முழக்கம் - Slogan
8. சமத்துவம் - Equality

❖❁❖

## அலகுத் தேர்வு

### இயல் : மூன்று

**காலம் : 30 நிமிடம்** **மதிப்பெண் :20**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 4×1=4

**1. 'யாண்டு' என்ற சொல்லின் பொருள் --------.**

அ) எனது ஆ) எங்கு இ) எவ்வளவு ஈ) எது

**2. பொருத்துக.**

1. வாரணம் - அ) பாக்கு
2. பரி - ஆ) அழகு
3. சிங்காரம் - இ) குதிரை
4. கமுகு - ஈ) யானை

அ) 1-ஈ 2-இ 3-ஆ 4- அ ஆ) 1-இ 2-ஈ 3-அ 4-ஆ
இ) 1-ஆ 2-இ 3-அ 4-ஈ ஈ) 1-அ 2- ஈ 3-ஆ 4-இ

**3. பெண்தொழிலாளர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வேண்டும் என்று போராடியவர் --------.**

அ) முத்துராமலிங்கத் தேவர் ஆ) நேதாஜி
இ) திரு.வி.க. ஈ) காந்திஜி

**4. பொருந்தாத இணையைக் கண்டறிக.**

அ) கால்வாய் - இலக்கணப்போலி
ஆ) மைஞ்சு - முதற்போலி
இ) இலஞ்சி - இடைப்போலி
ஈ) முகன் - முற்றுப்போலி

**II. குறுவிடை தருக.** 3×2=6

5. தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகிறார்?

6. வீரபாண்டியகட்டபொம்மன் கதைப்பாடலில் நும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள அஃறிணை உயிர்கள் யாவை?

7. முத்துராமலிங்கர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப் பற்றி எழுதுக.

**III. சிறு விடை தருக.** 3×2=6

8. தம் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

9. முத்துராமலிங்கத் தேவருக்கு அரசு செய்த சிறப்புகள் யாவை?

**IV. விரிவான விடையளிக்க.** 1×4=4

10. வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.

❖❁❖

## மாதிரி வினாத்தாள் - தொகுத்தறி மதிப்பீடு
## ஏழாம் வகுப்பு - தமிழ்
## பருவம் - 1

**காலம் : 2.00 மணி** | **மதிப்பெண் : 60**

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 14×1=14

**அ) பொருள் எழுதுக.**

1. விரதம் -
2. கமுகு -

**ஆ) பிரித்து எழுதுக.**

3. பூட்டுங்கதவுகள்
4. யாண்டுளனோ

**இ) சேர்த்து எழுதுக.**

5. கல் + அளை
6. வாசல் + அலங்காரம்

**ஈ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

7. கரடிகளைத் தேனியிடமிருந்து காப்பாற்றுவது அதன் --------.
8. மொழிக்கு முதலில் மட்டுமே வரும் குறுக்கம் ---------.
9. யாண்டு என்னும் சொல்லின் பொருள் --------.
10. சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும் குறுக்கம் ---------.
11. பாஞ்சாலங்குறிச்சியில் நாயை விரட்டியது --------.

**உ) பொருத்துக**

| | | |
|---|---|---|
| 12. பொக்கிஷம் | - | அழகு |
| 13. விஸ்தாரம் | - | செல்வம் |
| 14. சிங்காரம் | - | பெரும்பரப்பு |
| | - | மிகுதி |

**II. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு மட்டும் விடையளிக்க.** 6×2=12

15. காந்தியக் கவிஞர் என்றழைக்கப்படக் கூடியவர் யார்? ஏன்?
16. காட்டின் பயன்களாக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?
17. வாழும் நெறி யாது?
18. தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகின்றாள்?
19. பாஞ்சாலங்குறிச்சியின் இயற்கை வளம் எத்தகையது?
20. பேச்சுமொழி என்றால் என்ன?
21. இரட்டை வழக்கு மொழி என்று எதனைக் கூறுவர்?
22. கரடி அனைத்துண்ணி என அழைக்கப்படுவது ஏன்?
23. பாரத மாதா கூட்டுறவு பண்டகசாலையை நிறுவியவர் யார்?
24. முத்துராமலிங்கத் தேவரைப் பாராட்டிப் பெரியார் கூறுவன யாவை?

தமிழ்

**III. அடிபிறழாமல் எழுதுக.** 3+2=5

25. "பச்சை........." எனத் தொடங்கி, .........கூவுமடி" என்பது வரையுள்ள சுரதாவின் கவிதைப் பாடல்.

26. 'வாய்மை' எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக.

**IV. எவையேனும் மூன்றனுக்குச் சுருக்கமாக விடையளிக்க.** 3×2=6

27. முதலெழுத்துகள் யாவை?

28. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்?

29. குற்றியலிகரம் என்றால் என்ன?

30. ஔகாரக்குறுக்கம் என்றால் என்ன?

31. தகுதி வழக்கின் வகைகள் யாவை?

**V. கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்து வரிகளில் விடையளிக்க.** 2×5=10

32. அ) நாவல் மர நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

**(அல்லது)**

ஆ) பாஞ்சாலங்குறிச்சியில் வீரத்துக்குச் சான்றாகும் நிகழ்வுகள் பற்றி எழுதுக.

33. அ) காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுக.

**(அல்லது)**

ஆ) சிறந்த தலைவருக்குரிய பண்புகள் எவை என நீங்கள் கருதுகிறீர்கள்?

**V. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளிக்க. (இரண்டு மட்டும்)** 2×5=10

34. நீவிர் கண்டு களித்த இடம் குறித்து நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

35. வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.

36. நான் விரும்பும் தலைவர் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

**VI. வட்டத்திலுள்ள எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.** 1×3=3




❖❁❖